மாதரே நீதரோ, வேதவி னோதரே
மதியோ டொரபகர், பதியென வுலகினில்
மகிமையொ டிலங்கு, மானயமு கம்மதுவே

சானிதனி சரி காரி கரி கம
சாசனிதா சனுதா, மனுதாப்பம
சஸ்ஸானி நீததனி, கின்னிகி, ரிகரிக
ரிகசரி ரிப்ப சரி ரிரிகம பதநித. (கஞ்சமலர்)

சரணங்கள்.

க. திங்கள் வதனப்ர காசரே - தினமகிமை
தங்கிட வருமுல் லாசரே
புங்கவ னருவி லுறைந்து - பூரணமதா யறைந்து
மங்குலே மையு மிழிந்து -
மந்தரங்குடை நிழற்ற, வந்தயாமு கம்மதென்று !
மாதவமே நிக மாதவமே
சானிதனி சரி காரி கரி கம
சாசனிதா சனுதா, மனுதாப்பம
சஸ்ஸானி நீததனி, கின்னிகி, ரிகரிக
ரிகசரி ரிப்ப சரி ரிரிகம பதநித. (கஞ்சமலர்)

உ. ஆரணம் விளங்கும் நாதரே - அநுதினமுங்
காரணம தான நாதரே
பூரணம தான சீரே, புண்யரே புகழின் மேரே
மாரணமில் லாத பீரே
மலித்தவர் சோடமிர்த, ஜகத்தினில் வந்தநித்த
* மாதவ மேநிக, மாதவமே
சானிதனி சரி காரி கரி கம
சாசனிதா சனுதா, மனுதாப்பம
சஸ்ஸானி நீதசனி, கின்னிரி, ரிகரிக
ரிகசரி ரிப்ப சரி ரிரிகம பதநித. (கஞ்சமலர்)

---

* அநுபல்லவியில் மாதவமே யென்கிற சீரி லிருந்து சானிதனி யென்ற சுர முடியு மளவுஞ் சரணத்தி னடிகடோறுங் கூட்டிப் படித் துக் கொள்க.

அவர்களை யாம் விரும்புகின்றனம்.

ரு. தண்டலை மக்காவி னாரே - இன மளித்த
கொண்ட லிப்துல் லர்கு மாரரே
விண்டலமெல் லாம்புகழும், வேர்தரோநீர் வேலை சூழும்
மண்டல மதனில் வாழும்

மன்னரே யெவர்களுக்கும், நன்னயம தாகவந்த
மாதவமே-திக, மூதவமே நிறை

சாதனிதனி சரி காரி கரி கம
சாசனிதா சனுதா, மனுதாப்பபம
சஸ்ஸானி ரீததனி, நின்னிநி, ரீகரிக
ரிகச்ரி ரிப்ப சரி ரிரிகம பதநித. (கஞ்சமலர்)

முற்றிற்று.

உசஉ. கீர்த்தனம்-இ-ம்-அபரூபம்-இந்துஸ்தான் மெட்டு-ஏக தாளம்.

பல்லவி.

பார்சீல் பாரீர்பங் கயத்தானைத்
தாரீர் தாரீர் தஞ்சமுற—ராஜத்
தாரீர் தாரீர் தஞ்சமுறத்.

அநுபல்லவி.

காரம தழைத்தீர், நறுமணப் புயத்தீர்
நண்பர்க்கு நேர்விட்டாய் தணித்தீர்
அ... புயத்தீர் ...
ருளீ ருளீ, நரு மதுவே. (பாசீல்பாரீர்)

சரணங்கள்.

க. நண்பர்க்குள் வாடா, தன்புற்று நாளை
நாயகன் முன்மன் றாடிடவே
பண்புற் றோருக்கும் பானுவே யெவர்க்கும்
பதியே பதியே, மையல்முகம். (பாசீல் பாரீர்)

உ. கண்ணினிற் காணக், காரணப் பொருளே
கார்கே ருதவுங் கற்பகமே
மண்மீ திருளை, மாய்த்திடுங் கிரண
மதியே, மதியே மையுலறப். (பாசீல் பாரீர்)

௩. வானுறு மதியை, வருத்துமா நிதியே
வாருறும் வத்னத யாபதியே
தேனின் மொழியே, திகழ்பா கதியே
நின்நின், நின்முக கம்மதுவே. (பாரீல் பாரீர்)

௪. மந்தர மேரா, மாமக்க லூரா
மன்னப் தில்லா மகிழுங் குமாரா
சுந்தரத் தாரா, சுகுணமை யூரா
சுடரார், சுடர்முக கம்மதுவே. (பாரீல் பாரீர்)

முற்றிற்று.

---

௨௪௩. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-சாப்பு தளம்.

பல்லவி.

ஆசை கொண்டேன்றி, யன்னமே
ஆசை கொண்டேன்றி.

அநுபல்லவி.

தேசமெங்குந் திகழ்மதி னுவெனுந்
திருநகர் புரந்திடும் நபிமீதில். (ஆசை)

சரணங்கள்.

௧. பங்கமும் பவமு மணுகா வணம்
பாதுசெய் தெவர் மீதினும் - வெகு
அங்கி காரஞ்செய் தாளு வாரென ஆவ லாகவே
சங்கை யாகவி றைஞ்சிடு வோர்களைச்
சார்ந் திருந்தவர்க் கேய்ந்திடும்படி
துங்க நாயக னேடினிரத் தேவருந்
தூதர், நாதர், மீதெப் போதினும். (ஆசை)

௨. கட்டி வைத்த பிணைக் கிணை யானெனக்
கான கத்தினில் மானை விடுத்திடக்
குட்டி யோடும் வரக்கண் டவ் வேடுவன், கோஷ்டமாகவே
மட்டில் லாதவு வகை யொடுங்கவி
மாவறைந்திசு லாமிலே யவன்
கெட்டியா யுறச் செய்திடும் நந்நபி
கீர்த்தி, யேத்திப், போற்றியே மிக, (ஆசை)

௯. பூத்தலர்ந்த பொழிலுந் தடாகமும்
புடை செறிந்திட நடுவ னுறையுங்
கீர்த்தி யுற்றமக் காவில் வாழும்பல் கிளைஞ ராகிய
கோத்தி ரத்தினி லேத்த மாய்வந்த
குறைஷி மன்னவர்க் கரச ராய்வந்த
பார்த்திப ரப்து ல்லாதந் தருளிய
புதிமு கம்மது, மதிமு கங்காண. (ஆசை)

முற்றிற்று.

உ௩௪௩. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-திரிபுடை தாளம்.

பல்லவி.

திடமொ டடிபர விடவே யருள்வீர்
திகழ வரும்நபி நாதரே - திகழ வரும் நபி நாதரே
திகழ வரும் நபி நாதரே
திடமொ டடிபர விடவே யருளு வீர்
திகழ வருநபி நாதரே.

அநுபல்லவி.

அடர வினமொடு, படருங் கடகரி
யணைய குபிரர்நெஞ், சுடையவே
கடன மிடுபரி யலிமா துலமெனும்
நபியே பரவச மடையவே
நபியே பரவச மடையவே - நபியே பரவச மடையவே
கடன மிடுபரி யலிமா துலமெனும்
நபியே பரவச மடையவே. (திடமொ)

சரணங்கள்.

௧. அடையு மடையலர், தலைவு னபுஜகில்
அமளி யொடுமிகல் பேரிலே
படியி லொருபிடி, மணலை யெறிவிடும்
பதியே குவலய மீதிலே - பதியே குவலய மீதிலே
பதியே குவலய மீதிலே
படியி லொருபிடி மணலை யெறிவிடும்
பதியே குவலய மீதிலே. (திடமொ)

உ. மகுட மணிமுடி, யாச ரிடுதிறை
மணிபொன் வரையென மிகலவே
விகடமொடு புரந் திடும்நந் நபியே யென்
வினையி லுறுபிழை யகலவே - வினையி லுறுபிழை யகலவே
வினையி லுறுபிழை யகலவே
விகடமொடு புரந்திடும்நந் நபியே யென்
வினையி லுறுபிழை யகலவே. (திடமொ)

ந. குடைவை பலபல, வடவி யெனநிரை
துவச மிடுமங்க வீதியிலே
வடவை யெனவேயின், றடரு மபுதுல்லா
வரத்தி லுறுமகு மூதரே, வரத்தி லுறுமகு மூதரே,
வரத்தி லுறுமகு மூதரே
வடவை யெனவேயின், றடரு மபுதுல்லா
வரத்தி லுறுமகு மூதரே (திடமொ)

முற்றிற்று.

உசரு. கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபக தாளம்.

பல்லவி.

தருணமிதுவே, கருணை யாகத்
தாரீ ரருள் தாரீர்.

அநுபல்லவி.

தாருந் துயர், தீருமெனைக்
காருங் கரை சேரும். (தருணம்)

சரணங்கள்.

க. ஆசை யானே, னேச மாக, அஞ்மென் னுதா
காதா நவ நீதா விறை
தாதா மகு, மூதா. (தருணம்)

உ. நாளு மலர்த் தாளிமிக, நம்பினே னானே
நானே தினந், தானே மைய,
லானே னெங்கள், கோனே. (தருணம்)

௩. காதல் கொண்டே, னுதலா, லெனைக் காருமேனைதயா
ஐயா மலர்க், கையா வருள்
செய்யாதே, னைதயா. (தருணம்)

௪. தக்க புகழ்சேர் மக்காவப் தில்லாதவப் பாலா
பாலாருண, லீலா வனு,
கூலா மன்ற, னூலா. (தருணம்)

முற்றிற்று.

---

௨௪௬. கீர்த்தனம்-இ-ம-சுருட்டி-ஆதி தாளம்.

பல்லவி.

இறையோ னருள்தூத ரிந்நேரம் - வரா
திருந்தால் மனமே, பொருந்தா தனமே.

அநுபல்லவி.

அறிவா லுயர்கோ னவர்தாழ் சிரமே
லணிந்தே னில்லையேல், திருந்தா துளமே. (இறையோ)

சரணங்கள்.

௧. அருமா மறை யோதியவா சக்ராம்
அலங்காரம தாய்வருந்தே சிகராம்
திருமா மலர்த்தா ளதையே விழியாற்
றெரியா திருந்தாற் றரியா துளமே. (இறையோ)

௨. கனமா முகில்நீ ழலிலே வருவோர்
கதிசேர நமக் கருளே புரிவோர்
அனமே நபிதா னருளா திடிலோ
அடியே னெனக் காதரவே யில்லையே. (இறையோ)

௩. எழுவா னழ்மேறி நடந் தவராம்
எழிலார் திரை யாவுங் கடந் தவராம்
தெளிவா யிறையோ னறு ஷேதிய தாள்
தெரிந்தே னில்லையேல் திருந்தா துளமே. (இறையோ)

௪. மறையோர் புகழ்மக் காவப்தால்லா
மக வாகிய மர்மகு ரூதவர் தாள்
பொறை யாயெனக்கே யருளா திருந்தாற்
பொறுக்கா தளமே யொறுக் கா தவமே. (இன்றயோ)

முற்றிற்று.

உ௬எ. கீர்த்தநம்-இ-ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

பாதமேதந் தாளுமையா
பாரின் மீதினிற் படாத
பாதமேதந் தாளு மையா.

அநுபல்லவி.

நாதனென் றெனக் கிரங்கி யாளுந்
தருமு கம்மதே, மிகும்பொற் சிதள. (பாதமே)

சரணங்கள்.

௧. அங்கையிற் புனலழைத்துக் காட்டியே
அடவியிற் செலும் பிணையை மீட்டியே
தங்கமறை நின்பாபிரை யேற்றுந்
தூய தற்பரன் றாதரே, நாதரே. (பாதமே)
௨. சேரலர் கனைச் சிதையத் தாக்கியே
ஜெக தலத்தினிற் புகழுண் டாக்கியே
ஆரல்வந் தட ரா.தா காக்கும்
அன்பரே யமரர்க, ளும்பணிந் தேத்திடும். (பாதமே)
௩. மங்கையரிற் சிறந்திடுங் கண்ணாட்டி
மதியம் ஆசியாவை மணஞ் சூட்டி
துங்க கோவின் வெள்ளாவை மீதிற்
அலங்கப் பவனிவந், திலங்கு நாதரே. (பாதமே)

ச. கன்னல் செறியுமக் காவி னூரரே
கருணை மன்னப் தில்லாகு மாரரே
இன்னல் வந் தடர்ராது காமு
மேழை யெந்தனை, யாளுமு கம்மதே. (பாதமே)

முற்றிற்று.

உசஅ. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-சாப்பு தாளம்.

பல்லவி.

மன்னு யென் றனக்குநீ ரின்னமு மிரங்காம
லிருந்தால்நா னென்ன செய்குவேன்
இறையே யுமை, நம்பினேன். (மன்னு)

அநுபல்லவி.

பன்னுளும் புகழ் சொர்க்கப், பதிவாழ்மு கம்மதுவே
என்னுளு முமைத் தேடுதே
எந்த லேகா னென்னு செய்வேன். (மன்னு)

சரணங்கள்.

க. ஆதரவு இல்லாத, பேதைபோ லானேனே
ஆதரிப்பாரு மில்லையே
அடியேனு னென்னு செய்வேன். (மன்னு)

உ. கால முழுதுஞ் செய்த, கன்ம வினையகலக்
கருணை புரிய வாருமே
காசிமோகா னென்னு செய்வேன். (மன்னு)

ந. கன்னல் செறியு மக்கத், தண்ணலை தில்லா பாலா
நன்னயந் தர வாருமே
நபியேநா னென்னு செய்வேன். (மன்னு)

முற்றிற்று.

உசகூ. கீர்த்தனம்-இ-ம்-கமாஸ்-ஆதி தாளம்.

பல்லவி.

ஜய ராஜா ஜந்திரா வுமை நம்பினேன்—ஜயரா.

அநுபல்லவி.

தாயு வஜீகரா, துங்க மனோகரா
நேயம்வைத்தே யென்னை யாள்கவே. (ஜயரா)

சரணங்கள்.

க. நான்மிக யாதிலே, நபியே நம் மீதிலே
ஆனந்த மானேனென்னை, யாள்கவே. (ஜயரா)

உ. நாயகன் றாதரே, நபிமகு மூதரே
ஆய்மலர்த் தாளிநின் றென்னை, யாள்கவே. (ஜயரா)

ங. ஆர்மக்க வூரரே, அப்துல் லாகு மாரரே
சீர்பெற வந்தே யென்னை, யாள்கவே. (ஜயரா)

முற்றிற்று.

உருல. கீர்த்தனம்-இ-ம்-ஒரடி-கமாஸ்-ஆதி தாளம்.

பல்லவி.

சிதர்மு கின்னேருந் தாதா-ஆ-ஆ-ஆ-சிகர சேக ரா
சீததா டாரு மதியா.

அநுபல்லவி

மதலூச் சரீ கஞ்சாரப் பரீ மளவன மதிஞனில் வாழ்
மகிபரீ யுற்ற மேருவே-மதசு; வேதா மறை, ஞாதா
மாத வத்தி னுதித்தே, மகிமை படைத்தே
ஈற்றிற் றனை, யுறவருள் நிறை
மாமருவே தன, குருவேபன்
ஊயிர் தொழுமப், பூங்கழல் செம் மேதயரே
புரியும்பல

பாத பமகரிகா மப்பாம கெரிசா நீபதநீ
ச்ரிகமப்பா மகரிசா ஸரிகமப்பா கமப்பதனி
ஸாதப்பமபா மகரிசா நீபதநி. (சிதர்முகின்)

சரணங்கள்.

க. கஞ்ச மிய ஸ்ரா தாரம் பாத—கஞ்ச
காமன் னேகோட்டி சோ ரானே குஞ்சீத—தஞ்ச

மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

பாத மாப்ப காமா ரீக்க சாரீ காம—கஞ்ச
கஞ்ச க்ரடுவலு தஞ்ச மெனவே தின
மிஞ்சியமா லகற்றுஞ் சனை மீதலர்—கஞ்ச

பாந்தப்ப மப்பகமப் பாமகெரி சநிதப்
பாம, தனிச்ரிகம, பாம்ப, சாதப்பம கம—கஞ்ச

காரா, கருணைமிஞ்ச, நாரா
கனிகை யலங், காரா, கதிதருகெம் பீரா

சருவவதி காரா, சரசகுண தீரா
தினமருளு, தாரா, திகழுமக மேரா, தினமு மீர—கஞ்ச

த்ரப்பா மப்ப கமப்ப தாப்பம்
மகரி சநி தாப்பம், மகமகம தாப்பம்
சாநீ தப்பம தாப்பம், சரிக்கசநி தாப்பம்
பதநி சனி தாப்பம சானீ தப்பம தாப்பம மகம கம—கஞ்ச

காதல் மிகுநம்பத கஞ்சத்தின் கலவக் கைப்பற்ற நெஞ்ச
கத்தி னவர்க்கொள்வி

தப்பூப்பத் தத்தாதா, நன்னீதனி னேதா
வெற்றீ னவர்க்கே வெகு மோட்சனன்

கரு ளமை சதா தினமு மகிமைனி னேத முற்றவா
னுலக கற்பகா நிறை

கற்புமிகும், பொற்புவண, மற்புறுமக், காவின் மன்னே
மறுவறு மபுதல்லா, பெறுமக வரும்தே—கஞ்ச

சாரி சநிதசநி தப்பம கமப்பா
தப்பம் சநிதப்பம் கமாபதநி
பப்பாப்ப தத்தாத நின்னீநி ஸஸ்ஸாசச
ரிர்ரீரி கெக்கா சநிசாநிதநி
நிதக்கரிசரி சரிசரி தப்பம்
சநி தப்பமகா மப்ரம கெரிசா
நிதக்கரீம கெப்பமத பஸ்ஸநிரி, கெக்கரிக்க
சாரிநிரி சநிதப்ப மாதப்பமா கெரிகம. (சிதர்மு)

முற்றிற்று.

௨௬௧. கீர்த்தனம்-இ-ம்-கன்னி-ஏக தாளம்.

பல்லவி.

பின்னேன் யிந்தப் படிதனிலே
பிகழைய லாகுதேடி—பின்னே.

அநுபல்லவி.

நன்னய மிகப்பெருகும், நறுமலர்க்கா மதினை
மன்னரைக் காணும லிப்போ
மன்மித வாடுதேடி. (பின்னே)

சரணங்கள்.

க. திங்களை வரவழைத்தே, திவ்வியம தாயுரைத்த
மங்களம மைநபிமேல், மால்பெருகி வாடுதேடி, (பின்னே)

௨. மஞ்சுது குடை-நிழற்று, மாதவமு கம்மது தாட்
கஞ்சமதி லேவிழுந்தே, காணமனந் தேடுதேடி. (பின்னே)

௩. பூனியங்கைத் தேயிருந்த, பாழ்க்கிணறி லேயுமிழ்ந்தே
தேன்சுவைய தாக்கிவைத்த, தேவவிதந் தேடுதேடி (பின்னே)

௪. காவனஞ் செறியு மக்காக், காவலரப் துல்லாவீன்ற
தேவனமு கம்மதுவைத், தேடிமனம் வாடு தேடி. (பின்னே)

முற்றிற்று.

---

௨௬௨. கீர்த்தனம்-இ-ம்-காபி-ரூபக தாளம்.

பல்லவி.

ராஜதசோ பிதமகா ராஜதசோ, பிதமகரா.

அநுபல்லவி.

ராஜ சரணஞ் சரணஞ் சரணம். (ராஜதசோ)

சரணங்கள்.

க. வாசமலர்க் காமதினை, வாழுமகு மூதே நாளுஞ்
சரணஞ், சரணஞ், சரணஞ், சரணம். (ராஜதசோ)

௨. அட்ட கோளம் பணியும் பாதா, ஆசடாத வேத போதா
சரணஞ், சரணஞ், சரணஞ், சரணம். (ராஜதசோ)

ரு. காரம்வரு வித்தகையா, கரந்த மாகும் விசு மெய்யா
சரணஞ், சரணஞ், சரணஞ், சரணம். (ராஜதசோ)

சு. சத்வசம்ப்ர தாய சிலா, சாதனஞ்செய் தீர்னும் பாலா
சரணஞ், சரணஞ், சரணஞ், சரணம். (ராஜதசோ)

௭. மக்கா அப்துல்லா குமாரா, மஞ்சுமு தெனாமு தாரா
சரணஞ், சரணஞ், சரணஞ், சரணம். (ராஜதசோ)

முற்றிற்று.

உகூரு. கீர்த்தனம்-இ-ம்-மத்தியமாவதி-ஆதி தாளம்.

பல்லவி.

மோக மிகுந் தின்பானேன், முகம ஹற
மோக மிகுந் தின்பானேன்—என்ன
மூளும் பவமகற்றி, யாளுமு கியித்தே
மோக மிகுந்தின் பானேன்.

அநுபல்லவி.

ஆத்மக் குருவே, யகமியக் கருவே
ஆதரித் தாளு மையா—அடியேனை
ராதரித் தாளு மையா - என்ன
யாளுங், அயாகல, வாரு மொழியுல் லாவே. (மோக)

சரணங்கள்.

க. காதலோ மீறுது காணவே தேடுது
காட்சிதந் தாளுமையா—எப்போது மூங்கள்
காட்சிதந் தாளுமையா—என்னக்
காரும், பவமகல, வாரு மொழியுல் லாவே. (மோக)

உ. கஞ்சமெனுந்திரு செஞ்சரணந் தனைக்
காண நம்பாகு தையா—எப்போது முமைக்
காண நம்பாகு தையா—எனக்
காரும், கருணைபுரிந், தாளு மொழியுல் லாவே. (மோக)

௩. சிங்கை ஜெயி லானபு சாரு பாலா
சரணந்தந் தாளுமையா—எப்போது மூங்கள்
சரணந்தந் தாளுமையா—எனைச்
சாரும், பவமகல, வாரு முகியித் தினே. (மோக)

முற்றிற்று.

௨௱௪. கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம்-ஏக தாளம்.

பல்லவி.

அன்னமென்ன செய்குவேன், ஆசைமிக மீறுது
உன்னமது சோருது, உத்தமரைத் தேடுது.

அநுபல்லவி.

தன்னல்வளஞ் சோலைசூழ், காரண மக்காவில் வாழ்
மன்னரைக் காணுமலே, மையல் தலைக் கேறுது. (அன்ன)

சரணங்கள்.

௧. இன்னமென்ன தாமதமோ, இணை மலர்ப் பாதமே
துன்னியாவ லாகுதே, யுரிகிமனம் வாடுதே
தன்னிலேமெய் சோருது சமையம்விரை வாருதி
என்னிதயந் தேடுது, இறையைவரக் காணேனே. (அன்ன)

௨. செவ்வகையி லேபடுமை, சேருவனோ நானறியேன்
நவ்வியின்பின் னேசெலும், காதர்பத மீதிலே
கவ்வைபெரி தாகுதே, காணமனந் தேடுதே
எவ்வமது தீருதே, இறையைவரக் காணேனே. (அன்ன)

௩. எள்ளல்மிக வாகுதேடி, ஏழையென்ன செய்குவேன்
உள்ளமது நோகுதே, யுத்தமரை நாடியே
கள்ளவிள் பூஞ் சோலைசூழ், காரணமக் காவில் வாழ்
வள்ளலப் துல் லாபெறு, மகுமூதைக் காணேனே. (அன்ன)

முற்றிற்று.

---

௨௫௫. கீர்த்தனம்-இ·ம்-திசுரகதி·ஏக தாளம்.

பல்லவி.

ஏனோ பராமுகமோ—என்னே ராஜா
தேனே பராமுகமோ
எந்தனி னுகுலத் தெண்ணமகற்ற வாரா.

அநுபல்லவி.

தேனுகுஞ் சோலை திருமதி னுவில்
தேனுகுஞ் சோலை 'திருமதினு—வினிற்

கோனு யுதித்தவரே, குவலயத்தில்
மானே டுரைத்தவரே,
கோதுறும் பாவக், கொடுமை யகற்ற வாரா. (தேனே)

சரணங்கள்.

௧. காதலா லோடிக் கரையுறேன் தேடிக்
காதலா லோடிக் கரையுறேன் தேடி—புமைக்

காணமல் வாடுவனே - கருமமொன்றுங்
தோணமல் வாடுவனே
கருணைவைத் தேயெனைக், காத்திரட் சிக்க வாரா. (தேனே)

௨. வெப்புறும் பாலை வெளியிற்கை யாலே
வெப்புறும் பாலை வெளியிற்கை யாலே - நல்ல

அப்பழைத் திடுங் கோவே - குபிரர் செய்த
ஒப்பழித் திடுங் கோவே
தப்பறவே யென்னைத் தாபரி யாதிருப்ப. (தேனே)

௩. பார்புகழ் மக்கப் பதியபு துல்லா
பார்புகழ் மக்கப் பதியபு துல்லா—வருள்

பால ரகுமதவே - சரசகுண
சீல ரகுமதவே
பையவென் றனைமுகம் பார்த் திரட் சிக்க வாரா. (தேனே)

முற்றிற்று.

உ௫௪. கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

சரணசெஞ் சரோருகந் தாரும்—இந்தத்
தருண மதிலென் முகம் பாரும்.

அநுபல்லவி.

அரணாவரணம் புடை யணிமதி ளுவில் வாழும்
அண்ண லாக வுதித்த, புண்ணிய மூர்த்த பாலே
அடிமை யிடம்வெகு, கடுமை யுடனெழுந்
தடரும் பவவினை, தொட ரறுத்து
அகல நயமதா, மிகல வருள்செயும்
அரும தெனுமுகம் மதுவே யனுதினம். (சரண)

சரணங்கள்.

க. அம்பரம் புகுந்தினகரனை - வர
வழைத்துவின் னுறச்செய்த பரனே
சம்பரன் தருங்கரத் தானே - இந்தச்
சமையம் வந்தருளுமென் னரனே
பம்பர மிணைபுயத், தன்பரே யென்றைக்கும்
பாசம்வைத் திடுமுங்கள், தாசனீ டேறிடப்
பகர முறுநவ, மணிமுடி யரசர்கள்
பத்தியாய்த்தின, முத்திபெடுமடி
பவனீ மதிற்றெரி, யாத காரணப்
பதியே திகழும்வின், மதியே யிருதிருச். (சரண)

உ. காளம் கிழற்றுமென்கோ மானே - இந்தக்
காசினி யோர்புகழுங் கோனே
நீளத் துயரலக்கு ளானே - வீந்தி
நீந்திக் கரந்தா ளயர்ந் தேனே
தாழு முனமுமது, தகைவங்க மதிலெனைத்
தாங்கி யுத்தமக்கரை, யாங்குவிடுத் தெப் போதாங்

மதுரவாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்.

தமனியப்பதி, புகும்விதத் தொழில்
தனில் வருத்திநன், னெறியினிற்செலத்
தகுதி யொடுகய, மிகுதி பெறவெகு
பகுதி யருளுவீர், மகுதி யேயிரு. (சரண)

௩. வண்டாரும் பொழில், மக்கத் தூரா - எங்கள்
வள்ளலப் துல்லாவின்கு மாரா
அண்டர் பரவுமலங் காரா - உல
கனைத்தும் புகழுமதி காரா
கொண்டல் குடை நிழற்று, மண்டலிக ரெனவே
குவ்வி னிடத் துதித்த, குருவேமு கம்மதுவே
குலவு மதியென், நிலவு முயர்குல
குறைவி களிலா, சியல் புரிந்திடுங்
கொற்றவா மறை, யோரனு தினமனை
மெய்த்த காரண, வாரிதி யேயிரு. (சரண)

முற்றிற்று.

---

௨௧௭. கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

எதுக்குத் தொழா திருக்கின் றாயெடா - கெட்ட தோசியே
இசு லாமில்லையோ இறைக், கென்சொல் வாயெடா.

அநுபல்லவி.

வாதுக்கோநீ யிப்படிக்கி இருக்கிறாய் - நீயும் - நீயும்
வாதையுனக் கில்லையென்று நினைக்கிறாய்
பாதல மீதினிற் பற்று மெரிக்குள்நீ
பட்டாய் பட்டாயெடா, கெட்ட துரோகியே. (எதுக்குத்)

சரணங்கள்.

௧. வெற்றிதரும் வணக்கத்தைநீ வெறுத்திட்டாய்
வெறியோடு கத்திடும்
வேசரி கட்கும்நாய் பன்றிக்குங்கீழ்ப் பட்டாய்
சுத்தமி லாதவ சுத்தத்தை யேதொட்டாய் - நீயும் - நீயும்

சோரன்கள் ளுசைத் தொடர்ந்தத ஞற்கெட்டாய்
எத்தனை யோசொல்லி யும்பிகழ்ந் தேவிட்டாய்
எப்போதும் கெட்டாயெடா, கெட்ட துரோகி. (ஏதுக்குத்)

௨. நல்லவர் சொல்லும் தேசத்தை நகைக்கிறாய்
நடுச் சபையி லேவந்து
நானுமுசி லீமென்றே, நடித் திருக்கிறாய்
வல்லவனை வணங் காம லொழிக்கிறாய் - நீயும் - நீயும்
வாதுஞ் சூதும் வகைக் கொன்றுசெய் விக்கிறாய்
எல்லைக்கு அங்கப் பரிக்கு வளர்க்கிறாய்
எப்போதும் கெட்டாயெடா, கெட்ட துரோகி. (ஏதுக்குத்)

௩. நாயகனைத் தொழா திருக்க லாகுமோ
நடு நாளிலே நபி
நாயகர்வழபா அத்துனக் காகுமோ
பேயனைப் போலே பிதற்றத் துணிந்தாயே - நீயும் - நீயும்
பேறில்லா தள்ளலிற் றள்ளப் பிறந்தாயே
ஏயும் சுவனத்துக் கேகும் வழியுனக்
கெட்டாது எட்டாதெடா, கெட்ட துரோகி. (ஏதுக்குத்)

௪. ஆருக்கும் நல்முசி லீமெனப்பெய ரிட்டாய்
அதற் கிணங்க வேசுன்னத்
தமைத்துத் தொப்பிகம் பிடத்தி லேயிட்டாய்
பேருக்கு நீஇசு லாமென் றிருக்கிறாய் - நீயும் - நீயும்
பிறப்பு பிறப்புமில் லானை மறக்கிறாய்
வாரத்துக் கைக்தொருத் தும்லணங் காவிட்டால்
வாளா லுனைவெட்டிப், பாழாக்கு வாரே நீ. (ஏதுக்குத்)

முற்றிற்று.

---

௨௫௮. கீர்த்தகம் - இ-ம் - தனாசரி - ஆதி தாளம்.

பல்லவி.

ஐயா இந்த வேளைமுகம் பாரும் பாரும்
அடியே னென்றனை யுவந்து காருங் காரும்
ஐயா இந்த வேளைமுகம் பாரும் பாரும்.

மதுரவாக்கிய கீர்த்தனா ரஞ்சிதம்.

அநுபல்லவி.

வையகத்தின் விருப்ப, வாஞ்சையொ டாதிருப்ப
ஐயம் வராது தப்ப, வழுதுவந்தே னணிப்ப
ஆதலையாகவிந்தப், பூதல மீதில்வந்த. (ஐயா)

சரணங்கள்.

௧. ஆத ரவாகவெனை யாளும், ஆளும்
அபயம் வைத்தால் மகிமை நீளும், நீளும்
பாதா ழுத்துள்ளிற் படிந்து தாழுந்; தாழும்
பாதந் தந்தா லெனக்கென் னாளும், நாளும்

பாதக மதுகோடும், பட்சமுட னேயாடுந்
தாதனுக் கேகை கூடுந், தவறது வகன் றோடும்
தாஹா வெனவுலகில், வாகாய்வந் துதித்தவென். (ஐயா)

௨. வல்லோ னுமு வந்திடு மெய்த் தூதா, தூதா
வானோர் களுமே யிறைஞ்சும் நாதா, நாதா
நல்லோர் புகழு மெய்த்தவ போதா, போதா
நாளும் நயமே தரும்நன் னீதா, நீதா

அல்ல லகற்றும் நேசா, அறிஞோர் பவவி நாசா
எல்லவர்க் கும்பிர காசா, எழின்மதி னவின் வாசா
எவ்வ மகல வுல, கெவையும் புகழவந்த. (ஐயா)

௩. சங்கச் சிகாவண்மூரின் றூடும், ஆடுஞ்
கஞ்ச ரீகங்களு மிசை பாடும், பாடுங்
கொங்கைப் பலன்'ஈண்டு நற வோடு, மோடுங்
கோகு லங்களுமே குதி போடும், போடும்

எங்கும் வளங்கள் நீட, எல்லவருங்கொண் டாட
மங்கள மணி மாட, மக்க அப் துல்லாவி சேட
மகவாயுதித்துவந்த, மருமூதே யெந்தன்மீதில். (ஐயா)

முற்றிற்று.

௨௫௬. கீர்த்தனம்-இ-ம்-கரகரப் பிரியன்-ஆதி தாளம்.

பல்லவி.

திடமா காயாவே—யானுந்
திடனேதா ஷுாவே
திடமா காயாவே.

அநுபல்லவி.

இடமீ திடையா - உரீ - தொத்தி யான்செய் ரீ ரீ ரீ
திடர் தீர்த்தெனை யாண்டருள்வீ, ரருள்வீர். (திடமா)

சரணங்கள்.

௧. நேச மூனயவன் னும்மித்ரம்,
நித்தரீ தாரா, யெட்டுக்கா வாட்டு
தேசலியா தெனைச்சிர் காட்டு, தேவ தேவா
வாசனைக் யானமெய் நூலா, நூலா
வருணைத் திரேகா, வாகா, யோகா
வாதா, மோதா - உரீ - வாரா, தீரா - உரீ-ரீ-ரீ
வாகு தருமாமகு மூதே மெய்த். (திடமா)

௨. பாத கன்யர் தத்தன் புற்றே
பத்தனுக்காகு, லத்தாவர் தீர்த்தெப்
போது சீர்வர் தெனைக்காப் பாற்றும் போதா, போதா
பாதகம் பாவையுர், தீரா, தீரா
பட்சம் வைத்தே முகம் பாராய், பாராய்
நாதா, சீதா - உரீ - தூயா, நேயா - உரீ-ரீ-ரீ
துரந்தா, வரந்தா, ராதேனே மெய்த். (திடமா)

௩. வாசனமென் கெங்கும் வீசும்
வத்தனைக் காவ, னத்துக் கோமக்கா
பர்சுவன்னப் தல்வா வீன்ற பாலா, பர்லா

நேசம்வைத் தேமுகம் பாராய், பாராய்
நித்தில ரூபா, சோபா, தீபா

நீதா,வேதா - உரீ - நிமலா, வமலா - உரீ - ரீ-ரீ-ரீ
நிகமங், தருமாமகு, மூதேமெய்த். (திடமா)

பீர் முகம்ம தவர்கள் குமாரர் - பீ

மருதூ முகம்மதுப் புலவ ரவர்கள் பாடிய தளவு.

முற்றுப் பெற்றது.

* இனி முன்னோர்கள் பாடல்க ளாகிய பதங்களும் இதனோடு சேர்த் தச்சிடப்பட் டிருக்கின்றன.

சீறுக்கீத்தனைகளி லுள்ளவைகள்.

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபக தாளம்

பல்லவி.

ஆதம் நபியைப் படைக்கமண் ணெடுத்தார் - இறைவன் கற்பனை
யருள ஜிபுரீல் மதினத் தாரடுத்தார்.

அநுபல்லவி.

ஆத ராமகு மூதைப் பாரிலே
சுபவோ ரிடத், திறங்கி நேரிலே

சுரர்பாணி கொடுத்துத் - துணிவோடு தொடுத்துச்
சொரி பூர்த்தி யெடுத்துச் - சுவனாரை யடுத்து. (ஆதம் நபியை)

சரணங்கள்.

௧. இலங்குஞ் சுவனம் புகுந்து வாசமும் - ருசியுங் குன்று
தின்ப நதிக டேறும்ப்ர காசமும்

தலங்கள் கழுவி யருட்பே ரேற்றந்
தொடர் முகம்மது நபியின் றேற்றம்
சுரர்கோ விதழ்கொண்டு - சுபசோபனம் விண்டு
சுரர்யா வர்கள் கண்டு - துடராகவே பண்டு. (ஆதம்நபியை)

உ. இகனை ரெவர்க்குஞ் சோபனங் கூறி - மெய்யூரித் தோங்க
ஹக்கன் றிருமுன் வைத்தா ரன்பேறி
மகிழும் பேரொளி மண்ணைத் திருத்தி
மனு ஆதமுது கிடத்தி விருத்தி
மனுருபமே பங்கம் - வருகா தெழில் பொங்கும்
வடிவா கின வங்கம் - மறுமைப் பிரசங்கம். (ஆதம்நபியை)

௩. வனப்புறுஞ் ஜலால் ஜமா லென்றே - யேத்திய திரு
வன்கை யாரப் படைத்தன னன்றே
கனப் பெழில்தரச் சிவன் விடுத்துக்
கவின் சென்னி மூளை யதனி லடுத்துக்
கனி மூளை மறைந்து - கருதாக மூறைந்து
கனி வானர் கிறைந்து - கவிமதன்வ யறைந்து. (ஆதம்நபியை)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சகானா-ஆதி தாளம்.

பல்லவி.

கட்டி வெயிலி லாக்கினர் - பொய் வாக்கினர்
கரத்தால் வீங்கினர், தாக்கினர்.

அநுபல்லவி.

பட்டிக ளூர்ந்தடித்துந், - திட்டி வைது பிடித்துக்
கொட்டிக்கோ லாலடித்து, - எட்டிக்கை யாலடித்துக். (கட்டி)

சரணங்கள்.

௧. கண்ணி ரொழுக ஏங்குவார் - குபிரர் வீசுங்
கரத்தடி களைத் தாங்குவார்
உண்ணிலை வகள் நீங்குவார் - கனல்சுடும்
உடல்வெக் துயிர்ப்பு நீங்குவார்

மண்ணிற் புத்தி மயங்க - மனமறு கித்தியங்கப்
புண்ணி லடி யங்கப், புலம்பி யவர்மயங்கக். (கட்டி)

௨. வெயருவு மூடலி லுதிர - நபிதின் வழி
வெறுத்தி டரமனு மூதிரக்
கயவ ரடியி லதிர, - வாய் குழறிடக்
கணவனைப் பார்த் தெதிர
உயிரா மகனைப் பார்க்க - உற்ற மகளைக் கூர்க்கப்
பயில்வாணி லுயிர் சேர்க்கப் - பதறிப் பெருமூச் சார்க்கச். ()

௩. ஆசிர் மனைவிக் கிடு - பெண்களி லில்லை
யறிவுக்கெல்லா மொரு வீடு
நேசத்தின் பயிர் நாடு - தின் பயிர்வேலி
சேரிழை படும் பாடு
பேசப் போமோ விவேகப் - பெண்ணு ளுயிரும் போக
வாசத் தினிலை யாக - மரித்தார் மூதற்று யாகக். (கட்டி)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம்-அட தாளம்.

பல்லவி.

நடந்தாள் நபியை யெடுத்து - குனியிலாரைத்
தொடந்தாள் வழியை யடுத்து.

அநுபல்லவி.

நடந்தாளே வீதிகள்க, டந்தாளே விரைந்துசென்
றடந்தாளே கருபாலைத், தொடர்ந்தாளே ஹஜிமாவும். (நட)

சரணங்கள்.

க. கருபாத்தென் கிழலை மீதிலே - நின்ற
ஹஜருல் லஸ்வதுமப் போதிலே - நேரே
முகமெதிர் வரக்கண்டு மாதிலே - நல்லாள்
முத்தினள் கைதொட்டி யாதிலே - கருபாப்
பருமதாய்வலம் வந்துநின்றது — புகழுவேயுறை புத்துமே
அகிலமீதுவி மூன்றாண்டது — தகரவேதலை தத்துமே

மகிழுமேவநல மென்று கண்டனர்
புகல அரிது முற்றுமேம்,
மகவினல்நல மூண்டெனும்படி
புகல்வரிருவர்களு மொத்துமே, (நடந்தாள்)

௨. ஒட்டகைமேல் நபியைக்கொண் டேறவே - சொறி
...ராங் கிழடும்விட்டு மாறவே - நல்ல
கட்டுரத் திளமையாய் மீறவே - நடை
காலெட்டி விரைந்துடல் தேறவே - செலக்

கெட்ட குணியினி ருந்துமுன்னெடு
பட்ட நரர்களு மொய்க்கவே
எட்டி யவர்கள் நடந்து செலும்வழி
இட்டும் வகைபல மிக்கவே

வட்ட வரைகள் விலங்கு பறவைகள்
செட்டை மரமொரு மிக்கவே
அட்ட திசைகள் ஜெயக்கொள் நந்நபி
திட்ட மெனவேசலா முரைக்கவே. (நடந்தாள்)

௩. சென்றவர் வெயிலாற் கயங்கவே - தாகஞ்
சிறக்க அவர்கள் மதி மயங்கவே - கானில்
நின்ற மரங்கள் பாறித் தயங்கவே - படு
நிழ லில்லா திடத்தி லிறங்கவே - வரு

கின்ற ஜனமனை வரு மிறங்கினர்
வென்றி ஹலிமா மடியிலே
நன்றி தருமு கம்மது மிருந்தனர்
குன்றமர மடி மூடியிலே

துன்று பணியில மலர் சொரிந்திட
மன்றல் தருமொரு கொடியிலே
அன்று மிருதிகள் கனி சொரிந்திட
மென்று பருகின ரனைவர் படியிலே. (நடந்தாள்)

முற்றிற்று.

மதுர்வாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

கீர்த்தனம்–இ–ம்– ஆனந்த பைரவி– ஆதி தாளம்.

பல்லவி.

நடந்து முகம்மதுடன், றொடர்ந்துபல் லிடங்களுங்
கடந்து தலைவர்செல் வாரே.

அநுபல்லவி.

அடர்ந்தவ னத்தடமும், படர்ந்த தடத்திடமும்
அளிபின மதுகளுண் டாடிடுஞ் சோலையும்
களியின மயில்கள்பின் றாடிடுஞ் சாலையும். (நடந்து)

சரணங்கள்.

௧. எங்கள் முகம்மது, வந்தா ரென்ப தறிந்து
எங்கும் புசித்து மின்னி, வேரூன்றிப் பெருத்துப்
பங்கு படர்ந்தடை, பொதிந்தது குருத்துப்
பசியசெட் டிலையிட்டுப், பூத்துக்காய் பெருத்து

அங்கு காய்நுனி கறுத்தது வெளுத்து
அமுதுறச் சிவந்து தேன்கிழு, கொழுத்துச்
சங்கையாய்க் கதலி விரிதலை யிழுத்துத்
தணிக் திறைஞ்சிக் குலை சாய்த்தது பழுத்துத்

தாக்கிளஞ் சினைப் பலவிற், காய்க்குமுட் புறக்கனிகள்
நோக்கி நபியைக் கருதித், தூக்கிவைத் திருப்ப தொத்த

தாயக மாகிய, நாயக மாம்நபி
தாங்களு மொட்டைப்பரிக்கு
ளசங்களும் விரைந்துசென்று. (நடந்து)

௨. வடிவெளிற் பிரகாச முகம்மதைத் தெரிந்து
மாந்தருக்கள் தழைந்து, மா மலர் சொரிந்து
படிகொம்பு தொறுங் காய்த்துத், தேன்கனிகள் சரிந்து
பரிந் தசைவது எம்மைப் பருகியே பரிந்து

நடவு மென்றது அழைத்தபோ லிருக்கும்
நறவு பாளைகள் விரித்தலர் சரிக்கும்
தடமுறுங் குலை சுமந்தது விரிக்கும்
தலைப்பைம் பூகமும் நபிக் கலங் கரிக்கும்.

தாதுக ளூதிர்வ திறை, தூதர்நபி சரணிடை
பித மலரைக் ககனர், போதவே சொரித லெந்த்
தானிசை யுந்திரு, மேனிகரந்தங்
தாவ வளர் கமழ்ந்தோர்
காவதத் தொலைமுன் செல. (நடந்து)

௩. முத்தொளிக ளணி வானக மென விசய
முதிர்கரும் பாட்டுசாற்ப்புகை விஷய
சுற்றிய சோலைமேற் றவழ்வது நச்யச்
சொரிமுகிற் படலம்போற் றேற்றியே யசைய
வுற்ற கோட்டுமலர் கொடிமலர் சொரிய
வுதக மாமலர்கள் நிலமலர் சரியுந்
துத்து மான் மதங்கள் கமழ்தர வரிய
துரைமு கம்மதுமெய் மான்மதம் விரியத்
தாவு குவளை சேதாம்பல், காவிவெண் கமல வன்னத்
தாவு வடம் போன்ற தென்ன, வாவியிருந் திசைந்திடத்
அய நறுஞ்செந்நெல், சாய வணங்கின
சூடு மலர்க் குழலார்நீ, ராடுவா வியுங் கடந்து. (நடந்து)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-சாப்பு தாளம்.

பல்லவி.

கனவு கண்டக மகிழ்வு பெற்றாரே—நபியை கதிஜா
கண்டிடா மனத் துயர முற்றாரே.

அநுபல்லவி.

நினைவு டன்மணி யிழை திருத்திலர்
நிதிப்பொன் மஞ்சத்தில், விழி பொருத்திலர்
கனக வாய்கொடு அமு தருத்திலர்
கங்கை மணிவளை, செங்கை தரித்திலர். (கனவு)

சரணங்கள்.

௧. ஓதிக் குழலைக் கோதியு முடியார் - பஞ்சணை பொருந்திலர்
உலவு செம்பதங், குலவுமென் னடையார்
வேத ராக கீதமும் படியார் - பொன்னணி தரித்திலர்
விமுதக் கனியு மமுதமுங் குடியார்
சோதி மென்பத்த் தணிகள் போடார்
சொரியு மாலையைக் குழலிற் சூடார்
சாதிக் கிள்ளையின் மொழியை நாடார்
சப்ர மஞ்சப்பொன் னூசலாடார். (கனவு)

௨. சந்த கரந்த சுகந்தமும் பூசார் - மெய்கலை யிகலார்
சாரும் வீரப்பன் னீருமே பூசார்
விந்தை யிதழ்க னிந்திடப் பேசார் - மைவிழியிற் றீட்டிலர்
வேறெவ ரையுஞ், சிறியு மேசார்
பந்து அம்மனை கரத்தி லெடுக்கார்
பாகத் திருந்ததை, யாகத் தெடுக்கார்
கந்தஞ் செறி நீ ராடை யுடுக்கார்
கவி யிசைக்குச்சொற், செவிகொ டுக்கார். (கனவு)

௩. முகில் குழற்கரு மகிற்புகை மூட்டார் - நடைக்க மருந்திலர்
மூந்த நுதலிற் சிந்தூரந் திட்டார்
சகிகள் தம்வயின், கீதமுங் காட்டார்-குவைவளர் தா மன்னெனுந்
தந்தை பாலினு, முந்தவு மாட்டார்
அரும துந்திருப் பவனி வரவும்
அருங் கனவுற வவனைத் தீரவும்
ககனிறை மதி மடியிற் போதவும்
கண்ட நாள்முதற் காதல் மீறவும்.

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம்-ஏக தாளம்.

பல்லவி.

ஆமென் றுரும் சாமுன்குவை
வீ தான்சொல ஓதும் பயன்
ஆகங் கொளுவா, ரொழுவ
ரசித்தா லிபுமுன் செலுவார், சொலுவாரே.

அநுபல்லவி.

கோமன் குவை, லீ துங்கலி. யானாஞ்செய்; லாமென்றிடு
கூறும்ம்மதின், வாறுஞ் சொலவே
குலத் தார்களை, யபித்தாலிபு
குறித்தே வர்;வழைத்தே சொல்வர்., (ஆமென்)

சரணங்கள்.

௧. மணந் தான்புரி, தினந் தானின
தெனுந் தான்பலர், மனந்தான் றெரி
வதற்கேகுவ், மெனத்தா னுரை
கொடுத்தார் திற, லபித்தாலிபு
வயஹாரிது, அப்பா சடல்
சபைஅருதம், ஹம்சாமுதல்
மலர்த் தோரணத், தெருப் பாதையின்
மருப் பூதர புயத்தோர்களும்
வருவாருகள், குவைவீதர
கிருகா தறி, குவதா லெதிர்
வரவேகுறை, விகள் யாரையும்
மணையேகொடு, புகீடொவி
மாமணிமுத், தாலிழைத்த, வாசனத்தின், மேலிருத்தி
மாதலைவர்க், கோதனேக, மீசிறப்பெல், லாநடத்த. (ஆமென்)

௨. அறந் தங்கரு, மதும் பைந்தொடி
மனஞ் சிந்தையி, லுணர்ந் தென்பதி
அடைந்தி ருள, பெரும் பூருவ
தவந்தா னென, மனன் கூறிட
அபீத்தாலிபு, களித்தார் தம
தகத்தே யெம, திகத்தா னவர்
அருட் பாக்கியம், விளைத்தே மென
வுரைத்தார் வரு, திறத்தோர் களும்
அடுத்தாரிரு, புறத்தார்கள்சம், மதித்தா ரென், நகைத்தார் மட
வனப்பேதையை, நயிக்கே மண, முடிப்போமென, வினத்தாமெனும்
அமினமுக்குச், சிதனப்பொன், னீதெனச்சொற், றார் தெளித்து
அபிலப்பா, கோடுகற்பூ, ராதிமெச்சை, யேகொடுப்ப. (ஆமென்)

௩. வலச் செங்கர, மடித்தின்புற
மூதற் றிங்களில், முகூர்த்தஞ் செய
மகிழ்வர்மென், வனைவோர் சொல
குவலி துமன், னலமா மென
மனப்பூரண், முறப்போ மென
மெலத்தரன் மொழி, கொடுத்தர் ருரை
மகத்தாகிய, வபித்தாலிபு
மினத்தா ரொடு, தெருப்போ யவர்
மணக் கேகுவர், மணக்கோலம
தணக்காவலர், தமக்கோதியே
மதித்தே பன்ற, யடிப்போர்களை
யழைத்தே ஜய, மிகுத்தேறிய
மாதலமகீ, காநகரின், வீதிகளிற், போயவனவை
மாமுரச, டிக்கவென, வேயபித்தா, லீப்மொழிய. (ஆமென்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம-சுருட்டி-ஆதி தாளம்.

பல்லவி.

மானுரும் வந்துரைப் பாரே—நபி
மகுமூதைப் புகழ் வாரே.

அநுபல்லவி.

தானுடு மயிலோ, தாஞேபூங் குயிலோ
மீனுனது மயிலோ, விழியார்க் கருள் மகயிலோ. (மானுரும்)

சரணங்கள்.

க. சந்த்ர முகங் கண்டாற் றுமரை பூக்கும்
தனிமுத லுண்மையென்று சாற்றிய நாக்கும்
சுந்தரந் தவழ்ந் திலங்கிய மணி மூக்குந்
துயர் தரித்திர மகற்றிய வருமேனைக்குந்
தந்திடு மறையமு துங்கனி வாக்குந்
தானதைக் கேட்கிற் பவங்களை நீக்கும்
இந்த முகம்மது யாவர்க்கு மேர்க்கும்
ஏன்றிவர் நாயினந் கொடிஹுனி மாக்கும். (மானுரும்).

௨. குங்கும மாலிகை, தங்கிய தோளுங்
குவலய மீதுப, டாத்திரு தாளும்
அங்க மெல்லா, மான்ம தம்மணஞ் சூழும்
ஆசலி னுலிவர், தானுல் கேழும்

எங்கணு மொருகுடை யரசா சாளும்
இந்தமு கம்மது நபிசொல்லை காளுஞ்
சங்கை செய்வோர்சு வர்க்கங்களில் வாழுந்
தார்குழலீர் ஹலி மாவேசீர் கேளும். (மானுரும்)

௩. துன்பமுங் கவலையும், பீடையுந் தீருந்
துயர்தருந் தீவினை, யும்மயல் சாரும்
அன்புறும் பொறையறி, வுந்தவஞ் சேரும்
அண்டலர் பகையடரி, தருள்கூரும்

பின்பலனுஞ்செல்வ முந்தரு சீரும்
பேருலகில் நபிமு கம்மதை யாரும்
அன்புட னெருப்கல் காண்கிலோ பாரும்
ஆகுமிப் படியென் ஞரனை வோரும். (யானுரும்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஆதி தாளம்.

பல்லவி

இந்தப் புவியிலொரு மதியே கிளியே
யியம்பக் கேளு மின்னரசே.

அநுபல்லவி.

சந்தனப் புயனப்துல் லாவுயிர்த் துணையின்ற
கலமுகம் மதுமக இவருக்கோர் மணஞ்செய்யத்

தந்த மிடமதில், வந்த முமதுது
சிந்தை மகிழ்வினி, யெந் விதமோசொல்

தகும் பொன்சிறி, தகங் கொண்டுள
மகிழ்ந்துங் கட, லுவந்துந் தர. (இந்தப்)

மதுரவாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்.

சரணங்கள்.

௧. சிறிது முதல்கள் தாரும் - தேசிக ருடன்
சென்றுஷாம் நக ரூரும் - வாணிபஞ் செய்து
மற்றிங் கடைவன் பாரும் - அருள்வீ ரலோர்
வதுவை முடியும் நீரும்
பெருமுத லிலையெனிற், பொருதி யதுநன் இறன்றாய்,
பேசு மொழியுமன, நேச வழியும் நோக்கிப்
பிஞ்சி விழிமயில், கஞ்ச மலர்முக
முஞ்செறிதாமுன், னெஞ்சி னினைவுகளு
பெறும் புலனுளம், நிறைந் திதுவென
நறுங் கனியிதழ், திறந் துரைசெய. (இந்தப்)

௨. விடலை சகின மாதும் - நோக்கி யென்பொருள்
மேனுறும் பொரு ளோதும் - படி யெளியாள்
நடப்ப தருள்மின் னீதும் - உறுதி யென்னை
நவிலுஞ்சொல் லிரு காதும்
அடர மனமகிழ்ச்சி, தொடரப் புயமும் விம்ம
அரியோனின் னிடம்பெறும், பொருளின்னைத் தருவாளென்
றன்பி னினியசொல், லின்பொ டுரைசெய்து
துன் பகலமுக, பென்பிரச மல
ரலர்ந் திருதய, மலர்ந் திடவுமந்
நலந் திகழ்தர, இலந் தனி லிருந். (இந்தப்)

௩. கடுகு வெண் மணி போலும் - விரைகொள் சோறுங்
கனிநறுந் தேன் பாலும் - அறு சுவையுட்
படுகறி களு மேலும் - ரச வருக்கப்
பழவகை கனி னாலும்
இடும் விருந் திருவர்க்கு, மடுகன் மொழிகள் கூறி
யிட்டரி யாசன, மட்டில்மன் னாரைவைத்து
இன்சொல்மதுரந, மஞ்சொல்முகம
னிதஞ்சொலியல், நிறைஞ்சி மறைபட
இளங் கொடி மயி, லிளங் குளிர்தர
விளங் கெதிர்மொழி, வழங்குவர் நெடும். (இந்தப்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-திரிபுடை தாளம்.

பல்லவி.

மதியை நிதியை, மயிலைக் குயிலைக், கதிஜா மானைப்
பெண் ணாயகத்தை
மணியைப் பணியைக் கற்பின்
மாதைப் பேதைச் செழுந் தேனை.

அநுபல்லவி.

பதியுல கார்க்கருமைத் தாயைத்—திருவாழ்
பார்த்திபன் குவைலி தா சேயைப்
பத்தினித் தீயைத், தித்திகொள் வேயைப்
பதமல ரிணையர், பரவி நறைகொள் புனல்
புதிதை மலர்முடிமென், னவிர்க மதின்விடுவர்
பாராட்டி னார், செங்கையால், சீராட்டி னார்மிகுதி
சீராட்டி னார், புவியின், பேராட்டினார் நம்பி ராட்டி
பதுமத் திருமக, ளெனவற் புதமுறு
பாக்கிய ரானவர், பூங்குழல் நீவ. (மதியை)

சரணங்கள்.

௧. வார்குழ லாக்குழைக், காரகிற் புகைக்கன மூட்டி
மலர்ப் பூவைக் காவை
மாதர்கள் நாயகி, பாக்கிய காரணி
மன்னவர் கன்னிகையெ, னுங்குல திங்களைத்
தாதர்கள் கோன்மகு, மூதரின் மாமணைச்
சுந்தர ரூபச, வுந்தர மாது
வார்குழ லாக்குழைக், காரகிற் புகைக்கன மூட்டி
அயிலோ கயலோ
மஞ்சனத் திருவிழிக், கஞ்சனைக் கருமையுந் தீட்டி
கதிரோ யுமிழுள்
சீர்தரு மேனி யெங்கும், பேர்நறைப் பரிமள மூட்டி
அசமின் கொடியைத்
திங்கட் கலையுடுத்த, பொங்கொளி பேழ்ற் றுகிலுஞ் சூட்டி- அறல்
மைக்கருமி, ருட்குலம, னைத்தையும, ழைத்தடர்

வைத்ததொப், பெனக்குழல்வி, ரித்திருக்கி, கற்பரிம
ளத்தைப்ப்பி, விற்பலம, ணிப்பணிப்பி, ஸ்றத்திரும
தித்திடப்ப, தித்திருத்தி, வட்டமிட்டி, புட்பம்வைத்த
மாலைத் திரளழகச், சோலைத் திரளிற் கட்டி
வானுத, விளம்பிறை, தோனுப்பொற், சுட்டிநட்டி
மலரெனு, மிருகுழை, யதின்வெயின், னொளிவிடு
மணிபொற், பணிவகை, யணியக், கவின்வளர்
வாய்ந்த பசுங்கிளி, யேய்ந்தபொன் மாதா. (மதியை)

௨. பணிலச் செங் களுத்தின் மணிமுத்து ஆபரணந் தூக்கிப்
பசுந் தேயும் வேயும்
பாரிடை, னேர்பொரு, வதிரு, தோளணி
பைங்கன, கங்கள்து, லங்கவி, லங்கிய
வொளி, மாமணி, மாலைகள், தாவடம்
இத்தொளி, வீசிகி, றைந்தன, போலப்
பணிலச் செங் களுத்தின் மணிமுத்து ஆபரணந் தூக்கி
யாழ் வீணை போலவே
பன்னுமுன் கரத்திடை, மின்னு மணிவளைகள் தாக்கி
விர லாழி யிட்டுக்
கண்ணி னொளி கவர் கதிர்மணி மேகலைகள்பல வீக்கிச்
சதங்கை தண்டைகள்
காலிற் சிலம்புபாத, சாலக் கிண்கிணியிட்டு நோக்கி விரல்
பத்துநற்சு, டர்க்க நித்து, ஙர்க்கொடித்த, டத்தின், னிவச்ரப்
பச்சைமுத்து, விற்செகப்பு, வைத்தழுத்தி, டச்சமைத்த
பற்பணியிட், டுத்திருத்திப், பொற்கமலப், புஷ்பமொப்ப
செய்த்திருப்ப, தத்தலர்த்த, கத்தெழுத்து, றப்பெரித்து
பாரில் கரந்தழும்பன், னீரிற் கலந்து வீசிப்
பாதாதி கேசம்வரை, மாதர்சொ ரிந்து பூசிப்
பணிவிடை செயவென, இருபுற மரிவையர்
பணியச் செழும்மணி, யணியக் கவின்வளர்
பாங்கிற்கண் ணேறுகள், நீங்கஆ லாத்த. (மதியை)

௩. சாந்தம் கலைவை தட்டி, லேந்தி மின்னார்களிரு பாலும்
வர ஈாடிக் கூடிச்

சாமரம் வீசுவர், சோமணி லசவெனத்
தங்கமி, றங்கள்து, லங்கிய, அங்கமின்
ஏந்திழையார்; பாகிலை பாளிதமும்
எடுத்து மகிழ்ந்துகொ, டுத்தவர் நிற்கச்
சாந்தங் கலவை தட்டி, லேந்திமின் னார்களிரு பாலும்
வரப் பூண் சொரிந்த
தமனியக் கோடிகங்கள், அமைதரத் தாங்கினார்கை, யாலும்
பன்னீர் மாதர் வீச
மாந்தர் குலக்கொழுந்தைப், பூந்தடம் வாழன்னத்தைப் போலும்
மறை யாளிகன்னில்
மாமது ரத்தமுதை, ஆமறி வாமணியை மேலும் - பெண்கள்
சத்தியைச்சொ, லித்துதித்து, உப்பரிக்கை, யிற் செறித்த
தட்டு மெத்தை, யிற்பரத்தி, யிட்ட புட்ப, மொய்த் தடத்திற்
சற்குணப்பொன், முத்தைமற்றோர், பொற்றொடிக்கை தொட்டழை
சப்பிரத்த, குத்தினுற்ற, மற்கடுத் தெர்த், திருத்தல் [த்துச்
சாதிப் பசும்பொன்மலை, மீதில் மணிச் சுடர்போற்
றுவு மறிவுநிழல், மேவுஞ் சகிக்கிளிபோற்
றருமுகம் மதினிட, மகிழ்கதி ஜாவுறையத்
தருநற் ககனர்கள், மகிழப் புகழ்வர்கள்
தாங்கதி செல்வமு, மோங்கிட அன்று. (மதியை)

முற்றிற்று.

கீர்த்தனம் ௩-ம் சங்கராபரணம் - அடதாள சாப்பு.

பல்லவி.

மதியை யழைத்திடவே வேணும் — அந்த
வாறெப் படியோ கேளுங் காணும்.

அநுபல்லவி.

துதியைப் பொருந் திறைவன்
றாதரொன் றுற் குணபாற்
சுந்தர மாகிய், சந்திர னனது
அந்தர வீதினில், வந்திட வேணும். (மதியை)

மதுரவாக்கிய கீர்த்தனா ரஞ்சிதம்.

சரணங்கள்.

க. வானின் முழுமதியாய் வரவேணும் - வந்து
வைத்துல்லா மிசைநேர்தோன் றிடவேணும் - தோன்றித்
தாவிலர் தனிசிறங் கிடவேணும் - எழு
தரம்பைத் துல்லாவலம் வரவேணும்
எனமகா வுட்புகுந், திறைவனைச் சிரஞ் சாய்த்து
ஆன தவத்தின் மனத் தன்புடன் றொழ வேணும்
அடர்ந்தொளிர் சோமனு, டன்றிரு வாயில்
கடந்தெதிர் நேரில் நடந்திட வேணும். (மதியை)

உ. கணங்கொள் மாந்தரி னடு வரவேணும் - உமைக்
கண்டெதிர்ந்து முனம்நின் றிட வேணும் - நின்று
இணங்கினன் மொழிகள்பே சிடவேணும் - பேசல்
இறை யொருவனென் றிசைத் திட வேணும்
வணங்கு மிறைதா. தென்றும், வரிசை நபிநீ ரென்றும்
குணங்கொ ளறபுச் சொல்லாற், கூறிநின் றிடவேணும்
கூறிடு மொழியல், வேறிடும் நரர் செவி
மீறிட வறியவர், தேறிட வேணும். (மதியை)

௩. உமது திருச்சட்டை யுட் புகவேணும் - புகுந்
தோர்மதி யிர்பிளவா கிடவேணும் - வலக்
கமலக் கரச் சட்டையில் வரவேணும் - இடக்
கரச்சட் டையி லோர்பங்காய் வரவேணும்
அமுத கதிர் மதியின் னம்புவி யுக்துலங்கத்
தமதுமுன் ரண்டு மெதிர் தானின்றோர் பங்கெழுவான்
தங்கிட வேகவோர், பங்கது வானது
செங்கதிர் போமிட, மங்கதி னேக. (மதியை)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி-அடதாள சாப்பு.

பல்லவி.

ஒருகரந் தடியூன்றினன்—ஊன்றிவந்து
திருநபி முனந் தோன்றினன்.

அநுபல்லவி.

கருகுடற் குறை கூனுங், காதடைப் புடன்முனுங்
காலிணைகள் தள்ளாடக், கோல மனதுள் ளாட
வருபவனு மொழி குழறி யொருசலாம்
மகிழ்வி னபிமுகம், பதுமு னலிலவே. (ஒருகரம்)

சரணங்கள்.

௧. வள்ளல் நபியு மெள்ளவே - அவனை நோக்கி
மறுத்தும் பிரத்தி விள்ளவே
கள்ள விபுலிசினத், துள்ளவ னொருதய
வெள்ள லொடுவந் தானென், றுள்ளத் திடையறிந்து
கருதி யொருவயி, னிருமி னெனவெகு
கருணை மொழிவர, அவையி னுறை தர. (ஒருகரம்)

௨. இருந்தவன் றனையூருந் - தந்தைநின் பேரும்
இசையென நபி யுயினருந்
திருந்த நவிலக் கண்டு, அருந்தவ நபிப்பட்டம்
பொருந்தி லெவர் கருத்துந், தெரிந்திடு மிவணிடை
திவழும் நபிகளி, னரசர் பினில்வரும்
ஜெய நபியுமிவ, ரெனவும் நினைபவே. (ஒருகரம்)

௩. முநியோனிப் படியெண்ணியே - சொல்வன் விண்மண்ணு
முழுது மொருகோல் நண்ணியே
அதிர்பெரும் படையொடு, பெதிரல ரிலையென
முதிரா சபுரிந்த, சதிய னிபுலீ சின்ற
அருமை மகவென, வருமி லாக்கிசு
அரசன் மகவுமோர், காயு மாமென. (ஒருகரம்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ௰ம்-கேதார கௌளம்-திரிபுடை தாளம்.

பல்லவி.

காமாவு மோதிடுவான் சீமா னிற் சூலே
காசினியெல் லாம்புரந்தேன், பேசுமென் கோலாலே.

அநுபல்லவி.

மாமா கில முக்காலம், நாமாக வேயினாங்க
வாழ்ந் திருந்தேன் ராஜர்களுந்
தாழ்ந்துபணிந், தேவணைந்த
மற்றும் படைதிரண், டொத்து செருங்கிடப்
பற்றல ரஞ்சிட, முற்றுந் தவிசிடைக். (காமாவும்)

சரணங்கள்.

௧. நீண்ட புவி யடங்கலும்யா, ளுண்டுவருங் காலம்
சேர்தவங்கள் குணமிரக்கஞ், சார் நலங்கள் சீலம்
தாண்டஇகழ்ந் தேபழிகள், மீண்டும்பவ கோலந்
தன்னையனே கங்கள்செய்தே, னன்னதுவே மூலம்
தூண்டுகுலத் தீவினைகள், கூண்டுசெய்தேன் பாதகங்கள்
துன்பவினை யென்னிடத்திற், பின்புவரு மென்றறியேன்
துட்டனும் யான்றனி, சிட்டர சாண்டனன்
னீட்டியென் பாலொரு, சிட்டன்வந் தானெனக். (காமாவும்)

௨. வந்தொருவ னுடல்மனமும், நொந்தொடுங்க நோக்கி
வாவென்றெனை வப்புறுத்திக், கூவிமுன்னி லாக்கி
எந்தன்பதப் பெருவிரலி, ரண்டுந்தொட ராக்கி
இறுகக்கட்டி யகன்றனன்யான், மறுகிடவே வீக்கிச்
சொந்தவிரு தாட்பிடிப்பை, யுந்திடவே கழட்டவராச்
சரிகையினு லறுத்தவிழ்த்தே, தொருதினப்போ லவுமவிழாச்
சுற்றிநின் றோர்கையிற், கத்திகொ டுத்தும்பின்
சிற்றுளி யூன்றியுஞ், சற்று மறுதெனக். (காமாவும்)

௩. நெகிழ விட்டுர் தினையளவும், நெகிழிலையாற் றயங்கி
நெட்டுயிர்ப்பின் வருத்தமுறக், கட்டிறனு மயங்கி
புகழ் பவங்கள் திகழ்கயிறுய்த், திகழ்வதெனத் தியங்கி
பூழ்விதியின் பயனென, வுலகாழ் பலனென் றியங்கி
மக பெரியோர் முனிவோரென, மிக நெடுநாட் டுயர முற்றேன்
மதிவிலியேன் கிடந்தனனீழ், பதியரசு மிழந்தென்னது
வங்கிஷத் துள்ளவர், தங்க ளிடஞ்சொல,
வஞ்சவ ரும்பிவ்வி, லங்கை நெகிழ்த்திலர். (காமாவும்)

முற்றிற்று.

கீர்த்தனம்-ம்-இ-ஆனந்த பைரவி-திரிபுடை தாளம்.

பல்லவி.

யாறசூல்நபி தூதன் யானெடா - அபூ ஜகிலே கேளெடா
யானிபுன் மஷ்ஊதென் பேரெடா.

அநுபல்லவி.

வீறுந் தருத்து மிழந்து களத்தில்
ஊறு பட்டுநீ விழுந்து கிடக்க
மேன்மையோ, நீசெய்த, தீமையோ வுன்னுட
விதியோ பொல்லாத, மதியோ சொல்லெடா. (யாறசூல்)

சரணங்கள்.

௧. நல்ல குடியிற் பிறந்து வளர்ந் தாயே - அபூஜகிலே கேளெடா
நாவினாற் சொல்லுங்கலி மாஇழந் தாயே
தொல்லை யூறுபட் டுடம்பு தளர்ந் தாயே- அபூ ஜகிலே கேளெடா
துன்பம் பெறவாய், வம்பு ஆளந் தாயே
வல்லவன் றிரு நபிபொற் பாதத்தை
வந்து வணங்கிடி, லெந்த வினைகளும்
மாறுமே மனந், தேறுமே புக
ழேறுமே யருள், மீறுமே கேளெடா. (யாறசூல்)

உ. இனிமேலாயினு மனதைத் திருத்தெடா-அபூ ஜகிலே கேளெடா
இருப்பதுமிறப் பதுமுன் கருத்தெடா
கனியுங் கலிமா மனதிற் பொருத்தெடா-அபூ ஜகிலே கேளெடா
கள்ளத் தனத்தை, மெள்ளத் துரத்தெடா

தனியேகிடந்து, விடைசா லெற்றிந்து
சாமுன்னே யுயிர், போமுன்னே வந்து

தன்னிந்துக்கோ பதம், பணிந்துக்கோ மனந்
துணிந்துக்கோ தீனே, யணிந்துக்கோ வெடா. (யாறசூல்)

௩. சொன்ன மொழியைத் தவிர்ந்து கடவாதே-அபூ ஜகிலே கேளெ
சூட்ச முயிர்விட் டழிந்து கிடவாதே [டா
சன்னை சொன்னது மினிமேல் நடவாதே-அபூ ஜகிலே கேளடா
தன்னை மறுப்பேன் றரையைத் தடவாதே

மன்னரிறசூல், சொன்ன கற்பனை
மறுப்பையேல்தலை, யறுப்பன் கேளெடா

மதியன் போர்வையூர், பதிபோக்கு மூசா
சுதன்செய்துமு கம்மதுக் கருள்செய்யும். (யாறசூல்)

முற்றிற்று.

செய்னுத்தீன் புலவரவர்கள்

பாடியபதங்கள்.

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

தந்தா துளந் தேறுஞ்
சந்தத மேமிக் கன்பேறு - மிஞ்சித்
தன்மூக்குமெடி யன்னமே.

அநுபல்லவி.

வந்தன விநோதர் வாழு, மதினாவின் மன்னர் நாளும்
வானோர் பணிவுந்துதி மிகுஞ்சீர் பாதந். (தந்தால்)

சரணங்கள்.

க. சோதி காலுமோர் வெண் முத்துட் கிடங்
தூதென்று சொல்லிப் ரீதராம்
தேநற்றிறண் டிகாந்த மட்டும்
வீசிய மிர்க மதராம்
பூதி பால்படிந்து, சுத்தளிக்கா தெம்மோ
நீடூழி வாழ்கநற் போதகா யகராம்
பொற்பிற் பிறந்த மிகுமூதெம் மையர்தம் ரீ
பூது நாண்மலர் போன்றொளிர் சுத்த சரண். (டந்தால்)

௨. பூவல யத்தின் மெய் கிழற்றுப்
புண்ணிய கன வரத்தார்
புறம் பேர்ற்றுச் சதுரங்கம் வந்திடிற்
புகைபெழு மயிற் கரத்தார்
குவ்வேழ் கிண்ணேழ் தோற்ற மாவேழ் பௌவ மற்றுங்
கோவே யம்மைக்குமுன், ஞெவென்ற சொல்லினுற்
கொழுஞ் சுடர்வீசுந் தரள ரூபமே ரீ
கொண்டோர் பதுமத்தா ளருட்கண்ணுல் நோக்கித். (தந்தா)

௩. சோலைதொறு மிளந் தெண்டல் வீசுந்
தாய்மக்கத் தண்ண லபுதல்லா
தோண்றன் மாபார முத்ரைச்
சோதிசெய் புய வல்லார்
பாலிற் றேனில்மிக்கமுப், பழத்தி னின்ப
மேலான வேதன்மெய்த் தாதர், நீதர்க்னி
பங்கத் துடர்தீர் நமிமா ரணைவர்க்கும் ரீ
பதியரு மூதர் மீதிற் பத்தர் சரண். (டந்தால்)

முற்றிற்று.

௩௩௰ மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மடமாதே யதிமோகம்; மிகைக்கு தேகம்
மிடமோதா பத யூகம்.

அநுபல்லவி.

தடவாவி வாளைகள், குடவாய்முட் பழம்பிதிர்
படவர்வு முதுமக்கத், திடைவாகைக் கோவண்டை, (மடமா)

சரணங்கள்.

க. மறல் கலவா வுளப் போதையா - மிர்க
மதங்கமழ் வடிவணுற் றுரையா - சுரத்தில்
அறல்கொங் கெழுவா றந்தக் கோதையா - புயமண்
ணறத்துறை விளக்கும்நற் பாதையா

திறல்க ளுத்தெண், டிரைக ளழறெழத்
திகிரிமண் டிடர் சிதறத்,
திரிகடம் மடை பதி முரண்டகத், திசை கஜங்களுங் கதறக்
கா பணித்தலை, செறகெறென குபிர் கன தனகில பதறக்
கதி யைந்தும் புரி துல்துல்
அலிமா துலர்பால், மொழி யமுதஞ் சிதற. (மடமாதே)

உ. கணங் தணவாச் சிரக்கா ரணர் - மதுரக்
கலைக்யானங் ததும்பகப் பூரணர் - உபய
வணர்வெம் பிற க் கோடொத்தை வாரணர் - மொழியின்
வளம் பழுத்திற தமு தாரணர்
பணர் செறிப்பொன், னலர்க ளுலர்தரு
சொரிதரும் வர முடையார்
படிவயின் றம வடிவ தன்னிழல்
படிகலாத் திரு நடையார்
இன்னருவுக ளுழுது தொழுதவண்
திசைசெய் குங்குமத் தொடையார்
எழில்பெருக்கும் நபிமுகம், மதுவென்
னுரையாற், சிறு துடிமெல் லிடையாய். (மடமாதே)

௩. பண்டை யெகினின் மயில் வாகராம் - சுவர்க்கப்
பதிக்கும் ராஜ ரதிக யூகராம் - பரவும்
அண்ட ரகிலர் நித்ய யோகராம் - மகிப
ரபுகுல்லா வருளும்வி வேகராம்

புண்ட ரீகத்திரு வாமி னத்தருள்
குஞ்ச ராச்ர கருவ

எண்டி காந்தமு, மண்ட கோளமும்
மண்டு சீர்த்திய னுருவத்
தொண்டர் நீது நடிந், தநோகதி
அண்டிடா தரு டருவக்
கொண்டல் மீது, விளங்கும் நாயகர் - சர
ணண்டையிற் கொந்த ளத்தொத்து மருவ (மடமாதே)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-வராளி-ஆதி தாளம்.

பல்லவி.

தேவரீ்றும் வன்னப் பாதபங் கய் காட்சி
தேடு மடமை முகம் பாரும்.

அநுபல்லவி.

பூவலர் பொழில் சூழும், போத வண்டுபண் கூறும்
மாவள மைபண் பேறும், மதினத்தீர் புகழ் மீறும். (தேவரீர்)

சரணங்கள்.

க. வஞ்சின் படி றுந்தும் நெஞ்சன் - வன் கொடுமைபூண்
பஞ்சைப்பெண் மாலினளும், படிந்து சிந்தை, பொடிந்து
தஞ்சமே நீ ரென்றே, யடைந்தே, னுந்தா, னோந்தாய்
தந்தா ளுந்தாள்
தஞ்சமே நீ ரென்றே, யடைந்தே, னுந்தாள்
தாகச்செம், தகஜெம், தகதரிகிட, தக தச்செம்,
தகஜெம், தகதரிகிட, தகதகடி, திடிடி
தகதக் தரித்தகிட, தகததிங்கி ணுனி, தகஜெம்
கிரிகிட, தளங்கு, ததிங்கிணத்-தொங்கத் ததிங்கிணத் தோம்,

மதுரவாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்.

தஞ்சமேநீ ரென்றே, தொடருங்கு
வட்டை வெளியி னன்றே - கடையுக
மட்டும் நிறுநில் லென்றே - கொங்கே கமழ்
தூய துளசிக் கன்றே
மண்ணி னுமிழ்ந் ததனை, யுண்ணில் சுகம் பெறஅ
தன்னி லருளும் மென்றன், கண்ணிற் றிகழ் மணியே
தினமே நமைத் துதித்தல், மனதிற் கிருள் சிதைத்தல்
தினகர னிகர் சுத்த, வனமணிச் சுடரொத்த. (தேவரீர்)

௨. செய்யும் பாவச் சும்மை, தொய்யுமா றெடுத்தவிப்
பையல் பொற் பாத காட்சி, படைத்துக், குற்றந் தொடைத்து
உய்யுமா றருளுந்தே, னுண்டார், வண்டார்
தண்டார், திண்டோள், கொண்டார்
உய்யுமா றரு ளுந்தே, னுண்டார், வண்டார் - தாகச்செம்
உய்யுமா றரு ளுந்தேன், குவளையுண்
கந்தன் கபுர்மூன் வந்தே, பவளவாய்
விண்டன் றெழுப்புஞ் செந்தேன் - மொழிகொடு
கோதி லிறைவன் சந்தே,
என்று மிருகமத, மன்றல் கமழ இணை
றென்றின் வயினு மிழ்ந்தீர்
தென்றல் சுய குணத்தீர்
மிகுமா தவ முனைற்றும், நகுமெய் நபிகள் மற்றுங்
தொகுமூ தறிஞர் மெய்த்த, மகுமூ தெனை யிதத்த. (தேவரீர்)

௩. சந்தம் பன்னீர் சிந்திக், கந்தங் கமழுந் தூய
சுந்தர மாட மேவுந், துதித்தண் மக், காவுதித்த
சந்த னுடலி வெற்பே, மொய்ப்போ, துய்ப்போ
நைதிப்போ லைப்பா, தப்பர்
சந்த னுடலி வெற்பே, மொய்ப்போ, துய்ப்போ - தாகச்செம்
சந்த னுடலி வெற்பே, பரவும் விற்
கத்தை மதி மதர்ப்பே - றரவுடன்
கொத்த அப்துல்லா, பொற்பே - ரஞ்சித தி
ரேகானி யொக்கு, மற்பே

சூதா கடகெருவ, சோத கனை மறைவி
னேந்தா சருவவுயிர், தாதா புரந்து திருத்
தருமே தகைய சொர்க்கம், புகுமா றருள்க ஹக்கன்
றகுமத் ததிகந் தொக்க, அகும தெனுமென் னக்கத். (தேவரீர்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாம்பேரதி-சாப்பு தாளம்.

பல்லவி.

போது நான்காண்கி, வீடேறுதற் கப்பல்லனே
போதும் போது மையா.

அநுபல்லவி.

சேதாம்பற் றடஞ்சூழ், மதீனத் தண்ணலே நந்தம்
சித நளின மலரன்ன, பாத வுபயமொரு. (போது நான்)

சரணங்கள்.

௧. சிந்தனை சுதை மதியைப், பகிரும் பூதா
சித்தி புத்தம குண தீதநன் வீதா
சந்த வரும்வ ரோதயரின் மகா நாதா
சத்துவத் தனிவஸ்து வேதவி னோதா
தஞ்ச மிஞ்சுநுங், கஞ்சமெஞ் சரணே-முரணும்பவப்
புஞ்ச மெஞ்ச சரண் சரணெனக்
கெஞ்சு மெஞ்சுதி னெஞ்சு தேறவோர். (போது நான்)

௨. தண்ணம் மலர் விரலிற், றருமகு மூதே
சரத நன்னெறி யணுகா தக வாதே
பண்ணும் படி கடியு முதற்றிருத் தூதே
பத்திவிட் டொளிர் சொர்க்க வீதியின் பீதே
பஞ்சிதமழத, குஞ்சரம், மிசையே - இசைசேரிரு
கொஞ்சு மஞ்சுக, விஞ்சொல் ரஞ்சித
மிஞ்சும் வஞ்சியோ, டுஞ்செல் கோவொரு. (போது நான்)

௩. கொங்குண் டளிபயிலும் பொழில்மக்க வூரா
கோதில் லப்துல்லாமக ராஜகு மாரா
அங்கண் படிக்கட் டேழு முருவுபெற் றூரா
சத்தவித் திருமத்தண் பாதசிங் காரா
அண்டி ரண்டுதால், தொண்டுவண் டிடியே - டசழ்வோய்நிறை
கின்ற வண்டச்சங் தெண்டு தொண்டர்க
என்று தென்றிகழ், கின்ற தாளொரு. (போது நான்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-ஆதி தாளம்.

பல்லவி.

திரு வதிந்த வாச நாண்மலர்ச் சீர்பாதங்
தேடு தையாவென் மனமே - தங் தாளும், நாளுந்
தேடு தையா வென் மனமே.

அநுபல்லவி

கரு வதிர்ந்த மையுலாஞ் சோலை மதினு வாழ்
காட்சி நாயகா, மோட்சங் கோட னாக்குஞ்
சாரி கமபதநி, தாரி தகுததகு, தாங்கு, தகுதகுண
தீங்கு திகுதகுண, தகுத்த தகுத்த தகு, திகுத்த திகுத்ததிகு
தத்தளங்க தக, தரிகிட தோம்தாம். (திருவதிந்த)

சரணங்கள்.

௧. சதைபின்னைவத் தட்ட நஞ்சைத் துய்நாதரே - பாய்மாத்
தாண்மீ திட்டத் திறைஞ்ச மெய்வேதரே - ஒழுகுஞ்
சுதைவிற் கட்டுத் திங்க ளழை நீதரே - போங்க
சோதிவிண் வட்டத் தெய்தச் செய் போதரே - அடியோர்
கடைநா ளதோகதிபு, காதிரட்சித் தெடுத்தா
ளுடைநான வாசமேனி, நீ ரொய்யாரதை யாளா

வோங்கு திரை யுகதி, யாங்கற் பிரமதலே
யோம்பு விதம் படிந்து, தாம்பிற் கிடந்து வள
வவவு மதிதவழு, சூவவு வரைப் பொதும்பி
னுற்ற வெற்றியபூ, பக்கர் சித்திக்"கெனு
முரவரி னிருவரு, ளடைகிடர், திலருகண்
ணுரவலர், பிரபல, வதீத காரண
வற்றெருழும்பன், மிகக்கடத் தேறநும் - சாரி. (திருவதிந்த)

௨. கடவுள் முத்தண்ணம் வெண்மைமுத் தானவா - வருங்
காபிர்கட் டேட்கத் தின்பொற்பொற் றுணவா - விளங்குந்
தடவிண்மண் மற்று வஸ்தின் வித்தானவா - தூய
சாதி குறைவிதில தத்தானவா - கமலக்
கழல்கல வாது வைப்பீர், காணரும்பொற் படிவாழ
கிழவிறும் பூதுடைய, நீண்மலர்ப் பெண் மாதே
நீகி யழல் வனச, வாவி மகர முகள்
நீடு மதகுருதி, போடு கயல் பழன
நிறைய மதுர முதள், துறை வஞ்சர தரையி
னிற்க வற்புதமு, ஞற்று சத்துவவின்
னிமிர்புகழ் நயிகள்கண், மணியெனு மிர்கமத
திலவொடு பொழியும வச்ர திரேகரே
னெற் களங்கப், பரகதி பெறநும் - சாரி. (திருவதிந்த)

௩. பாதவொப் பப்பண் சொல்லி வண்டாடலுங் - தோகைப்
பாரம் விட்டுப்பொன் மஞ்ஞை கண்டாடலும் - பொழில்வாய்
சிர கம்பஞ்செய்து மந்தி கொண்டாடலும் - வாளை
சீத குட்டக்கண் டுள்ளி விண்டாடலும் - உளஹூர்
மூதுமா மக்க வதீபா, மோனரப் துல்லா வருள்
மதுமாலே ராஜ ரேநே, மருமூதே நயினுரே
மாதர் திலதநுதல், சீத குமுத விதழ்
வானமுப் பழசுறைய, தேன்விட் டளேயு முதா

மதுர மொழி யமரர், மகளிருறை சுவன
மண்ட லத்தினொடு, தொண்டலக் காடர்
மடைபடி தவழுகுஞ், சரமிசை யிருமட
மயிலொடு பவனிபோம், சௌவுந்த ராதிபா
மட்டறுந்த பவத்தொகை கெடறும் - சாரி. (திருவதிந்த)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஆதி தாளம்.

பல்லவி.

உதித்த சுட ரதிற் றரணி வானும்
ஒளிர்வி சித்ர திரேகா.

அநுபல்லவி.

நிதித்தெண் பதத்துணை, கொண்டே, யன்றே, விண்டதிற்
பதிய மிதித்த கஞ்சப், பணியை னவிதைத்த - தரும்
பான்மா நவமுஸ்த, பாமா நிலமிசை
துதைதநி, யிருளது, சிதைதரக் குணநிசை. (உதித்த)

சரணங்கள்.

க. அத்த னித்தன்பரி, சத்த வஸ்தவன் மூன்றோ
டவிரொளிவெண் முத்தானவா
அழகொழுகும் " கலப மரகத மயில்வேச
மஃது படைத்த மானவா
சத்தவிண், மற்றதற் கப்பா லறுவில் ஹக்கன்
சமூக மிரவிற் போனவா
சகல தூதர்க் கிமாமாய், நின்றுந் தேவ னுஞற்றைந
தருணை நிகர்த்த தானவா
மத்தக ஜக்திரள்கள், மடிய வெய்து தத்திப்பாய்
வல்லியம் பொன்னடியை, வணங்கு முள்ளிற் றித்திப்பாய்
மாதவ நீடு முயர், பாதவ மோடும்
கஞ்சுவ்வதி னகம், னறநெ றென்ன வைப்புக்

கிடந்தாடப், பொதிரெறிப்பப் பொற்பூ
வானவட்க் கட்டே, திசை யுட்க
யானைகள் சப்தித்தே, கறை கக்க
வலிய சதுத்தள, முழுது மடிபட்ட
மூடி மகுடம், பொடி படவும், பதறினில்
வடவைவசி னடருசி, தடர்விய, நடர்விய
துரகத மதுகய, தணிபவ தணிவற. (உதித்த)

௨. இந்த னந்த விருள், நந்தவந் தலர் பொற்ரு
ளிணை பரவுமுல் வாசரே
எழில் குலவுந் தாள, வகடுறை சிறு இட்
மினிது புகழ்ப்ர காசரே
சொந்தநந் தாசர்பே தும்பே றெனவுதித்துச்
சொரியு மருள்விச வாசரே
சுவனம்பூ தலம்பாவு, நந்தாத தீப நிகர்ப்பச்
சுடரு மகுட ராஜரே
சுந்தங்க மழ்புயனு கதிர்செய், முத்ரைச் சுத்தத்தீர்
கற்பகத் திற்பொழியுங், கனக மழை யத்தத்தீர்
காமர நாதம், மிரும், தோமறு, சீதம்
உய்யப் படர்சோதி, மகுடமன்னர் துத்திப்
பனிந்தேத்து மடிக, ளுந்தம் வெற்றிப்
பாதுச வுக்ய, மோக்ச மளித்துப்
போதலர் சொர்க்கத், தேகொடு வுய்த்துப்
பலகிகு மத்தலை, தருளுக எனது
இருவிழி யிற்றிகழ், மணி யுத்தமஅதி,
பதியகு மதமுகம் மதுவெனும் நிதியதன்
பதுமமென், மதுவவிழ், புதுமல ர்துவிட. (உதித்த)

௩. வண்டு கிண்ட விதழ், விண்ட தன் டலை மத்கா
வள மதினநன் ஞதரே
வரைத் தடத்தின் பிணைத்தேக, ளபுதுல்லா துரையிர்கண்
மணியின் வயங்கு போதரே

 மதுரவாக்கிய கீர்த்தனா ரஞ்சிதம்.

குண்டலத் தாதரம், விண்டே கிறும் நில்லென்று
குவடானந்தப் பிர சூதரே
குடகம்பூர் தடநாட்டம், புத்தூரி னார மழைக்குங்
குதறத் துடைத்தென் னீதரே
பண்டாதிசுந் தாமாய்ப், பதுமகன் கையுந் தந்தீர்
பண்ணவர்க் கன்றொடிந்த, பசிய சதனந் தந்தீர்
பாதக சூன்கொடுந், தோக நாதன்
பொங்கற் கவின் விளைப் பகடு தத்தும் சந்தத்
தடஞ்சூழு மதுர மொப்ப வைத்த
காலை யழற்றித், திரேகம் வெதுப்பப்
பாலை வனத்திற், றேனினிவிப்பக்
கடியெழ நற்றுணர், பலது மலர்தர
நதியரு ளித்துதி, விலை கொற்றவ வதி
கடலெல்லை மரசதி, மிடனுடை சிரசணி
கதிர்நனி திகழ்பசு, நிதிமணி முடியென. (உதித்த)

கீர்த்தநம்-இ-ம்-அடாணா-ரூபக தாளம்.

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-அடாணா-ரூபக தாளம்.

பல்லவி.

மாதே யெந்தன் காதலது சொல்லெடி - நல்ல
வம்பூர் மலர்ப்பாத, தம்ப மதிற்கொண்ட
மாதே யெந்தன் காதலது சொல்லெடி.

அநுபல்லவி.

வேதாவி நோதநி பராம் பொற்பிரபை
விந்தைத் தடமக்க, நந்தந் துறைக்கேபோய், (மாதே)

சரணங்கள்.

௧. சீத விரியல்கஸ் தூரி கலந்ததி ரேக வாகராம் - ஒரு
ஆதிக் தப்புள்ளத யாதுமற் பூதத்தட் டாங்க யோகராம் - அந்தப்
போதிய தண்டா வளர்த்த சுவனத்துப்
போச ரெங்கும்பிர, காசர் சமுகத்தில்
மோதி யுள்ளேயடங் காதத்துதே - யதி
மோகப யோததி, தோகையே ரேர்சித்ர. (மாதே)

௨. நம்பு மடியவர், துன்புந் துடைத்தெறி நான்மலர்ப் பாதராந் - திறி
யம்பொன் புவனத்துக், கும்பம் ரத்னத் தீபமாகும் ரீதராம் - உயர்
உம்பர்கு லாதிப, தெம்பெங்கும் நாளுநிந்
தரவர் நீண்முதிர், குரவரென் றோதும்
வம்பவிழ் திண்புய, ரம்பரென்றே வென்றன்
வாட்டங் கண்டேமகிழ், பூட்டுவோர் மாட்டுற்று. (மாதே)

௩. வண்டல் கிளர் தடந்தோறும் பகட்டு;
வரால்குதி போடலும் - செழுந்
தொண்டல் தவழ்பொழி, லண்டை மஞ்ஞைகளி
கூத்துநின் றாடலும் - உள்
ரண்ட ருலகிற்சி றந்த மதீனவர்,
முறுஷ லாவிய சிரத ராபதி
வண்டர்கை கூப்பிம, ருண்டிறைஞ் சபுதுல்லா
விரகா யிருளுமநம், தாஹரவுக் கேகிரீ. (மாதே)

முற்றிற்று.

கீர்த்தனம் - ௫ - ம் - ஆனந்த பைரவி - ஏக தாளம்.

பல்லவி.

பயிலே யெந்த வேளையு மாவி
னைய லாமோ, துய்ய மாதவா பதம் நாடி, வாடி.

அநுபல்லவி.

பயில் குடவளை பசந்த, பணை மக்கா நன் னகர்வா
முயில் சேர்தண் சந்தநகை, மகிலாண்டஜு பீர்லராமீ

மதுரவாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்.

ஆரமுத நனையா, ருறுதி, மொழியா
ரழகொழுகு சுத்தம்
ஆரமுத நனையார், சரண வுழைபோய்
விரகமது மொழிவா, யழகொழுகும்
சிந்த்ர நுதலாய், உறுதி, மொழியா, யழ்கொழுகு சுத்தம்
ஆரமுத நனையார் - சரண வுழைபோய்
விரகமது மொழிவா யழகொழுகுந்
தாகிகிகரி, கிகிச, வல்லாச, கமப, சல்லாச கோதை. (மயி)

௨. குயினிழல் குலவு சார்ந்த, குண விஸ்தார ரருளுங்
கயிலாசெழின் சந்தடாவி, கமழோங்க லமேதயா
காதல் நறை விடுவோர், கருணை பகர்வாய்
கலை திகழு மிக்கோர்
காதல் நறை விடுவோர், சரத ரவர்பால்
சமைய மிது மடவார்கலை திகழு மெந்த னகமே
கருணை பகர்வாய், கலைதிகழு மிக்கோர்
காதல் நறை விடுவோர், சரத ரவர்பாற்
சமையமிது மடவார் கலை திகழும்
தாகிகிகரி, கிகிச, வல்லாச கமப, சல்லாச கோதை. (மயி)

௩. வெயில்விடு தரளச் சுதை, விளங்கு மாட மதினை
வயின்வா ழப்துல்லா வென்னும் வரநின்ற மகுழு தராம்
மாக நகை யுளரே, பழமை மறையாய், நிறைசெழுமு துங்க
மாக நகை யுளரே, அடிகள் நனிபா லறைதியென
துள்மால், நிறைசெழுமு கும்பஸ் தனதே
பழமை மறையாய், நிறை செழுமுதுங்க
மாக நகை யுளரே - அடிகள் நனிபா
லறைதி யென துள்மால், நிறை செழுமு
தாகிகி கரி, கிகிச, வல்லாச கமப, சல்லாச கோதை. (மயி)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-ஏக தாளம்.

பல்லவி.

இந்தப் புவியி லேயோ நம்பையல்யா னேழை
யுய்யத் தாரீரோ
என்றுங் குலவும்புது, மன்றல் விகசித பூந்தானே

அநுபல்லவி.

எந்தாய் நிமல, அமல சுநந்தேகா
இறை தூதரி னுபய கண்மணித் தாஹரா
இப்படி தோயாப், பொறப்படி நேயா
இருதய மரையலர், தாசுய பருதியி
னெங்கணும் நகுஞ்சுட, ரேகடல் சூழும். (இந்தப் புவி)

சரணங்கள்.

௧. சுந்தர மடவிய, ரைந்துவர் துவரிதழ் வாயார்
கெடு வாடை நீவுஞ்
சுடர்விடு தரளவெண், மூறுவல்க ணிலவுமிழ்
சுருதியி னமுதொழு, குருதியின் குமுதவாய்
கொடுசுவைத் திடுநறு, மடுசுவைத் தசையினிற்
ஆடுபுல் லோரைநல், லோரென வோதியும்
வாடுவ னேன்மலை, யாநல மேபெற
ஆதாரம் நீரே செய்வீர்
அகலா வறுமையு; மிகலார் கொடுமையும்
அகநோய் பிணிகளு, மிகவாய் மறுகினேன்
ஆதாரம் நீரே செய்வீர்
அடங்கு தேமொழி, நடுங்குதே மன
முடங்கு தேய்ழி, வொடுங்கு தேசெயல்
ஆதாரம் நீரே செய்வீர்
அஞ்சே லஞ்சே லென்று விள்வீர்
அடுகொடு வினைபுரி, கிழவிகை யதில்வருங்
கடுவிட மமுதுசெய், கடவு ளுமது கெதி
* மந்தர திண்புய, சுந்தர சப்ப்ரம
மங்கு விடுங்குடை, தங்கும்ப்ர காசரே
வாய்ந் தமுதகலை, சேர்ந் தொழுகுமதி
சார்ந்த வுலகதி, காந்தமு மறிய
மாசற வேயம, வாசையி லேபத
வாசக ரோருக, நேசம தாயுள
மகிழொடு பாவிய, ஜெயபதி ஜெயதுதி
வளர்சுப கரதல, முகம்மதரே யும. (தடியே)

உ. பாதார விந்தந் தாரும்
பண்பொடு வெம்புலி, யும்பணி யுந்திருப்
பருமணி விழியா, வுகள்பர வியவிரு
பாதார விந்தந் தாரும்
பாவமெல் லாம்நிறை, சாகர மாகிய
பாதக னேனை, வேதனொன் றுதொளிர்
பாதார விந்தந் தாரும்
பாரோர் களுமுயர், மேலோர் களுமிகு
வானோரு மருவு, பாதாள மூருவு
பாதார விந்தந் தாரும்

---

* இந்த - மந்தர திண்புய, சுந்தர சம்ப்ரம - என்னும் - வரியி லிருந்து - எட்டு வரியையும் - ஒவ்வோ - ரடிக டோறும் படித்து முற் றுவிக்க வேண்டும்.

பரிவா யிறையறு, வினிலே கபுசொடு
பரிவாய் நடைபுரி, கதியான வுபய
பாதார விந்தந் தாரும்
படர்ந்த தீவினை, கடந்த மேன்மைகள்
பலன்க ளேபெற, நலன்க ளேதரும்
பாதார விந்தந் தாரும்
பத்தி கூரும், வெற்றி சேரும்
பலபல நபிகளி, னரசென விமையவர்
பகலிர வினும்வெகு, துதிகள் தரவுமது
மந்தர திண்புய. (அடியே)

௩. வேதவி னோத வாழ்வே
விண்டல மண்டல, மும்புகழ் கொண்டுயர்
விருதர சருநவ, மணிமுடி தொழுசது
வேதவி னோத வாழ்வே
வெனுமோர் குறைவிகள், குலமீ தினில்வரும்
விசையா திபர்திரு, மதின நகருறை
வேதவி னோத வாழ்வே
மேலோனரு ளப்துல், லாவோர் மகவெனும்
வீறு திபர்மகு, மூதே நவநெறி
வேதவி னோத வாழ்வே
மேவும கா துதி, சேருச தக்கத்துல்
லாமன மீதினு, மேவிறை வாகிய
வேதவி னோத வாழ்வே
வியந்தனு தினம்வண்ணக், களஞ்சிய மிகுபுகழ்
விளைந்திடத் துதிசெய்ய, வரந்தரு நாயக
வேதவி னோத வாழ்வே
மெய்ப்ர தாப கற்பு காவே
விலைகொளு மடமைக, ளுலக முழுது மதில்
மிகவு மெளியனுமை, யலதொரு கெதியில்லை
மந்தர திண்புய. (அடியே)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-இஸ்திரி-ஏக தாளம்.

பல்லவி.

அனுக்ரகஞ் செய்வீரே—சித்த மிரங்கி
அனுக்ரகஞ் செய்வீரே—மன திரங்கி
அனுக்ரகஞ் செய்வீரே.

அநுபல்லவி.

தொனித்திடராகசங் கீதவண் டுகள்பாடத்
தோகைநட மிடுபொழில், நாகைவாழ்ஷா குல்ஹ மீதே. ()

சரணங்கள்.

௧. கடலிற் பாலரிட்ட தஸ்பீகு மணியைக்
கரையிற் கிஸ்திபி லெடுத்தீர் - வெகு
படைகளாய்த் திரண்ட காபிர்கள் முன்னிறந்த
பசுவுக்கு முயிர் கொடுத்தீர்
நெடியுள ரொருவன் வீட்டில்முன் பட்டிறந்து
நின்ற மரந் தழைந்துக் காய்த்து நிறைந்து நிற்க
உடல் வழங்காத் தஞ்சை யச்சுதப்ப னயக்க
ளோடிவந்து பணிந்திட, நீடியகா ரணஞ் செய்தீர். (அனுக்)

௨. வலைவிழுந் தவனங் குபேரன் பாக்யம்பெற
மலர்க்கண் கருணை பொழிந்தீர் - ஆட்டுத்
தொலிபறி கொடுத்தவன் குளத்தங் கரை மண்ணுக்குட்
சொர்ன்ன மெடுக்க மொழிந்தீர்
வலியத் தொடர்ந்திடு, மூன்றாறு குதிரைக் காரர்
மாசில்லாமற் றங்களிற், போர்செய்து மடிந்திட
நிலைமை தனிற் புதுமை, விளைந்த குதுபு வள்ளல்
நீரருள் புரிவதொரு, காரண விதமுந் தானே. (அனுக்)

௩. கருத்துள் மலர்ப்பதங்களை, யிருத்துந் தொழும்பன் வண்ணக்
களஞ்சியம் புகழ்க்கோவே - அன்பு
பொருத்தும் ஹஸன் குத்தூசு புத்ர ரத்னமென் னகை
பொருந்தும் ஷாகுல் ஹமீதே

திருந்தும் நாளுமு கம்ம துதவுமு கம்மதலி
திரண்டி மைப்பணி விடைக்கு - மவனுக்கன்பு
தரித்த குலாமு கியித் தீனருள் பாட்சாசா
சாகிபு பணிவிடைக்கு மேகருணை புரிவீரே. (அனுக்

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதி தாளம்.

பல்லவி.

மனமே வாழ்வைச் சதமென் நனுதினம் கபிபாதம்
வாழ்த்தா திருந்தாய் மனமே.

அநுபல்லவி.

திஜமு மிறை யருள்சேர், திருமக்கப் பதியில்வாழ்
தேச ராஜர் புகழுல், லாசர் மரு மூதர்தம்
செழும்பதந் துதியா தபு ஜகுலெனு
மழும்பன் மாநில வாழ்வது நிலமதில்
விழுந்து மாயஞ்செய் யிபுலீ சடிபுகழ்
தொழும்ப னும்மலர் தானது நின்றதோ. (மனமே)

சரணங்கள்.

க. தூய்ய கலிமா சோன்புஞ், செய்யுந் தொழுகை ஹஜ்ஜும்
சொல்லும் ஸக்காத்தும் விடுத்தாய்
மெய்யாங் குருவை நிழ்ந், தைய லார்க ளாசை வீண்
பொய்யென் பதிலுந் தொடுத்தாய்
வைய மதிலசர் செய்ய, ஐய முறவே யெண்ணி
மாகாமத் தட்படுகி, ரூயே ஹக்கருள் பெறும்
மடங்க லசயிபு ருஹீம் நயிநமை
யிடங்கணியி லேதனும் நம்புறா தவன்
அடர்ந்த மிருவாழ் வானது நிசமெனத்
தொடர்ந்த வரசா னதுகில நின்றதோ. (மனமே

உ. கலக்கஞ் செய்யவே வரு, மலக்கல் மவுத் தென்பவர்
கடமெனி யர்து நிசமே

அலைக்கு முயிர் விட்டபின், விலைக்குங் கபு றறைக்குள்
ளாவதும் பர வசமே
மலைக்குங் கேள்வியி னுட, னலைக்கு மதா பாகிய
வருத்த மெண்ணி யழாமற், கருத்தினில் மகிழ்ந் தாயே
வரம் பெருகுமூ சாகபி யுடனெதிர்
புரிந்திடும் பிருஅவ்வின னு மாசனு
முரண் பெருகுநாள் விதமுள தளமொடு
தரம் பெருகுசெல் வங்களுங் நின்றதோ. (மனமே)

௪. கண்ணுக் கிரு மதின்த், தண்ணலப் தூல்லா பெறும்
காத ராமகு முதர்
வண்ணக் களஞ்சியமும், விண்ணோ ரெவருந் துதி
மலங்காத மலர்ப் பாதர்
கண்ணீர் பெருகி யழு, மன்னுள் மகுஷ நிலே
காப்போ ரவரீரவெகு, தீர்க்க முடனே மனங்
கலங்கி டாதெதி ரிலையெனும் வாழ்வொடு
பெலன்கொளும் நத் தா துட னேயினம்
இலங்கு மாநிதி பெருங்கா றானொடு
துலங்கு மெவர்வாழ் வானதும் நின்றதோ. (மனமே)

முற்றிற்று.

காலன் குடியிருப்பு

மகா வரகவி வாணர்

அசனலிப் புலவ ரவர்கள் பாடிய பதங்கள்.

:*:

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ரூபக தாளம்.

பல்லவி.

ஆசை யானேனே யருமையஞ் சுகமே
சொல்லடி, சொல்லடி நா - னாசை யானேனே.

அநுபல்லவி.

வாசகன் னயினார், தேசசங் கையினர்
லாழ்வார் முகம்மதனார் மீதினி லன்னமே நா. (ஆசை)

சரணங்கள்.

௧. இன்பமுற் றேரே, யன்புபெற் றூரே
ஏனெடி யவர்பதந், தானெடி யன்னமே நா. (ஆசை)

௨. முற்றிலு முதியார், சற்றுளம் பிரியார்
மோட்சந் தருமே யவர், காட்சியி லன்னமே நா. (ஆசை)

௩. எழிலொளி முடியோ, இருவிழி வடிவோ
எண்ணுதே மையல் பிரமை, நண்ணுதே யன்னமே நா. (ஆசை)

௪. நம்மதி னவா, ரம்மதி யர்வார்
நாதர்மு கம்மத னர், பாதமி லன்னமே நா. (ஆசை)

முற்றிற்று.

கீர்த்தனம்-௨-ம்-ஆனந்த பைரவி-திரிபுடை தாளம்.

பல்லவி.

மானே யவர்துணையைக் கருதி னேனே
வந்துமன் றுடுவதிற் றானே.

அநுபல்லவி.

வானோரும் நிதம் நின்று வந்தனை யேசெய்ய
வந்தநா யகர்முகம் மனுநயி னர்க்குச் சொல்லு. (மானே

சரணங்கள்.

௧. துதித்துத் துதித்து நம்பிச் சொன்னதி னாலே
சுபசோ பனமுந் தந்து, சுகநயஞ் செய்ய லாலே
மதித்துச் சம்மதி தந்து, மனுவோரு மெண்ண லாலே
மருவுதிற் கைபிடித்துத், தவறும லுய்ய லாலே (மானே)

௨. நம்பி நம்பி னோர்க்கு நயஞ்செய்வ தாலே
நானு மதி லொருவ னானதி னாலே
தம்மமென் றவர்க கன்பு தாமெய்ய லாலே
சந்த்ர கிரண முண்ணும் சாதக வண்மை போலே. (மானே)

௩. அரும்பு கரும்பின்மண் டம்புய மக்கத் தாரென்
றாசை மிகவுந்தந்துள் ளருள்நய மெய்ய லாலே
விரும்பி யகங் களிகொண் டேனசி ரண மேலே
வேதாம்ப ராமுகம் மனுநயி னர்முன் னாலே, (மானே)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

இந்த, வேளையி லருள் செய்யு—வர
இதுதருண மையா, அடிமை, நான்பிழைக வுய்ய.

அநுபல்லவி.

நத்துவன் தாலவு தடஞ்சூழ் மதீனா வாழும்
நாயகர்மகுடமே தூதபிமு கம்ம தாய் நீளும்
அந்த நாயகர்க் குயிர்த்துணைத் தோழ
ரன்புலாவிய மாமறை நேர்மைசேர்
அகிலத் தோர் புகழு, மகிமைத்தா பரமேசீர். (இந்த)

சரணங்கள்.

க. ஆதி, முத லவனொடு மயில்துணை
யிலையென வேயுரை கூறவும் - அது
போதி லிறை யருளி னேவல்கொடு
வரவு கூறவும் - முடி
யாத இருமை கொடு கூடி
யிறைவ னருள் மீறவும - வளர்
வேத முறை பரவு கூகை
வடிவுகொடு தேறவும்
பின் ஞாயிற்
பூகலத்திலொன் றாக விடுக்கவும்
புகழ் வல்லோ னொரு பூவைக் கொடுக்கவுந்
தாத ரசூ ஜிபு ரீல்முன் னடுக்கவுஞ்
சுருதி மாநபி கையிற் கொடுக்கவும்
சோபன மாமிது போலுள தேல்மணஞ்
சூடிடு வீரென மேலவ னோதினன்
தாபர மாயிஷா மாமணமே யிரு
சாகர மார்புவி தின்மூக்கில் மேவிய.
நகைமையின் மகிமையின் மிகமகிழ் தருமொரு
ஷறகினி னெறியினி லுறுதியி னொடுவளர்
செகதல மெமையினு முயர்புகழ் பரவிட
சேர்க்கும் அபூபக்கர், சித்தீக்கு நாயகமே. (இந்த)

௨. சிந்தை. கிலே மயங்கித் தியங்கித்தின
முயங்கித் தயங்கிப்பர தவிக்கவும் - வள
ரிந்தப் புவியிலுள விந்தைக்
கிரங்கி மனங் குவிக்கவும் - நறை
சந்தக் குமிழ்முலை மடந்தைப்
பெண்ணார் மையல் மிக்கவும் - நாளும்
இந்தத் துயரது தவிர்தப்
புதமை யனுப விக்கவும்
இறையருள் சேர்
சிந்து வெங்கதி ரொளிக்கக் கடுத்தவ
சேனை பூடண்டை யாக வுடுத்தவ
மைந்த னுயிர் மறைக் காக விடுத்தவ
மயில்மன் னாட்டெண்ணெய் மீட்டி யெடுத்தவ
மாறிய தாரைதயி னீளுயிர் போகவும்
வானுரு மேறுட னேசம ராகவும்
தேறிய பேர்புத்து கான்வெளி யாகவுந்
தீன்முறையே நெறி யாமர சாகவுந்
திருமுகம் மதுநபி மொழிவழி யரசியல்
சிதையுறு நணிபுரி ஜெயகுண பதியெனுந்
தரும விதரணியே யிறையருள் சேர்
சத்தாக்க மேயுமறு, கத்தாபு நாயகமே. (இந்த)

௩. தோகி, யிபு லீசு தடுத்தனென்
றோதி யொருபொழுது தாத்திலேனே - வெகு
நேச முடனேகுறு ஆனைத்
கொடுத்தெழுதி கிரத்தி லேனே - பிர
காச வெள்ளருல்மறு பூனும்
பல்லைகண்ட தாத்திலேனே - மறு
தேச மகனுமறு வரனை
வரவழைத்த வாத்திலேனே
கிருபை கொடு:
வாச மாமபூ பக்கர் சூட்டிய
மடமின் னார்தமை மதுவை கூட்டிய

பேசியே பிறி வாக மீட்டிய
பெருமை நபிகைதொட் டொருகை நீட்டிய
பேரறி வேயமு தேமிக வாழ்வுள
பேர்களி லேநடு நாயக மாய்வளர்
கார்முகில் யேவும்ற சூல்மக ளாருக்கை
யரவையு மேமண மேசெயும் நாயக

கவினுறு நபிகபு றினிலிருந்
தமதுவர் கபுறிடை யமைபவர்
பிழைதவிர் பவரென
வுவமையி லவனருள்
பதவியி னுதவியின்
ஒப்பா னுது மானிபுனு, ஹறப்பானு நாயகமே. (இந்த)

௪. வாலே, மட மாதர் தரு மசுஅு
லானைவத் தெரிந்தெடுத்துப் பிரித்தவ - நெடு
நீல னிபுலீசனின் கோல விழி
கெடுப்பவி தித்தவ - வெகு
ஓல முடனே தமி மாமென்
றுரைத்து வுப சரித்தவ - இற
சூலு மறுவிலொரு வாழி
கொடுக்க வவ தரித்தவ
அந் நாள்முதற்
சிலமா மறை இனே விளைத்தவ
சேனை வீரரைச் சாகக் குழைத்தவ
சால இறைபுவி யாக முளைத்தவ
சங்கை நேர்வழி யாகத் தழைத்தவ

தாயென வாழ்கதி ஜாமக ளாரையே
தானவ னேவலிக் காருசெய் தேவள
காயொளி யாதவ னேர்பிரமைப் சேர்தல்பு
காறெனும் வாளணி வோயணி யோர்சனி

கடகரி யெனவரு மடையலர் கொடுமுடி
கன்தள மொடுகொடி குடைபொடி படநெடு
வடவரை தகரவும் நடயிடு துல்துலின்
வல்லாண்மை சேருமலி, யுல்லா நாயகமே நீ. (சிந்த)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-சாப்பு தாளம்.

பல்லவி.

மையலூற்றிலே
நினவிலே கனவிலே, வருவதே வேணும்.

அநுபல்லவி.

வையம் புகழ்பெற்ற, செய்யி தருமதே
வள்ளல் ஹமீபுமு, கம்மதுல் லாவே. (மையல்)

சரணங்கள்.

௧. ஆருஞ் சொல்லாத்ததோ நான்சொல்லப் போறேன்
ஆண்டகை யேயுமை யல்லாமற் கூறேன்
தாருங் கிருபையென் றலிந்த வீறேன்
தம்மைப் பிரிந்தும் சற்று மையல் மாறேன்
பின்வாறே னிவ், வாறே மனதார நாளே. (மையல்)

௨. அல்லும் பகலுஞ்சொல் நாவும்நில் லாதே
ஆசைப் பிரளயத் தாவல்பொல் லாதே
சொல்லும் பயனுக்கு மதருள் மீதே
சொந்தமென் றுலெனக் குங்குறை யாதே
யிப்போதே, தப்பாதே, சகியாதி யாதே; (மையல்)

௩. எற்றிபு லீசுசெய் குத்திரத் தோசை
மெல்லாந் தவிர்க்கும்பொற் பாதப்ர காசம்
மூத்திரை யோர்கட்கு மோனவுல் லாசம்
மோட்சந் தருகுவீ ரென்றல்லோ பாசம்
உல்லாசம், பிரகாசம், அணை நேசம் நேசம். (மையல்)

௪. மாணிக்க மேடைபொன் மாடமு லாவே
வருக்கை கதலி கன்னல் வளங்கொள்மக் காவே
காணிக்கை யாகிய காரண வாழ்வே
காசிமு கம்மது வேழுஸ்த பாவே
பொற் பூவே, யென்கோவே மறை, நாவே, நாவே. (மையல்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஏக தாளம்.

பல்லவி.

கெஞ்சிக்கெஞ் சியேயுங்கள், தஞ்சமென் றதினாலே
கிருபைசெய் தருளு மையா.

அநுபல்லவி.

கஞ்சம் பயிலும் வாவித் தடமாமக்கத் தாரே
கருணை புரியுமுகம் மதுவே ஹபீபுல் லாவே. (கெஞ்சி)

சரணங்கள்.

௧. சொல்லிச் சொல்லியே பாதத் துணையைநா னையா நம்பித்
துதித்துள்ளம் வாடு வேனே
துணையுங்கள் துணையல் லால் மநுஷர் வெளியில் வேறு
துணையென்றுந் தேடு வேனே
இல்லையென் றுலிபுலி சிகலைவிட் டோட்டு வேனே
இரங்குங் கிர்பா கடாட்ச மென்றைக்குக் கூட்டு வேனே. ()

௨. எண்ணியெண் ணியே யென்ற னிருதய கமலத்துள்
ளிருப்பதுந் தெரியாதே
இரவிலும் பகலிலுஞ் சுரதநல் லிசையென்று
விருப்பன்றித் தரியாதே
கண்ணின் மணியே யென்றன் கல்பிற் கனியா னேரே
கருணை கரரே யெனைக் காத்திரட் சிக்கத் தானே. (கெஞ்சி)

௩. வாசங் கமகமென வீசுங்கஸ் தூரி காத
மணக்குந் திருமெய் யழகும்
மணலொரு பிடியினால் பதுறி லபூ ஜகிலை
மடியச் செய்ததை யழகும்

நேசம் பெருகு பாதத் தழகும்பு யத் தழகும்
நினைவிலுங் கனவிலுந் தனதாய்த்தெரி சிக்கவே. (கெஞ்சி)

ச. ஜென்ன நகர்க்குமக்க நகர்க்கு மற்ற நகர்க்குஞ்
செங்கோல் செலுத்தொய் யாரரே
ஜெயசிங்க மெனவந்த திறலபு துல்லாதந்த
செல்வத் திருக்கு மாரரே
மன்னர் புகழுங் கோவே வரிசைமு கம்மதுவே
நன்னய மூஸ்த பாவே நபிமேற் முறுத்த லாவே. (கெஞ்சி)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-ஏக தாளம்.

பல்லவி.

என்செய் வேனோ—உமதடி
தஞ்ச மானோர் தம்மா லிச்சைக்
கென்செய் வேனோ.

அநுபல்லவி.

செஞ்சொற் கினி துளத்து எருள்கற்ப மானதரு
சீர்பூத்த கார ணீகராம்
செய்யி தான நயினர் நீரே
செம்மல் யாமு கம்ம தெனை ரட்சிக்க
மா பாபமாப கெரிசநிசா - மகரிச
நீசநீச கெரிசா, கெரிகக ககமா
நீசநீச கெரிசமபா - தப்பா
தாகது ஜெம்தரி தரிகுந்தரி
தக தத்திங் கீனுதக தத்திரீம் திரீம்
தளங்கு தோம் தக தரிகிட தோமென. (என்செய்)

சரணங்கள்.

க. எமக்குள்ள மில்லையோ, எவர்க்கு முள்ள தல்லயோ
தமைநாட்ட மில்லையோ
சுமக்கச் சுமக்கத் தருந் தாயக நாயகா
துணையிட்ட பேர்க்கெல்லா மான தீனவா

நமக்குக் கான தருணச் சிரோமணி
நறைப்பொன் னுவெனை ரட்சி யாதிருக்கில் - மா. (என்)

௨. இரக்கம் வையா தையா, இருக்கநல் லதுசெய்ய
தருணத்தி லேயுய்யப்
பரக்கப் பரக்கவிழி யாதொரு நாளையே
பரிசுத்த நிமிர்த்திபாய் வேணு வேழைமையே
சுரதச் சோதி மலரிற் புரோதன
துணைச் செய்தாதர வேதந்தா ளாதிருக்கில் - மா. (என்)

௩. சொலச்சொல மனதாய்த், துடிக்கு தென்றுந் தனதாய்
மலர்மேற் பெண்ணுர்கள் மால்
இலக்கத் தொகைக்கு ளெண்ணி யேயுமை நாடினே
இனிமைக் கிதுபொற்பலா லாருமா யாகுமோ
பலனுக்கான தருணச் சிரோமணி
பதித்தையா தரவேமீட்டி லாதிருக்கில் - மா. (என்)

௪. மருக்கமழ் பழனம் பெருக்குஞ் செங்கெல் மதிளுத்
திருஅப் துல்லா கண்ணு
இருக்கத் தரிக்கமகு டேசப்ர காசப்பொன்
வருசொர்க்க மமெய்த்த பேராய தினவ
மகுடச் சேவை செய்நற் புரோதன
மகிட்சி யாமுகம் மகிழ்கனை ரட்சிக்க - மா. (என்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்- ஆனந்த பைரவி- ஆதி தாளம்.

பல்லவி.

நினைத்துநி னைத்துச் சொன்ன
நேயப்பிர காரத்திலே
நினைக்காதென் திருப் பேனே.

அநுபல்லவி.

அனைத்தும்ப டைக்கு மென்கோ
னருள்கரு ணையி லொன்று
முனைக்குஞ் செம்ம லானமு
கம்ம தகும துவே, (நினைத்து)

சரணங்கள்.

௧. எனதுருவம் முழுது மிசைந்தே யடிமைப் பட்டு
இருபாதத் துணை நாளுந் துணையாய்ப் பிரியந் தொட்டுத்
தனதுபர ராட்டினுற் சந்தோஷ மெதுமட்டுச்
சகலசம் பத்து மெல்லாம் தவப்ரபலி யமுநங் கிட்டும். நினை

௨. வருந்தி வருந்தி வேறு வசனத்தைத் துதிப் பேனே
மலர்ப்பாதந் தரா விட்டால் மனதுசம் மதிப் பேனே
திருந்துத வில்லா விட்டால் ஷேய்த்தானைச் சகிப் பேனே
தேடித்தே டியே யென்றன் சிந்தையுட் கொதிப் பேனே. (

௩. தாயுந்தந் தையு மூங்கள் சரணக தியை நம்பித்
தமியே னடிமை யான தாச்சதே மனம் வெம்பி
நேயம்பி ரியமாக நினைந்தேன் கிருபை விரும்பி
ரட்சித்துக் காப் பாத்த வேண்டு மனந் ததும்பி. (நினை

௪. சங்கம் பயிலும் வாவித் தடமாமக்க மூரீர்
சகலநா ளுந்துதிப் போர்க் கருளும்பொற் பாதரே
சிங்கமப் பல்லா பெறு செல்வத்த வப்போதரே.
செய்யி தற்றசூல் மூகம் மதுமகு மூதரே. (நினை

முற்றிற்று.

காயற்பட்டணம்
பிரபு-நயினர் வங்கிஷத்தி லுள்ளவர்களாய்
அங்கிருந்து சென்னபட்டணத்தில்வந்து குடிபதியாயிருந் தவ
மகா வரகவி வாக்கிய ரான

உதுமா னயினூர்ப் புலவ ரவர்கள்

பாடிய பதங்கள்.

கீர்த்தனம்-இ-ம்-கமாஸ்-ஏக தாளம்.

பல்லவி.

ஆரா தாவினி நீரா தரவல் லாம
லடிமைக்கி னிவே றேது—சொந்த
அடிமைக்கி னிவே றேது.

அநுபல்லவி.

சீரார் குங்கும மலர்த், தாரார் புயரே யேந்தப்
பாரோர் புகழுரூப, காரப்ர பூவே மலர்ப்
பாதரேமக், காநகர், வாழ்மகு
மூதரே நபி, மோர்கவி லேவெகு
பாத்ர வானீர், குறைஷிகள், கோத்ர மானோய் - தீனுன்வர்
பாவவி னாசவல், லாசச வாசப்ர
காசவி சேஷசல, ரீசல ரீசெனப்
பலதிசை கவிஞர், மருவலர் திறைகொடு
பரவவே வருமிரு, பதிமுகம் மதவே. (ஆராத)

சரணங்கள்.

௧. முன்ன மாதியிறை, தன்னொளி வினிலொரு
முத்தவ தரங் கொண்டீர் - வெகு
வன்ன மிலகு ஜெப மாத்தினில்
மரகத மயில்வடி வென நின்றீர்
அன்ன மாகி மலக் கூத்தில் மகிழ்ந்தீர்
அறு வாருக் கறிவுகள் விண்டீர் - உயர்
தென்னிலகிய எக்கீன் மரஞ் சென்றீர் - இறை
திருமறை யெனுஞ் செழுங்கனி யுண்டீர்
விண்ணமி லாறரு மானிலத் தாத
தன்னை யெல்லா மொளிவா லமைத்திடப்
பின்னுள காலமெல் லாந் துதித்திட
வுன்னின தா லதெல்லா முடித்திடப்
பண்ணின வண்ணம தென்றொரு நன்மணி
தன்னிறை மன்னவன் முன்ன நிறுத்தியே
பார்த்த தாலே, பயந்தது
வேர்த்த தாலே, யூங்நீர் கொடு
பாரம் லாக் கபு லாக்கறு ஷாங் கூறு சீர்பெற
மார்க்கமுண், டாக்குநீர், ரார்க்குமே
பகாரி தருதிரு பதியினி லினியுமை
நிகரொரு வருமிலை, யருமதூ நபியே. (ஆராத)

உ. அம்பை நேர்விழிய, ரம்பை மாதருட
னனுதின முறவாடி - வெகு
துன்ப மிகுத்திடு மிபுலீ சென மொரு
துரோகித னுடன் கூடிச்
செம்பொன் னுடை மிகுதிகள் தேடிப் - பலஞ்
செய்யும் வழிகளி லேசெல வோடிப் - புவி
இன்ப சுகமதி லிருதயம் நாடிப் - பக்
திரவி சரசமதி லேவிளை யாடி
வம்பனி ரக்கமிலா மனத்தின
னிம்பவி ளக்கமிலா னினைத்து
அம்புவி யிற்குள பேர் நகைத்தவன்
கம்ப மென்க்கென நீர் மறுத்தில
னம்பினே னும்பா, இன்புக மும்பெற
வம்புசெ யும்பிழை, யும்பவ மும்பொறு
நாளை நின்று பயந்தழும், வேளை கண்டு - எள்ளத்தனை
நாடிய றெப்புட, னெப்படி யானுமன்
ருடியே பொற்பதி, யிற்புக நட்பருள்
நனைமல ரொழுகிய, பொழில்செறி சுவனமென்
னகர்வள ரருமதா, நபிமுஸ்த பாவே.

௩. மங்கு லேழு மொரு, கங்குலி லேக டந்து
வரவிறை யருள் பெற்றீர் - வெகு
இங்கித வசனமி, தங்கொடு மறுவினி
லிறைமுனம் வச னித்தீர்
வங்க மேறிச்சக் கூனை ஜெபித்தீர்
மறிமா னுக்கொரு பிணையென வுற்றீர் - கா
மங்குலி தனிலா றழைப் பித்தீர் - விஷ
மதனை யமுதம தாக்கியே வைத்தீர்
துங்க மிகுத்தம வாசி யுற்றொரு
திங்க ளழைத்திரு கூறு வைத்திரு
செங்கை புகுத்திவின் னேற வைத்தொரு
மங்கையெ னத்தசை யா லமைத்தது
டங்கொரு வங்குயிர், செங்கர முங்க

விடங்கொள் கருங்கல்நெ, ருங்க நெருக்கிய
ஆச்ச ரீகர், அதிஜய, மோட்ச பாகர் - விண்ணோர்க்கர
சானவர் நான்முநி, யோனென வானெழு
மீனது தான்சிர, மானதி லானவா.
அடிபடி தொட நெடு, முடிசுட ரிடவிறை
யவனரு ஷினிஒயர், தருகுரு பூபே. (ஆராத)

௪, சுத்த ஞலமத, மைத்த நாயு னொரு
தூயவன் மகு பூபே - எங்க
ளுத்தம ரன்னுதமு; தற்றிரு நபிகளி
துயர்தவ முறு கோவே
வெற்றி சேர்குறை ஷிக்குல வாழ்வே - புவி
வேந்தர் பரவவே வருமக மேர்வே
முத்ரை தரித்திடு புயமுயர் காவே
முறுசல் நபிகள் புகழ்ந்திடுந் தேவே
அப்துல் முனுபெனும் வேந்தர் மெய்த்தவ
புத்ரஹா ஷிம்கிளை சார்ந் துதித்தவ
ரப்துல்முத் தலிபெனும் வேந்த ரப்துல்லா
னெற்றியி லுற்றொளி வாய்ந்த புத்திர
பற்றல ருற்றக, ளத்திடை வெற்றிபொ
ரத்திசை முற்றும், தத்தைகி ளுத்திய
பாக்யவா னீ, ரதிஜய, வாக்ய வானோர் - சதாதினம்
வான்மதி சுற்றுமொ, துத்தல மானமக்
காநக ரத்தினி, லுற்றா சுற்றவா
பதிகனி லதிஜய, பதிதிரு மதியெனு மதினமென்
பதிவ்ள ரகுமது நபிமுஸ்த பாவே. (ஆராத)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-திரிபுடை தாளம்.

பல்லவி.

செம்பொற் பதமே பாவவி னசீ
தெரிச னையே கைலாசவுல் லாசம்.

மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

அநுபல்லவி.

அம்பொற்ப திமதினத் தரசரி றஞ்செங்க
ளால நபியே யாற, சூலேமே லவன்றாதே
அமர ரநுதினம் பரவு மலருரு
அகில் தலமுழு தினுமே புகழ்தரு.
கமல மலர்மகள் மருவி வளர்தருங்
கருணை நபிமுகம் மதுவே யுமதிருச். (செம்பொற்)

சரணங்கள்.

௧. ககனி லெழுக முகிற் கவிகை தருத லாலும்
காதங்க் மள்கஸ் தூரித் தாது வருத லாலும்
சகல லோக ரட்சக னருள் புரிந் ததி னாலும்
தரள மணியென் றுநி சமுகத் திறைந்த தாலும்
தவமே பெறவெழு கடலி லமைபவ
சசியி னிகர்வன்ன மயிலென் றமைபவ
மவுன முறளக்கின் மரயீ திறைபவ
மனுடர் வடிவவ தரித்த மருஜூதே. (செம்பொற்)

௨. அஹதி ஷஹதா யகு மதமீ மானதி னாலும்
ஆல மஜ்வா ஹஜி சாமா வானதி னாலும்
ஜெகமீ தரளக் கண்சந் திரனை யழைத்த தாலுந்
தேவர் பரவுமறு ஷேறிவந் ததி னாலும்
தினமு முமதி ஜயமே வளர்தலும்
திசை ராஜர்க டிறை கொடுவந் திறைதலும்
கனக நவமணி முடிமன் னவர்களுங்
கதமதனை நித்யந் துதிசெய் திறைதலும். (செம்பொற்)

௩. நபிகள் நாயகநபி நபிஞரா னதினாலும்
நானெ யேழையை யாள நாத ரானதி னாலும்
கௌலற் கவு தருத்திற் கதிபரா னதி னாலும்
கவள மகுழு தானைப் பவனி வருத லாலும்
கவரி யிருமருங் கினிது போடலும்
கவிதை வெகு பறவைகள் பாடலும்
சுவன நக்ரம் பயர்க ளாடலும்
சுரிதி தெரிமறை யவர்கொண் டாலும். (செம்பொற்)

௪. ஸ்ரீமதா யெங்குமே நிறைந் திடுகம் மாதி நாதரே
சதமா மறைதேர் சருவ சத்ரகுரு நாதரே
அமுத ஜனனர்கள் பணியும் மாமலர்ப் பாதரே
ஹராஹீம் கிலீவா மூப்துல் லாதந் தருள் போதரே

அருஷி னிலுமுயர் சிரசுல் லாசரே
அவனிக் கதிமக் காநகர் வாசரே
அரசர் மகிழ்புகழ் ஜெயப்ர காசரே
அகுட தெனுமுகம் மதேயெங்கண் ணேசரே. (செம்பொற்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-சாவேரி-ஆதி தாளம்.

பல்லவி.

ஆ யெந்தன் பொங் காரம், ஆல நபிக் கிந்நேரம்
ஆர்தான் சொல்லுவா ரன்னமே.

அநுபல்லவி.

காயுங் கதிரொளி, பாயும் நறுமலர்க்
காவு செறியுமக், காவுக் கிறையருள்
நாய னருள்மறை, நாத ரெனும்நபி
ஹைரென் நினிவரு, வாரோ வறியேன். (ஆ யெந்தன்)

சரணங்கள்.

௧. துன்பமாம் சிறைச் சாலை யினிற்றுயர் தீர்ந்திலேன் - வெகு
தோகத் துடனெழுந் தாசைக் கடற்கரை சேர்ந்திலேன்
வம்பனு மிபு லீசைப் பயந்துளந் தேர்ந்திலேன் - பெரு
மாயப்பிர வஞ்சத் தீயெனைச் சுடுமென்று ராய்ந்திலேன்
எனக்கினித்
தம்பமாம்நபி சமுக மதிற் சென்று
சரணம் பணிந்தத புடனே முன்னம்நின்று
என்பிரா தின்ன படியென் றுதைவிண்டு
இரங்கும் படிசொல வெனக்கிங் கெவருண்டும். (ஆ யெ)

௨. வஸ்து வானவன் றெரிந்து அதல்ச் செய்யும் நேரமே - நபி
மாரும் பயந்தழு வார்கள் மனுடரெல் லோருமே
முஸ்த கிமெனும் பால வழிநெடுந் தூரமே - அதில்
மோச மடைந்தவர், நோஷம் நினைந்தவர் யாருமே

நபி யல்லால்க்

கஸ்தி யாவிரைக் கிரங்கி யருள்செய்யக்
கடனென் றவரல்லா லடிமை தனையுய்ய
முஸ்த பாநபி பதத்தில் விழுந் தையோ
முறையிட் டழுவவர் வரவில்லை யென்செய்வேன். (ஆ யெ)

௩. முன்னைநா ளகி யானி லிறையவன் விதித்ததோ - முழு
மோட்டுத் தனஞ்செய்யக், கேட்டு அடிமைசம் மதித்ததோ
அன்னை நீர்குவ ளறைக்கு ளவதரித் துதித்ததோ - பொரு
ளாட வவனியிற் பாடிப் புருடரைத் துதித்ததோ

இறையருள்

பன்னு மாமறை பயில்வல் லவர் சொல்லைப்
பழித்ததோ வந்து லபித்த திறதொல்லை
யென்னமோ தெரி யாதென் செயல்களை
யெவர்க்கு மெனதள விரக்கம் வரவில்லை. (ஆ யெ)

௪. கத்த னதிறெப் பொருவ னிறையருட் டேராம் - மலர்க்
காவு செறியுமக் காவுக் கிறைநெறி நீதராம்
அப்துல்லா தவத் துதித்த மகவெனும் நாதரா - முஹசலின்
ஆர்க்கு மிறைநபி மார்க்குந் துரைமகு ழுதராம்

நவநீதச்

சித்ர மாமயில் வடிவுற் றிறைதன்னைத்
தெரிசித் திருந்தவர் பிரிசத் துடனென்னை
மெத்தப் பாவியென் றிரங்கி யிறைமுன்னே
மீளுங் கிருபைத் தயாள ரெடி பின்னே. (ஆ யெ)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதி தாள

பல்லவி.

நடந்த தேவ நீதம தாமையா - மிஃருஜுக் கன்றுநீர்
நடந்த தேவெகு புதுமை தாமையா.

அநுபல்லவி.

நடந்த தேவ நீதம தாமீக்க
நகர் வளர் செய்யி தருமதே யென்றுந்
திடந்தரு மாதி யொருவன் கிருபை
செய்ய தீனவ ருய்ய நீரன்று. (நடந்ததே)

சரணங்கள்.

௧. சிறக்கும் றமலான் மாத மொன்பதாந்
தெய்தி சன்னிர வெய்தி யேசபா
மறுவாவிற் றெழு துறங்கும் போதன்றே
ஜிபு ரீலடுத்திறை
வாச்சொன்ன னுமை யறுஷின் மீதென்றே
அழைத் தேகும் பொழுது
துறவர் மீக்காயீ லுடன்றுக் காயிலுந்
தாரக்கங் கூடக்கொண் டிறங்கல் வாசியிற்
குறையறப் பேசி வரும்பு றாக்கின்மேற்
கொண்டு காரணம், விண்டுநீ ரப்பால். (நடந்ததே)

௨. இன்புறும் பீள்ளி பைத்தல் முகத்தீ
சிடத் திறங்கியே படைத்தோ னருளால்
அன்பி யாவன பேரையுந் தொழுவித்தீர்
நபி மார்கள் புகழ
இன்பமாம் சொர்க்கப் பாலுண் டருள் பெற்றீர்
விண் ணிலேறும் பொழுது
உம்பர் படிக்குப் படிவந் தாலரித்தி
யுவர் தெடுக்கவே, மகிழ்ந்து படிகள்
ஐம்பத் தைந்தையுங் கடந்து வானகத்
தறைந்ததும் வாயிற் றிறந்தது மப்பால். (நடந்ததே)

ந. அந்தரத் தொளிர் விதுறத் தல்மூந்த
ஹறாவும் ஜிபுரீல் மேவுந் தலமும்
இந்தெனுஞ் சிங்கா சனமதுங் கண்டே
பெருங் கடலில் மீக்காயீல்
மூந்து மிசுறு பீல்மூன் பாய் நின்றே
அறு ஷேறும் பொழுது
கந்தரப் புய ஹபீபே கபுசைக்
கழட்டா தேறுமென் றழைத்தா னருஷ
பிந்து மநுஷர் வெளியிற் பெருமை
பேச வேமனங் கூசாம லிறைமுன். (நடந்ததே)

ச. தரள மாணிக்க மரகத சுந்து
ஸாலும் பலவிஸ் தாரத் திரைகள்
இருபத்தோ ரடுக் குயர்ந்த திரை சென்றீர்
ஒளி விளங்கத் திரைகள்
ஒருவகைக் கெழு பதினா யிரங் கண்டர்
அதி னீளந் தளமும்
திரைக்குத் திரையந் நூறு வருடந்
தூர முண்டதி னூடு சென்றிறை
ஒருவன் றிருமுன் மூடிகிப் பேசிமீ
றுவந்த தும்மன மகிழ்ந்தோ ரிரவில். (நடந்ததே)

ரு. ஆறு மாதமும் நோன்புந் தொழுகை
யைம்ப தொருத்தென் றெனபி ரான்சொல்ல
மாறி லான்மூஸா நபிமன் றுடியே
யொரு மாதம் நோன்பைந்து
நேரந் தொழுவென் றிறைமுன் தேறியே
வெகுமானம் பெற்றிடும்
ஈறி லாந்திருத் தூதரே மக்கத்
திறைவ ரப்துல்லா பெறுங்கு மாரரே
பாரெல் லாங்கரு ணேசரே மலர்ப்
பாத ரேமகு மூதரே யன்று. (நடந்ததே)

மூ ற் றி ற் று.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-சாப்பு தாளம்.

பல்லவி.

ஒருக்காலு முமை நெஞ்சில்
மறக்காம லிருக்கநீ ருதவிசெய் தருளுமையா.

அநுபல்லவி.

மருக்கமழ் மக்கா நகாரசு புரிந்தருளு மக ரீராஜா
வள்ள லாம்நபி மார்களி லேவெகு
தெள்ளி தானவ ராகையினு லென
துள்ளமீ தகலா தரவே புகழ்
விள்ளவுந் தரு வீர்மகு மூதரே. (ஒருக்காலும்)

சரணங்கள்.

க. புறக்கா னெனும் நல்வேதப்
பொரு ளின்ன தென்றறி யாதவ னுன்
பொய்யன் புலைகுலை செய்யச்
சுறுக்காய்ப் பவமே செய்யுந்
தொழில் லட்சண முறைமையி னுல்வெகு
துடுக்க னடுக்காச் செயலன்
திட்சணஞ் செய்யும் பேர்களிலே - வெகு
மிச்ச மச்சமில் லாதவ னுனவ
லட்சணன் சர ணேகெதி வேறிலைப்
பட்சம் வைத்தெனை யாளுமை யாவினி. (ஒருக்காலும்)

உ. எனக்கார் துணை நீரல்லா
லினித் தாரணி மீதினி லாதர
வில்லைச் சொல்லிடத் தேவரீர்
சினக் காச்சற் குண ரான
செய்கையி னுலிரு பாதமு மேநிதம்
தெரிந்து பொருந்த வேணும்நீர்
சித்த மேதய வாகவில் வேளையில்
மெத்த வேயெளி யேனிவ னுமெனக்
குற்ற மேபொறுத் தாதரிப்பீர் வெகு
உத்தி மக்கிரு பாகர ரேயினி. (ஒருக்காலும்)

௩. நடக்கும் போதினி லுயிர்
நடுங்கிக் கிடக்கும் ஸக்க ரூத்தினில்
நாலு பேர்களு மெடுத்தே
யடக்குங் கபூரினில் கொரந்
தலையு மருஷரு வெளியினி லேரின்
றழுது தலைகள் வெடித்தே
அஞ்சிப் பரதாபவி காரமே
மிஞ்சிப்புவி மானிட ரோடிடக்
கெஞ்சித் திரி போதெனை யாளவே
கஞ்சப்பதந் தாருமை யாவினி. (ஒருக்காலும்)

௪. தேச ராஜர் புகழுந்
திறலப் துல் லாதரு சேயெனும்
செய்யி தாகிய நேசரேஇ
ராஜரா ஜேஸ்திரிமக
ராஜரா ஜேந்திரன் பணிந்
திடுஞ் சரணவுல் லாசரே
ரத்ன மாமணி யாகிய நேசரே
சித்ர மாமயில் ரூபவு லாசரே
முத்ரை மேவுபு யாஜல ராஜரே
முஸ்த பாஙபி யேகரு ணேசரே. (ஒருக்காலும்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-சாப்பு தாளம்.

பல்லவி.

தந்தா லெனக் கன்பு சேரும்—பொற்
சரணபங் கய மலர்ச் சீரும்
தந்தா லெனக் கன்பு சேரும்.

அநுபல்லவி.

செந்தா மரையின் குலாவு தண்டலை மக்காச்
செம்மலே ஹபீபுரு கம்மதுவே காட்சி. (தந்தால்)

சரணங்கள்.

க. அஞ்சுங் கலங்காமல், நெஞ்சங் குளிர நும்
தஞ்சர் துணை பெறவே - இபுலீசு
வஞ்சன் துய ரறவே
இஞ்சொ லிசையனு ராகம் - சொல்ல
வெங்தெந்த வேளையு மோசும்
பஞ்செனவேயென் றுரோகம் - போகப்
பட்சம்வைத் தோட்சித் தேயனுக் ரேகம். (தந்தால்)

உ. தேனுங் கனிநறும் பாலு மறுசுவை
தானுஞ் சரிசொல்லவோ - எனச்சொல்ல
நானுந் தொழும் பல்லவோ
பானஸூ ஹா துசொன் னோர்க்கு - மங்கை
வாழுமா லிப்புல வோர்க்கும்
தீனுல மாக்களெல் லோர்க்குந் - திருச்
சென்னத்தைக் கண்டவ ரைக்
கண்டவர்க் கும்போல். (தந்தால்)

ந. எந்தத் திரையுங்க டந்தப் புறஞ் சென்று
சிந்தித்த காரணமே - இறையருள்
சந்தித்த பூரணமே
அந்தமில் லான்திரு வேதம் - முழு
தாய்ந்துரைத் தீருங்கள் போதம்
புந்திக் கருணையெப் போதும் - தரப்
பூதல மீதுப டாதபொற் பாதம். (தந்தால்)

ச. பத்தினி மின்பாத்தி மத்தை யருள்நவ
ரத்தின மாமணியே - புகழின்வி
சித்திர மேலணியே
எத்தனை பேரெனைப் போலே நம்பி
யீடேற்றம் பெற்றார் மேன்மேலே
அத்த னருட்கடல் நாலே - செய்தி
தானமு கம்மது வேயாற லாலே. (தந்தால்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-ஆதி தாளம்.

பல்லவி.

எல்லார்க்குந் துணை நீரையா — துணை
யல்லாம லெனக் காரையா.

அநுபல்லவி.

அல்லா ரும்ம சல்லி அலாமு கம்மது
யாநபியே யாமு கம்மதே - முஸ்த
பாநபியே யாமு கம்மதே. (எல்லார்க்கு

சரணங்கள்.

௧. எத்தனுக் கேத்தின பேரையா - சொந்த
ஏழை யென்றே யெனைக் காரையா
சித்தம் வைத் தன்புசெய் வீரையா - எங்கள்
செய்யிதுவே யாமு கம்மதே - முஸ்த
பாநபியே யாமு கம்மதே. (எல்லார்க்கும்

௨. தினஞ்சொல்லிச் சொல்லிக் கெஞ்சி னேனையா - தங்கள்
திருப்பாதத் துணைநம்பி னேனையா
மனஞ் சொல்லினல் வருமபேதையா - எங்கள்
மாமணி யானமு கம்மதே - முஸ்த
பாநபியே யாமு கம்மதே. (எல்லார்க்கு

௩. சீர்மதி னாவனு கூலரே ஜெய
சிங்கமப் துல் லாதரும் பாலரே
தார்மரு வும்புய சீலரே - உயர்
தாசிமே யாசின்மு கம்மதே - முஸ்த
பாநபியே யாமு கம்மதே. (எல்லார்க்

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஏக தாளம்.

பல்லவி.

உபகாரர் சம்பன்ன ரிவர்போ லிந்த
உலகினிற் காணே னடி.

அநுபல்லவி.

நவுகார ணமா மக்க நகர்க் கர சான தீர்
பவகா ரகற்றி மூஸ்த பாமகு மூது நாதர். (உபகார)

சரணங்கள்.

க. செம்பொற் பதங்கள் ரண்டுஞ்
செழுஞ்செங் கமல புட்பஞ்
தெரிசித் தவர்க்குஞ் சொர்க்கஞ்
செழுஞ்சீட் டிறைகை யொப்பம்
நம்பின பேர்கட் கிமோ
ளுக்கு நாள் நிரப்பம்
நபிசல வார்த்தை யோது
மவர்மே லிறை விருப்பம்
சுறைக்குங் குமச்செழு நணைமலர்ப் புயத்தார்
நபிகள் நாயகமுத் திரையதி ஜயத்தார்
வெறிக்கும் பூரணமதி வதனபங் கயத்தார்
விளங்குந் தாஜிலலங் கிர்தவொளி மயத்தார்
விரும்பு மார்க்கமது களிலுள வழியார்
விதியெந் நாளுமன மதில்நினை வொழியார்
கரும்புந் தேனமுத மெனுமறை மொழியார்
கருணை வீற்றிருக்குங் கமலமென் விழியார்
கண்ட தீண்டா, இதுபோ லதிஜயம்
கருணை கரப்ர பூவானவர். (உபகார)

உ. எண்போற்பா விக ளர்க்கு
மிரங்கு மேலைமப்ங் காளர்
இறசூல் நம்மை ரட்சித்தி
டேற்றுங் கிருபையாளர்
வெம்பு நாளை மகுஷர் வெளியி லாளுந்த யாளர்
மிகவாய்மன் மூடிசொர்க்க
வீடுதரும்வல் லாளர்
விரிக்கும் புகழினறு ஷினிலுயர் சிரத்தார்

விபுத ராஜாதி பரவும்லட்சணத்தார்
புரக்கு மார்தர்களி லதிகசற் குணத்தார்
புவியுள் ளோர்புகழும் புருஷாத் தினத்தார்
புவ்னியில் யார்க்குமருள் தருமக ராஜர்
புனித வாதிகமி களில்விசு வாசர்
பவவி ஞசாதி ஜயமருள் நேசர்
பதிபொன் னூரில்வரும் பவனியுல் லாசர்
பாக்யவா னிவர்போ லுண்டா
பதினென் ணுயிர மாலத்திலு மில்லை. (யூபகார)

௩. காத வழி கஸ்தூரி
தமழுங்கா ரண மெய்யர்
கரிய முகில்க ளஞ்சக்
கனகஞ் சொரியுங் கையர்
வேதிய ரெல்லாங் கண்டு பிரமித்திடுஞ் சமயர்
விதமாமே கக்குடையர்
விசுவா சர்க்கெல்லா மெய்யர்
விழைப்பொன் னுலகினி லுறுதிரு மணத்தார்
வெயில் படாதநிழ லடியது தரத்தார்
தழைக்குந் தீனுலகில் நடத்துஞ்சற் குணத்தார்
தரணி யேழ்கடந்த சரணசுந் தரத்தார்
சலதி மீதில்முழு மதிவர வழைத்தார்
தலைவ னவபு ஜகினுடல் குழைத்தார்
வலையின் மானின்கலை மறிவர வழைத்தார்
மகர வான்கடந்து வரப்புகழ் விளைத்தார்
மார்ந்தர்களி லெவருண்டும், ஆனலிப்படி
மகாத்துமா இவரல்லால் வேறில்லை. (உபகார)

௪. முறுசல் நபிகள் யார்க்கு
முதல்முத் ராங்களி சேஷர்
மூமின்க ளுக்கரசர் முருகார் மக்காவின் வாசர்
குறைவி லங்கிஷர் ஹாஷீம்,குலத்துக் காசுல் லாசர்
கோமானப் துல்லா செல்வக்
குணரத்ந மான நேசர்

கொடைக்குத் தருமிக ரிலையது காணுங்
குலவு வான்மதியம் நிகரிலைத் தோணும்
நடக்கை யாவர்க்கு நிதமனம் பூணும்
நடந்த பேர்க்குச் சொர்க்க நயீசுகங் காணும்
நரரெல் லோர்க்குமம ரோக்குமுன் னவராம்
நபிக ளாதிநபி களிலும்பின் னவராம்
வரரெல் லோருஞ்சிர சிறைஞ்சுமன் னவராம்
மதினம் வாழுமகு மதுநபி யிவராம்
வார்த்தைகளோ சொன்னுற் புறக்கான்
மறையினுள் ளதைச்சொல்வார். (உபகார)

முற்றிற்று.

காயற்பட்டணம்

பாவகைவல்ல புராணீகரான

செய்கப்துல் காதிர் நயினர் லெப்பை

ஆலிம்புலவரவர்கள்

பாடியபதங்கள்.

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-சாப்பு தாளம்.

பல்லவி.

உம்மை யல்லாலெனக்
கொருவரு மில்லையென் கோவே.

அநுபல்லவி.

இம்மைக்கு மறுமைக்கு மேகபொரு ளாகிய
செம்மலே யதிகமு கம்மது நயினரே. (உம்)

சரணங்கள்.

க. ஆதி திருவொளியி லுதித்து - உண்மை
யறிவா லனுதினமுந் துதித்து

நீதி யுளகுணங்கள் கதித்துப் - பல
நிலைகளெல் லாம்நின்று மதித்துச்
சோதி யருவாகுடன் றொடரும்றா றாகிய
வேதமா லங்கட்கெல்லா முண்டயவஸ்து வாகையால். (உம்)

௨. அமவாசை யிரவிருள் பரந்து - கொள்ள
அதனிடை நிலவொன்று நடந்து
உம்து திருமுகமுன் னடைந்து - மன
முவந்து கலிமாச் சொலித் தொடர்ந்து
இமையவ ராகினு மிவ்வரைத் தொடாதவர்
சுமையாவ ரேயென்று துதிக்கும்பொரு ளாகையால். (உம்)

௩. கர்தம் பரிமளிக்கும் கானமும் - மனங்
காணரி தாகிய ஞானமும்
வேத வசனமருள் தானமும் - ஆர்க்கும்
விளங்க நேர்வழி காட்டு மானமுஞ்
சீத முகிற் குடையுஞ் சீலமு மெவர்கட்கும்
பூதலந் தனி லில்லாப் புதுமை வஸ்து வாகையால். (உம்)

௪. அப்துல் முனபருள் பேரரே - எங்க
ளப்துல்லா வருளுங்கு மாரரே
மெய்ப்புகழ் சீர் மக்க வூரரே - இந்த
மேதினி யாள்ஜய வீரரே
செப்புங் கவிதை யாளன் செய்கப்துல் காது
ஒப்புங் கருணையரு ளுண்மைமு கம்மதுவே. (உம்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-ஏக தாளம்.

பல்லவி.

நம்பினேன் னையா லேழை—நாளுஞ்
செம்பொன்மா மலர்த் தாளே.

அநுபல்லவி.

இன்பஞ்சேர் மக்க வாழும் - எங்கும்
இசையுங் கீர்த்தியென் னாளும் - பூவி
லின்மை மறுமையுமு கம்மது நபியே யுமை. (நம்பி)

சரணங்கள்.

க. புள்ளி மான் புகழ் கோவே - வேடன்
பொருந்து வலையி னறச், செருகு கவலையுள
புள்ளிமான் புகழ் கோவே - யீனும்
புதிய மறிக்கமுத, முதவ வமுதமுது
புள்ளி மான் புகழ் கோவே - மீளப்
புகலு மறி யமுதுண் டகமு மகி ழுடனே
புள்ளி மான் புகழ் கோவே
பார்த்துப் புகிதமே கொள்ளுந் தேவே
தெள்ளுமா மறை நாவே - ஆசை
தேட்டமா முஸ்த பாவே - வாசந்
திசைகள் கமழுமரு, ளிசையுந் துரையே யுமை. (நம்பி)

உ. பாவமே நாளும் நாடிப் - பொல்லாப்
பகைய ணியுலீ சணை, மிகவு முறவு செய்த
பாவமே நாளும் நாடிக் - கோபம்
பழிகொள் பரதையரா, விழிக ளகமுங் கொண்ட
பாவமே நாளும் நாடி - வேதம்
பயிலு முறை மைகளை, முயலு மனது கெடப்
பாவமே நாளும் நாடிப் - பொல்லாப்
பாதக குற வாடி
ஆவலாய்த் தான்பந் தேடி - மீறு
மாசையா லுள்ளம் வாடிச் - சோப
மழுகை கவலை துயர், மூழ்து மகல வுமை. (நம்பி)

ரு. மக்க மாந் திரு வூரா - வாவி
மலர்கள் சொரியு மரு, விலைகள் பரி மளிக்கும்
மக்க மாந் திரு வூரா - வாழை
வளைகள் மணிகள் தர, வுழறி யுகளும் வயல்
மக்க மாந் திரு வூரா - சூழும்

வகைகொள் துடவை களில், வதுகை கனிகள் சொரி
மக்க மார் திரு வூரா - ஹாஷிம்
மருவுதின் குலப் பேரா
ஹக்கன் றா தான மேரா - நீதி
அப்துல் லாதங்கு மாரா - ஆர்க்கும்
நன்மை பெருகியமு கம்மது நபியே யுண்மை. (நம்பி)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-தோடி-ரூபக தாளம்.

பல்லவி.

அஞ்சலென் றென்னை யருளோடு கைகொடுத்
தாள்வீரே நபியே.

அநுபல்லவி.

கஞ்ச மலருந் திருவாசி வளர்ந்து
காவு செறியுமக் காநகர் புரந்து
தஞ்ச மருளுமு கம்மது வேவந்து
தண்பாதம் ரண்டுமென், கண்களி லேதந்து. (அஞ்ச)

சரணங்கள்.

க. ஆதி யொளிவினிற், சோதி மிகுந்ததோர்
ஆணிமுத் தாயுதித்தே - எதி
ராக விருந்தும, னேக குணங்கள் பெற்
றன்புட னேதுதித்தே
தூதரென் றேதிரு நாம மெடுத்தே
தொல்லுல கத்தினி, லல்லலைத் தடுத்தே
ஆதர வாயுயர், நீதியை லெடுத்தே
யாளும் நபியேயிவ், வேளையி லடுத்தே. (அஞ்ச)

உ. வஞ்சக ரானவர், தஞ்செய லாணைதை
வன்மமென் றெண்ணுமல் - நாளும்
வண்மையி னவ்வழி, யுண்மை பெறும்படி
வாதவர் பண்ணுமல்

அஞ்சித் தொடர்ந்திடக் காட்டு மக்கணம்
அன்பு மிகுந்ததோ, ரின்பத்தின் செவ்வணம்
மிஞ்சிய மேனியின் கஸ்தூரி நன்மணம்
மெய்த்தவ மேபருள், சித்தம்வைத் திக்கணம். (அஞ்ச)

ரு. கத்த ளிடத்தில்மி, குந்த மகிழ்ச்சி
கனிந்திடப் பேசு கின்றீர் - இறை
கற்‌ஊ யிற்பிர, மித்தவர் சித்தம்
களிப்புற நீதி விண்டீர்
முக்திக்கொரு, வித்தெனும் நாதரே
முத்திமு கந்தேன, கத்திற்கொண் டேசென்று
சித்திக்குஞ் சிந்தையின் வாழ்வென வேயொன்றுஞ்
சிந்தா குலஞ்செல, வந்தெதி ரேநின்று. (அஞ்ச)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ௫ம்-தோடி-ஏக தாளம்.

பல்லவி.

எந்தன்னை யாளும் நீரையா - என்மீதி லன்பா
யெந்தன்னை யாளும் நீரையா.

அநுபல்லவி.

கந்தித்த பொழில் காகை, வந்துவு லாவுஞ்ஜெய
மூர்த்துவற மீதுமதா, சொந்த அடிமை யான
தோதக மடவார், தருமைய, லாலுள மிகவே
சோப முரிய, தாபமு, மதமதமே, தூரத் தனியே
வரா தாகுலா குல; மா நாளும் வாடிய
காரி சமிதகி சரிசரி காரி சரிகமா
கமப்ப தாப்பமு கமபத நீதப்ப தநிசா
ரிரீசா நிதாப்பம தாப்பரிம காரிச. (எந்த)

சரணங்கள்.

௧. பாவமும் பொய்யுங் கொண்டேன்
பாரோர் பலரே வசையுட னேமா
பாதக மூமதி கோபதாப - பாவமும்

தாதா பமகா மதபம காமா
பாதத்நி தப்பமர் தாப்பாம - பாவமும்

பாகு மறையோ நியமா பரிபூ
வாரணந்திபன்வி காரமாய்க்

காய வுள்ளாய்த் தகாததோர்
காரிய மதனி லிதமே கோதாய - பாவமும்
நீத தப்பதா தப்பமா பமகா
பாமதா தப்பமா பமகா
மாமக மப்பா மதாப்பம

பாம பாததநி தப்பமா தாப்பாம - பாவமும்
பாரு வினை தன்னிலே யுறைபா, மகார மதமு மறு
வழிக் கூர, மறவும் நாளு, மடுவி ரோத
விருள் மனமுறவு, மோடி யிபுவீசு
ளீனவன் முனிவாய், அடர்பொரவே
நெடு வுடலது, மிடாலிலா, தாக மய ருட
னீதொரு பொருளென அவை
மீதுநிலை கொடு சுய மாய

பாவமும் பொய்யுங் கொண்டேன்
பல்பல வினை நின்றேன்
ஆவலாய் மையல் கொண்டேன்
அழுதுவி ழைது ளன்றேன்
யேவ லான காரியங்க, ளெல்லாம்நீக் கியே நாளும்
மேவாம லகங்கார, மீதி லலைந்து கொள்ள
மேலவ ருரைபால், வழியதி, லேகட முறவே
விறுள்ள்வுயர், பேறுள்ள பலபல, காரணப் பொருளே
இதா மாது நீபெறுவா, யேழை யேயென
காரி சநிதநி சரிசரி காரிச ரிகமா
கமப்பா தாப்பம கமபத நீதப்ப தநிசா
கிரீசா நிதாப்பம தாப்பாம காரிச. (எந்தனை)

உ. காரணம் நிறை கோவே,
காடா னதிலே வரைமிசையே வாழ்
முனிவரு மணி பாத மேவக் - காரணம் - தாதா

காலு மழா லமதே யுணவோ
டார் மீதிடம ருத தோ
கேய முட்டனே அதிதமே
யாட வுணவுசெய் திடுமே மேலாய - காரணம் - நீத தப்பதா
காரி னுடலெண யானையின் மேலே
மேய அரசனுமே புடையி
ருமு மனது தேற இனிய
காவி னுறைசிலே யதுமுன்னேடி
மலர் வாவிநீ ரதை யுணவே,
இலே தனுவே, யெவர்களு மிது புதீதென
மான முள மிசைகொளச்
சதாதின மிதுபோல் மிகமிக வரிதாய
காரணம் நிறை கோவே
காட்சிய னேக தேவே
ஆரணம் வளர் காவே
அனைத்துந் தெளிந்த காவே
சீரணி கொண்டு நித்யம்,செல்வம் பெறவே நாளும்
பேரணி னவத்த நீபா, பெருமை யரசே யேழை,
பேதக மடவார், தகமது வேகுதி கொளவே
பீடு செறியும், நாடு முள முதிய
பேர்களி னீரையா
துதி தேயு மாதவ, வாதோடு கூடிய - காரி சமிதநி. (எந்)

௧. தென்னுகை தள ரூரா
தேமா மலரே சொரிதரு மேலாய்க்
கமுகிடை யடர் வானே வாவி - தென்னுகை - தீரதா
தேய முறுமா னிடர் கூறிய பேர்
சிரி னேர் புகமு லாவு நே
ரேது மிகவே விழாவெலா
மேவு முயர் வரமதுவே மேலாயு - தென்னுகை - நீத தப்பதா
நீதி னின மவையே, செல்லுமே, நாளும் வரிசையுமே
அதிக யோக மனுரு மேலு

மூயர் நயா குணமு மூறு
நவமு மேயு மரிதான, பேறு முள்ளவராய்
அம ருவராய், வறுமைக ளெவைசெலும்
மதா வீர மொடுகரி, மீதினத் தேயெனத்
தொழு, தேயுநனி, வள மிசைசேர்
தென்னூகை வள ரூரா
செய்யிது றசூல் பேரா
மன்ஹறசன் குத்தூ சாரா
மகவாகி வந்த தீரா
என்னூளும் புகழ்கவி, யிசையும் செய் கப்தூல் காதிர்
நன்னய முள்ளா தூய, நாதஷா ஹூல் ஹமீதே
நாவில மதிலே, யுயர்மணி, யாரொளி யெனவே
கோல மதிக சிலமு, மாருதி கமெனப்
பலர் லோக மீதிய, சீரேயு மாதவ-காரிச நீதகி. (எங்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ஆதி தாளம்.

பல்லவி.

அழுது கொந்து வந்தேன்—மகுமூ தரே
அடைக்கலம் புகுந்தேன்.

அநுபல்லவி.

பழு தகன்ற பெரி யோர்கள் புகழ்
பத்தி யுளமது, சித்த மிரங்கமிக. (அழுது)

சரணங்கள்.

௧. ஆதி யொருவனருள், மீதி லனேகபல
ஞானங் கடலில் வெகு
போதங் கலந்து மறை, வேத நறுங்கனியைத்
தீதன் றகல வுண்டு, நீதம் படைத் துலகி
லாத மெனு முடலி, லேத மறவே வந்தீர்
அருள்சி றந்தீர், நவம்கி றைந்தீர்
புவி யதனிற்

காத லுடையவர்கள், வேதனை போக்கிவிக்கும்
ஆதாரப் பொருளுங்கள், பாத செத்தியெனவே. (அழுது)

௨. வஞ்சக் குலை கள்வு, மிஞ்சுங் கபடுறைந்த
நெஞ்சன் பவத்தி னிடை, அஞ்சுந் தொழி லுழன்று
கொஞ்சுங் கிளி மொழியார், விஞ்சுஞ் சுவைப்ருகி
யிஞ்சொல் மறை வழிக, ளெஞ்சும் படிதிரிந்து
நஞ்சுண் கயலைப் போலே
பிரமை யாலே, சிறுமை மேலே
நிலை தளன்று
தஞ்சம் பெறும்படி நங், கஞ்சங் கடிமலர்த
ளொஞ்சுந் திருமுகமும், நஞ்சிந்தை துயர்தீர. (அழுது)

௩. சந்தார் புயதிமிச, மைந்தார் ஹபீபரசு
வந்தார் பலருளும, கிழ்ந்தா ரொரு மதிவ
ளர்ந்தா ரெனவுல, கிருந்தா ரெவரும் புகழ்
தந்தீர் நவமென் றுயர், கின்றூர் மறைவழிதெ
ரிந்தார் மன மதித்தே
நறைது தித்தே, நிறை விதித்தே
பல் பலதிசை
ஜொந்தார் செழுமரப, மைந்தா ரணியும்புய
கந்தா மணி விளக்கஞ், சிந்தா குலமகல. (அழுது)

௪. ஆசில் புகழ் வளர, மாசீர் பெருகு மக்க
மாசில் குறைஷிவழி ராஜ ரப்தால் முறைபு
ஹாஷி மூதவு மக ராஜர், முத்தலி பருள்
நேச ரப்துல் லாவிசு, வாசர்சந் ததியெனக்
காசிற் காரணங் கண்டீர்
பிறகு கொண்டீ, ரெவர்க்கும் விண்டீர்
காத வழிக்கு
வீசுங் கஸ்தூரி யுடல்க் காசி
மென வறிவின் தாசி மெனவுறுமயர்
யாசின் முகம்மதுவே. (அழுது)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-திரிபுடை தாளம்.

பல்லவி.

சகிக்கா தெனக்குத் தாணையா—வாரா திருந்தால்
சகிக்கா தெனக்குத் தாணையா.

அநுபல்லவி.

மிகைக்குங் காரணம் பல, வகைக்குந் தல மாகிய
நகைக்கு ளொளிபோற் சிறந்து - விளங்கு மக்கா
நகர்க்கு ளரசாகி வந்து - ஆலத்தை யீன்ற
வுருக்க அரும்புகழ், தொகுக்குமு கம்மது
உகக்குந் திருக் கழல், மூகக்கும் படியது
மிதிக்க அருளாதே, யிருக்கி லிப்போதே. (சகிக்கா)

சரணங்கள்.

க. ஆதி யொருவ னருட், சோதி யாகவே பல
பேத மனைத்துந் திரண்டு - விகற்ப மில்லா
மாதிரி யாகப் புரண்டு - அரசா கிய
அருவமு முருவமு மொருநிலை படவருஞ்
சுருவமு மிகமிக வுடையவ ரெனவரு
மருமலி திருவுட லொடுபுவி யினில்வரு
மொருநெறி தருமுகம் மதுமகு மூதே
திருவருள் புரிதர, விலையெனி லினிச். (சகிக்கா)

உ. துதிக்கும் நெடுவா னக, மதிக்கும் பெறு பேறினை
விதிக்கு மாரணப் பொருளே - உலக மெல்லா
மதிக்குங்கா ரணப் பொருளே - கானகத் தினில்
அதிவர்த்தகர் தகையுற்றிட வொரு
நதியைத் தனி வருவித்திடு மிக
மதி யுத்தம வருகைப் பெறுதிரு
நிதி கற்பக தரு வொத்தவ துரையே
இணை பொற்பத மலரெற் கருளாதிடி லென்றால். (சகிக்கா)

ங. மஞ்சு தவழுஞ் சோலை, மிஞ்சு மக்கா நகர்வா
ழின்சொல் விளங்கும் வேதரே - அப்துல் லாவருள்
தஞ்ச மாகிய தூதரே - உமத டிமை

நெஞ்சத் துயரொடு பலபிணி களுமிக
அஞ்சித் திசை திசை யிரிதர மனது
கெஞ்சித் தொழுவனு தினமன முமதிரு
கஞ்சப் பதமலர் தருவது கடனே
விஞ்சைக் கருணையின் கடல்முகம் மதுவே. (சகிக்கா)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-திரிபுடை தாளம்.

பல்லவி.

பாவச் சுமையால் வெகு பாரம்—கொண்ட
பையனை யாள்வ துபகாரம்.

அநுபல்லவி.

காவலர் புகழ்தரு வாரம்—வளர்
கருணைச் சாகு ஒலியே சாகிபே நானின்னேரம். (பாவச்)

சரணங்கள்.

௧. வேத கலைக ளெல்லாங் கண்டு - மன
வெறுப்பும் விருப்பு மிக வுண்டு
ஆதி யருளை நிதங் கொண்டு - எவர்க்கு
மருளு மொலியே, புவி, யாசை யதனைக் கொண்டு. (பாவச்)

௨. பாவி யிபுலீ சவன் கோளும் - நிதம்
பசப்பு மடவார் மையல் வாழும்
தாவிச் சுழன்றுவரத் தாழு - மதி
தந்தளித் தறிவுக, ளெய்த்தி ளைத்திட நாளும். (பாவச்)

௩. தருகி வளருங் குண சீலா - செய்யித்
ஜலா லுத்தீ னருளிய பாலா
மருளுந் துபந்த நனு கூலா - துரை
மகமேரே சாகு ஒலி சாகிபே ப்ல கோலா. (பாவச்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-ஆதி தாளம்.

பல்லவி.

சொன்ன சொல்லே யெல்லாம்நீ
றின்ன மதிக்கி ராகிற், றுயர்தீர்த் தருள்வார் யாரே.

அநுபல்லவி.

பொன்னக ரென்னு மக்கா, புரத்தினை யாளு மென்றன்
பூசா பலமே கரு, ணைசாமு கம்மது வேநான். (சொல்

சரணங்கள்.

௧. முன்னே ஹுலறத் தருள் பூத்தி ருந்தே - யது
முழுதும் வெளிப்படுத லேற்றிருந்தே
பின்னே வரும் நபியைப் பார்த்தி ருந்தே - மனப்
பிரிச மாகி வந்துங்கள் சமுகத்தைக் காத்திருந்தே நான்

௨. கொஞ்சுந் திருமொ ழியார் மய லாலே - வருங்
கொடிய பாவங்க ளெல்லா மலை போலே
அஞ்சும் பெருஞ் சுமைகொண் டத னாலே - எங்கும்
அலைந்தழு தம்பா தத்தில், விழுந்தெழுந்தேமுன் னலே

௩. மதிக்கும் பெருமை தந்தீ, ரெதிர் நின்றீ - ரொரு
மானுக் குயிர் கொடுத்தீர், வனஞ் சென்று
துதிக்குந் தயவுடைய துரையென்று என்றன்
துயரத்தைப் பலதா மயர் வாக வேயின்று நான்.

௪. துலங்கு மக்கா மதீனத் தனி கோலா - ஆரும்
துதிக்கு மப்துல்லா வரு ளிய பாலா
விளங்கு முகம்ம தேகற் குண சீலா - சொந்த
மிடிபு மாகுல முள்ள, அடியவர்க் கனு கூலாநான்.

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

வேதாதிபா அபயம், அபயந் தர
வேண்டும் பாத வுபயம்.

அநுபல்லவி.

நீதா ரட்சக ஆதி, நாதாக வுற்பவித்த
காதா மதிஜமகு, மூதா வெங்கும்ப்ர சித்த. (வேதா)

சரணங்கள்.

க. பூத காவித விநோத கபடனித
பூதி மோக தாபன் - மத
பேத கவுணப்ர சாத நிகுண வவி
வேக வேக லோபன்
கேத முக்கிய சூதன், விநோதன்
வாத நடன பாதன், விரோதன்
ஓது மாதரவி லாம லேதனி
யோடி யோடி மிக, வாடிவங் தேனினி. (வேதா)

உ. ஏக நவிதவனு ராக வமலனின்
னேக ரூப தேயா - வனு
போக புவனசு பாக நிர்க்குண
புநித யோக தூயா
லோக ரட்ச ணீகா, விபேகா
லோக வதிகசை யோகா - சுதேகா
மோக தாபபிர தாபவி மோசன
மோட்ச லாபக டாட்சவி லோசன. (வேதாதி)

௩. தேச பிரபல இராஜ மகுட வபி
ஷேக தூய பாதா - பிர
காச வதனவி லாச வசனப் பிரகார மாளும் நீதா
லேச பாஷ போதா - அதீதா
கேம விந்த நாதா - விதாதா
தாச னேழைமனவி சாரந் தீர்த்தருளுந்
தயவு செய்யவிது வேளை காத்தருளும். (வேதாதி)

௪. சுத்த தத்வபரி சுத்தகு ணாலய
சூர வேக வேலா - வொரு
கத்த னுத்தம வுப்பிர காரமதி
கார லோக பாலா

அப்துல்லா வருள்கு மாரா - ஜெயவீரா
ஆலு மாமதின வூரா - சிங்காரா
அத்த மீதுஜ லப்ரவாக மோட்டிய
அருமதே யெவர்க்கும் நேர்வழி காட்டிய. (வேதாதி)

முற்றிற்று.

பல வித்துவான்களாற் பாடிய பாடல்கள்

வண்ணம் - இ-ம்-சுமாஸ்-சாப்பு தாளம்.

குழிப்பு.

தந்தனந், தனதான தந்தனம்
தந்தனந், தனதான தந்தனம்
தந்தத் தானதன தான தந்தன
தந்தத் தானதன தான தந்தன
தான தனன தன தான தந்தன
தான தனன தன தான தந்தன
தான தந்ததன, தான தந்ததன
தான தந்ததன, தானனு
தனதான தந்ததன, தானதன தானனு.

ஆண் கலைகள்.

எங்கணும் ஸம தான வன்பர
முன்புறுங் கனிபூ மணந்தரு
பின்புற் றூரண மெய்ஞ்ஞான மித்தவ
னெந்தக் காலமு நல்லோர் மனத்துறை
ஆதியொளி யஹதிலே யிலங்கிய
சோதியொளி யுஹதுமய் வளர்த்தெழு
பூரணன் பழமை, நாயகன் புதுமை
நாத னென்றுமுள, வாஹி தின்கருணைச் - சீதனம்
ஒன்றிவந் தருவாஹி னங்குற
நின் நமர்ந்தபி தாலு மிங்கித

இந்தக் கோலமஜி ஸாம்லி சித்திர
லிங்கப் பேரதமனு வேழ் பருத்தபா
மீதினுரிய நருமான் விளங்கிய
தாதை பீவி மகவரென தொன்றுமில்
லாதவன் பருதி, சோம னும்பர்திரி
லோக மூந்துயிர்க, ளாகமும் பரம - சோதிமுன்.

இந்தினுங் கதிரானவன் பிரபை
யிந்தின் சுடர் தோகை மூந்தவி
லந்தத் தாருவுறை, காசி மூஸ்தபா
ஐம்பொற் பார்சுவன, மேவு மக்கமில்
வாழும் விறலப்துல், லாபிர சங்கசு
சேய ரருமதிற, சூல்த யங்கிய
வேத ரெங்கள்மரு, மூதர் சிந்தை மகிழ்
வாச மூங்குமும், ருண துங்கவொலி - சாகிபு.

ர்லமேவு சுந்தரவ ரோதயநன் னீதரே.

இங்கிதம் பலவாக மங்கலே
சந்ததந் தெரி வேதர் சம்பரம
மண்டபத் தான மரு மூதி னுற்றத
கண்டப் பால் வளமை தீவரோ ரச்சையின்
மீனுகர் சிறிது, நாளி ருந்தபின்
மாதவ ரொடு மூட, னேக டந்தகல்
யோக அங்கு பினு, மேக இங்கதிரை
மேலும் வென்றியொடு, ஸாலி கென்றமலே - மீதினில்.

மண்டபங் கிளர்வா ஸிபன் றரு
ரண்டரும் பெரியோர்முன் வந்துற
நின்றுற் றேகனின் சலாமு ரைத்தன
ரந்தப் போதர்கள்ஜ வாபு சொற்றனர்
வாசமு கம்மதுபு, காரி வந்திவண்
ஹாஜி யுமை றநக, ரேக விண்டிடும்
நீவி ரென்றுசொலி யேயகன் றவர்கள்
பேர்பு கன்றவுடன், மீளும் நன்றெணநம் - மூர்புகும்.

எங்கடங் குருவேலி ளங்கிய
திங்கடன் கதிராத வண்பிரபை
இந்தக் காரண மகா தவத்தவா
விந்தைக் காரண நல்லோ ரெனக்கொரு
காவல் ஷறகின் முறை, நீன் மனம்புரி
ஆவல் பெறு கிருபை, வாரி சுந்தர
மேக அன்புதரு, மோக முங்குதவ
யோக சந்ததம, நோக ரம்பெருகு - நீதர்.

கங்குலின் சுதையாரு கின்றக
ரண்டகங் கரமேல் வழங்கிட
கந்தப் பாவலர்கள் மார்கருப்பைய
ன்றப் பாலுயிர்க டிக வுற்றருள்
காயிர்மன மகிழவோர் குழந்தை மெய்த்
தீபமென வினிய தாய்வயின் றருங்
காரணம் பெருகும், பூரணந் தவமும்
வாரணம் புரியு, மாரணந் தெரியும் - நீதியா.

இன்சொலின் குருவேத நன்கலை
சந்ததந் திரு ஞான முங்கிய
செம்பொற் பாததுணை யேச வுக்யமு
வந்திப் போது தருவீர் மகிழ்ச்சியின்
வேளையிது சமையமே மகிழ்ந்துஇவ்
வேழை யடிமை தனையே யுவந்தருள்
பாரு மன்புவிழி, தாரு முங்களருள்
சேரு மென்றன்வினை, தீரு மெங்கள்குல - மாமணி.

கங்கை யென்றொரு, சேனை கொண்டுடு
டுண்டு டுண்டுடு டுடு டுண்டுடு
திந்தித் தாகிர்தி தாதி மித்திமி
தொந்தத் தோ தொகுத்த தோகு தத்திமி
மேள டமட டம, டாகு செங்கிணி
தாள கிமிததிமி, தோகு தொங்கிண
காக ளங்கதற, வீரர் தங்கள்படை
யோட வென்றவிறல், சேரு தங்கஜய - ராஜியர்.
மலைமேல் விளங்குசுட ரானகரு ணேசரே.

கங்கமழ்ந் தலர் வாவியுந் தட
மூங்கரும்புப் லாநறுங் கனி
செம்பொற் குதநெல்லி, வாழை நற்பழ
மைம்பொற் குரியனி, லாவெ றித்திட
மாதுவிளை தவளவே, யொசிந் தலர்
தாழை கமுகு நறை, மாவு யர்ந்தெழு
மாடை சம்ப்ரமணி, மேடை மண்டபமு
மாடமுங் கொடியு, லாவு கின்றதெரு - வீதிகள்.

சந்ததங் குதி தாவு தந்தித
வழ்ந்தசங் கீத ராகமுஞ் சொல்செ
மூந்தைக் காவும்நல்மக், காமு மூத்தொளிர்
விந்தைக் காவணம, தாடை சுற்றிய
சோலை கலாபமயி, லாட விங்கித
நீல மணிகள்குயில், பாட மண்டிசை
தாள மூங்கிளிகள், போட வண்டுகுழல்
பாட வந்தவன, மோடை துஞ்சுமணி - யாதுலர்.

கண்டருங் கனி சீனியும் பழ
மூண்டெழப் பசி தீரத் தின்றரு
ளுஞ்ச காயர் மரு, மூதர் மெய்ச்சிய
இன்சொல்ச் செய்கு அப்தல், காதிர் புத்திரர்
ஞான கலைகள் சொரி, மாரி சுந்தர
மொழியுமரூவியுல், லாத வம்புரி
காவல் பொங்குபள்ளி, வாயி லெங்கு மொலி
மார்விளங்கு வரு, தாபு ரந்தனின - ராதிபர்.

வளமேவு மைந்தருவிளங்கியபொன் னூரரே.

முற்றிற்று.

வண்ணம்-இ-ம்-பைரவி-சாப்பு தாளம்.

குறிப்பு.

தனதத்த தானதன தத்தா
தனனதன தனனா
தனதத்த தானதன தத்தா
தனனதன தனனா
தத்தன தானன, தத்தன தானன
தத்தன தானன, தானன தானன
தனதான தந்ததன தானனா.

ஆண் கலைகள்.

அலைபுக்கு ளானநடு முத்தே
பிரபை தரு முறுவேற
முடிவற்ற தாலி லொளிர் கத்தா
வெருவுரு வரிதா
யத்தனிலா யனா, தத்தனிலா
யுஷ்தத் துயர் வாஹி திய்யா - சமதேகன்.

ஒருதத்த ஞதிதிரு வஸ்தே
நறைமல ருறைதே
னிறை தித்த வோசைபெறு நட்பே
தர்ணை மனை யிணைசே
யற்றவ ஞாணிலி, சுத்தம னேகர
நித்திய ராசத, மேவிய சோதி.

அலையெட்டி வீசுகடல் மட்டே
மூரக நாகமே
மெழுசத்த மாமுகில் பிலத்தோ
டருஷா குருசுதீ
ளத்தல மேலணி, யித்தல மேழ்கக
னத்தொடு வானுடு, பானுச காயம்.
அஃறிணைகள் விந்தை நபிமார்.

அணி சுற்றி வீசுதிரை யத்தேழ்
சதுப்து விதமாய்த்
திடமுக்தி பாதகம கத்தா
விலகிய கலபோ
டற்புத வானவர், கற்புள கூறுல்ஹீன்
மெய்ப்புற் வாகுயிர், யாவுமுன் ஞதி.
நபியுற்ற சோதியில மைத்தே
நபிபுவி வரவே
அருள் சிந்ர ஆதமைப்ப டைத்தா
னவர்சுட ரிவர்மே
லத்தனி யோனிறை, வைத்தபி னேதா
நெற்றியி லேயொளி வீசும்பிர காசர்.

அறுகொத்த மீறதில தத்தார்
தயருயர் விழிமே
இறமூத்தி யாகமகிழ் பெற்று
கிருப திருப்தீர்
பத்தினி லோர்மற மைத் தலை போரணி
மூத்தலெ பாதிபர் சேய்றுதல் - மேவி.
அவனிதல் வந்த இறசூல். (வ)

சலிலத்தை யேயுறவ ழைத்தோர்
புதுமையி தெனவே
சொலலட்ச நாவுகள்ப டைத்தா
னிலையிறை நிலையா
யிப்படி மீதினு, மைப்புகழ் வோனடி
மைப்பய லேமழையை, யாளுமெய் யூகத்.

த்திமித்தி தாதிமி திமித்தி
தகுதகு திகுதோம்
டுடு டுட்டு டூடுடு டுட்டூ
டுடுடு டுடுடூ
தத்திமி தாகிர்தி இத்திமி தோவென்
மத்தள தாளமு மேளமு - மோசை.

தருதிக்கு தோகுவான மட்டூ
டிபட க்படஞ்
ஜகில்செத்த போர்குபி ரறுத்தே

பதுறி னுதறவே
தட்டளி பசரைற, யொட்டகை வாசுகி
பட்டணி துாசுகள், சூறைக ளாடி.
மிகுதிவிறல் கொண்ட பெரியோர். (வறு)

சரமிட்ட தோகுதிகு தித்தே
ககலி சிதறுமா
கமுகத்தி லேகவெளி யிற்போ
யிறைவ னிறையவா
ரத்திகழ் வாளேகள், வித்தைக ளாடுவ
தொத்தது வீழவும், வானிபு லாவும்.
அளிமொய்த்த சோலையின்ம லர்த்தே
னருவி சொரியநீள்
வயலொக்க மோடுசெங்கெல் முத்தாய்
விளையும் வளமுமா
யக்குயில் பாடம, யிற்குழு வாடவ
னத்திர டாமரை, நீடுயில் மேவும்.
சசி பட்சி சூரிய னுடுக்காள்
ககன முகடுசேர்
கருபத்துல் லாவின்முடி முட்டா
தகல நிகழுமா
திற்பர னேரருள், மக்கநல் லூர்வள
ரப்துல்லா பாலக ராமகு மூதர்.
எழில் சுவன துங்க பதிமேல்.

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம-காம்போதி-ஆதி தாளம்.

பல்லவி.

நிறைந்த வொலியே யுமதிருபாதம்
நினைந்து வாடுவனே- பொற்பாதம்
நினைந்து தேடுவனே.

அநுபல்லவி.

முறைமை யாய்வள மொழுகுஜபி லானில்வாழ்
முதல்வ னெலிமுகியித் தினே மூவுல கெங்கும். (நிறைந்த)

சரணங்கள்.

க. க்த்தன் முன்ஹ பீபுவச னித்திடும் பொழுது மெள்ளக்
கவலும் ஹறீவுறன் றுதி கூற - நபி
சித்தமில்ம னஸ்தாயபி குத்திட விறைசெய்யிதும்
போமிரனச் சிந்தைதவி கூறத் - தாய்வ
யிற்றினிலி ருக்கும்பொழு தூற்றிடும்பூ தத்தைப்பதி
தன்னிலே வந்ததனை மாறப் - புவியி
லூற்றிடும் பொழுதுபாற் குடித்திடா தமிந்துநோன்பு
வைத்திடத் திசை யிசுலா மேறச் - சற
குற்றிடும் ஹம்மாதுகூட நடக்க - அவர்
சாமிகுற்றி லாவிற் றள்ளி விடுக்க - நல்ல
குன்றுபாக் கெவர்க்கு முன்போ யிருக்கக் - கண்டு
குறைக ளகற்றித் தொழு திறையைப் புகழ்ந்திருக்க. ()

உ. வஞ்சகமில்லா வாணியர் வரவே சோரரவரை
வஞ்சகஞ் செய்யவே யதைக் கண்டு - உங்கள்
செஞ்சரண பூசை யெறிந்திடச் சோரர் சிரசு
சிதறிடத் தோர்வினை யகன்று - ஒரு
வஞ்சிமகன் வங்கத்தொடு துஞ்சிட வங்கமுதலாய்
வரச்செய் தவனிக் காகில் நின்று - உயி
ரஞ்சவே கொடுபோமிசு ருயீலைக் கோபிக்க வேமாய்ந்
தவனிடத் தினில்றாகு சென்று - ஷற
கஞ்சியே யழுதமுறை யிடவே - அபா
பக்கரின் ஹம்மாமிமேற்கை தொடவே - அவர்
பஞ்சிபோலி ருக்கில்விழுந் திடவே - மறு
படியு மவர்செய்பிழை முழுதும் பொறுத்திட்டலே. (கி)

ந. மங்குலின் கவிகைதீன்மு கம்மதுற்ற றூல்பேரரே
மாதவங்கள் பெற்று வளர்ந் தோரே - புவி
யெங்குமுள்ள வொலிமார்கள் சிங்க மெனவேயரசு
பொங்கும்ஜுயி லானிற்பிறந் தோரே - நறை
குங்குமத் தடப்புயத்தார் தொங்குமபு சாலிஹறுள்
குதுபுல் அகுத்தா பொலி நீரே - யுங்கள்
பங்கயப் பதமிரண்டு மென்கண்சிர மேலிருத்திப்

பதம்பாட விடைதருவீரே - வெகு
சங்கைசேர்பகு தாதில்வாழ் வோரே - கொவ்தி
சமதானி முகியித்தி னீரே - பூரண
திங்கள்வத னக்குருவா ேனரே - திசை
முழுதும் புகழுமப்துல் காதிறொலி யென்பீரே. (நிறை)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஆதி தாளம்.

பல்லவி.

விளங்கு மெண்டிசை பொன்னுல கெங்கணு
மெய்கொண்ட நாதரெடி - எமை யாண்டவர்
மெய்கொண்ட நாதரெடி - என்றனைக்கு
மெய்கொண்ட நாதரெடி.

அநுபல்லவி.

வளங்கொள் மக்கத் திற்றியிர்தா யுல
கடங்க ளெட்டுத் திக்கினு மாமறை
வாய்த் திடுங்கலி மாவுரை காட்டிய
கர்த்தி முல்லன்பி யாவிற சூல்நபி. (விளங்கும்)

சரணங்கள்.

௧. மானிலம்பி றந்தாகன
மடல் கொடி படிமுக டொடுமுயர் நடுநிலை
தீனெனும் பயிரை விளைத்தார் - வலியுட் பட்ட
மானினைப் பிணையி லழைத்தார் - வெறுந் தசையைத்
தேனி னின்பப் பெண்ணி னிளைத்தார் - தினமும் புறாக்
காணெனுமின் சொல்லிற் றிளைத்தார்
ஞான திட்டக் கண்கொண் டேறகு
மானை யுட்கொண் டங்கற ஷேறியே
நம்பொடு மேயிறை, முன்புனா பேசிடும்
அம்பரு லோகமி, ரம்பிடு நாயகர். (விளங்கும்)

235 467

௨. தாமென விருந்த விறை
　　தடமிடு கடிசுட ரடர்விய வடிவெனு
மாமணிமுத் தீரக விருந்தார் - துலங்க வெங்கும்
சேமவிளக் காகப் புரந்தார் - விண்ணோர் களுக்கி
மாமெனத் தவங்கள் புரிந்தார் - வணங்கீடாத
சூமனை மனதுட் பொருந்தார்
　　ஏம நாட்டிற் றின்பந் தொட்டவர்
　　நாம மெட்டுச் செம்பொன் மேனிலை
இங்கித மோடுயர், தங்கவ ரோதயர்
எங்கெழில் கூர்ந்திடு, மெங்கள்மு கம்மது. (விளங்கும்)

௩. காசினிக் களகு வாய்ந்த
　　கடிதட மடுவுறு, படிநடு விடைமக்க
ஹாசிமாங் குலத்தி லாயினர் - செழுங் குறைஷி
ராஜராப் துல்லாவின் செல்வனர் - ஆமினு வெனும்
வாச மங்கை பெறு மகனர் - நிறைந்த அபுல்
காசிமு கம்மது நயினர்
　　ஆசை கொண்டவர் மீதினி லேவிசு
　　வாசம் நம்பிய காதிறு சாகிபுக்
　　கஞ்சேல் புரிந்திடு, மிஞ்சிட வேயிரு
　　செஞ்சர ணந்தின, முந்தரு நாயகர். (விளங்கும்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம-நீலாம்புரி-ஏக தாளம்.

பல்லவி.

குருவே யுங்கள் மலர்ப்பாதங், குடியிருத்தி யடிமை மனக்
குறை தவிர்க்க வேணு மையா.

அநுபல்லவி.

தருவைமிக ராகவே தீன், றழைக்க வொளிர் பயிர் விளக்கும்
சவியே கிஜுறுநன் ஷபியே. (குருவே)

சரணங்கள்.

௧. தரையில் வந்த நாள்முற், றுமனையிலெயின் றுன்ரி நிகராய்த்
தயங்கு மதிபோ லாயி னேனே - பெருங்
கண்ர் யிழந்து கடல் விழுந்து, கரையை நினைந் திழல்புவர்போ
கருத்திற் பாதம் பொருத்தினேனே - வெகு
தத்திர மாயொரு, வித்தொரு முத்தாய்த்
தானகத்தி லமைத்துச்
சததள முகமலர் தனில்வரு மத்திய
தா னு லாமனம், பூண நாபொறுஞ்
சஞ்சல மையலாகி - மன - மிஞ்சுது உறவாகி
சிதங்கள் சுடர்மரு, பதங்க ணிகரதி
விதங்கள் தருமன, திரங்கி யழுதழு
தாபம தேபெரி தானசி னேகித
ரூபம தாய்நிலை தானதி லூறிய
சங்கைக் கடல்வருந், திங்கட் கலைமதி
பொங்கத் தனதிலி, ரங்கிக் கிர்பைபுரி
தான பொற்புற் றேசீ கத்திற்,
றேனு முக்யத், தானெ னச்சொற்
றரையிற் புதுமைத், தருவைத் திருவைத்
தருசற் குணவிற், பனநிச் சயமே. (குருவே

௨. இரவு பகலாய் மனது, எரி விழுந்த கிரிமி யன்ன
இருந் தழலு மேழை நானே - யுங்கள்
கருணை புரிந் தனுக் கிரகக், கடைக்கண் ணருள் கிடைக்க வி
கன சமை வேளை தானே - ஒரு
சொற்பொருள் காரண மூடுற வாகிச்
சூழ்ந்த ரத்தை விளக்கிச்
சுகமரு வியமது, விதமதை யறியச்
சோர்வி லாமலர்த், தாள்தர வாய்மை
சொல்ல வருமு பாயம் - மன
வல்லமை தரும் நேயம்

சாந்த தனிமையி, லிருந்து மனதினுட்
பாந்த ஒருதனி, மருந்து போலவே
சோதனை யானவி, னோதவ ஜீகர
மாதவ மேபுரி, வாய்மையி னோதியு
சுத்தப் பொருளெனி, னைத்துப் பதமலர்
முத்திக் கருணைவல், ளர்த்துப் பாகதி
தூங்கு மஞ்சத், தாங்கு கொஞ்சித்
தோங்கும் நெஞ்சிற், றீங் கீகற்றிச்
சுதனைப் பொருளைப், பெருமையீ கடலைக்
குமுதத் தொளியைத், தெளியத் தருமே. (குருவே)

௩. ஆதவன் புவி யுள்ளளா, ளழியாத வரப்ர பல்ய
அனவரத சோதி மாயமே - நல்ல
மூதறி வளருஞ் சிங்கக், கவிசெந் தமிழ்க் குதவு மொரு
மூவுலக மெய்ச்சு சியமே - பெருங்
கற்றலை வாரிக டற்படு லோகங்
காண மட்டுந் திகைக்குங்
கருநரி தரிதென, வருமொரு பொருளாய்க்
காதலோ டுன்னிச், சித பாதமே
கண்டவர் கரை யேற - மனங்
கொண்டவர் குயிர் மாறக்
கரும்பை நிகரென, விரும்பு மடியவ
ரிரும்பு மனமது, தளும்பி மெழுகெனக்
காரண மானசி, காமணி யாய்வரும்
ஞானம னோன்மணி, நாயக மாகிய
கஞ்சக் கரமனை, லஞ்சிக் குறுபிணி
யஞ்சித் தொலையவ, ரஞ்சற் றருளியே
காட்டி னட்டிற், பூட்டி யன்பிற்
கோட்டி யின்பிற், சாட்டி வைத்தது
கனகப் புரிசைப், பதியைத் தரவச்
சிரநற் கதவைத், தெளியத் தருமே. (குருவே)

முற்றிற்று.

கீர்த்தனம்-௯-ம்-சங்கரா பரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

பையலக் கிரங்கி முகம் பாரும்—உங்கள்
பாததா மரைநித்யந் தாரும்.

அநுபல்லவி.

வையம் புகழுமகு மூது ஜெத்தி லுதித்த
செய்யி தப்துல்லா திருச் சேயே யுமறென் பிரே
சித்தமி, லுற்றறி, வற்றவ, னைவெகு
புத்தியின், வித்தகள், கற்றறி, யாதவன்
சிறியவ னருள்பெற, வுமதிரு பதமலர்
தினமரு ளடிமையென், பவவினை யகலத்
தாங்கு தாகிட கிட,தக ததிங்கிண
ஜேங்கு ஜெயெனத் தொகு தொகு திமிதக
தாங்க ரிகரி, நிமகரி சரிகித்ய
சாரி சாரிசரி, ஜெகு ஜெகு, தகதோம். (பையல்)

சரணங்கள்.

௧. தினமு முங் களை நம்புஞ், சிறியேன் றனக்குதவி
செய்யு மையலைத் தீரும்
எனது பிழைபொறுத்து, இரங்கி யாளுவா ரிந்த
இம்ப ரந்தனி லாரும்
கனவும் நினைவு முங்கள், கதத்தைத் துதிப்ப தல்லா
லினியா ராகிலு முண்டோ வேழை தனக்கிரங்க
எங்குமி, லங்கிய, திங்கள, தாய்முக
முங்கழல், பங்கய, மெங்கணின், மீதரு
ளிறையவ னருள்மறை, யறிவுறு திருவே
யென்திரு தயமலர், நிதமுறை குருவே - தாங்கு. (பையல்)

௨. கன்ன லென்னு மொழியே, யுரைக்கு மொலியே நல்ல
கல்விக் கடலினையுண் டோரே
மன்னர் மன்னர்புகழ்ந் திறைஞ்சும் சாகிபே பட்ண
மருதூர் தனி லமைந் தோரே

என்னை ரட்சிக்கும் ஹலறத், தேந்த லொலியென் பீரே
சின்னப் பயலுக் குங்கள், திருமலர்ப் பாதந் தாரும்
செப்பரு, மொப்பில, கற்பக மேயென்னை
யிப்பொழு, தொப்பியே, மெய்ப்பொடு, மாளும்
ஜெகதல மதுதனி, லுமையலா, தினிபல
திசைகளில் வேறொரு வருமில, யொலியே - தாங்கு, (பையல்)

ங. கோகநக வாவிசூழ், குழந்தைப் பதியோர் புகழ்
கொல்ல நகர் பிறந்த கோவே
வாகுபெ றுந்தி னோர்கள், மகிழும் ஹலறன் வளர்
பாவா பக்கீன் கிளையின் காவே
ஏக னருள் பெருகு, மேந்தலப் துல்லாமக
வாக வரும் செய்யிது, உமறு வள்ளலே நாளும்
வஞ்சக, மிஞ்சிய, நெஞ்சின, னனிரு
கஞ்சமெ, னுஞ்சர, ணந்தா, வேணும்
மனுமர பினில்மணி, யெனவள ரதிபதி
மகிபதி சுகபதி, ஜெகதல பதியே - தாங்கு. (பையல்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம் - கல்யாணி - திரிபுடை தாளம்.

பல்லவி.

இரங்கு மிதுசமையம் - ஏழையென் றென்னை யாளும்
கிருபை செய்யுந், தயவு வையும்
ஏழையென் றென்னை யுய்யும்.

அநுபல்லவி.

மரு மலர்ப்பூம் பொழில் சூழும், பருதா நூ ரினில் வாழும்
வரராஜர் வணங்கிடு நீதரே, நரராஜர் மகிழ்ந்திடு நாதரே
பரராஜர் பணிந்திடு பாதரே, துரைராஜ ரெனும்பதுல் காதிரே.

சரணங்கள்.

க அன்றொருபா லனிறந்து, அன்னைதா யழுது வந்து
விண்டதால்ம னமகிழ்ந்து, விண்ணவர் தமைச்சி னந்து
சென்றேமலக் கல்மவுத் தாவியைக்

கொண்டேகும்ப் போதினிற் கூவிய
கன்றீர்பர தீபரமாயெனை
மன்றுடமை யாவிர்தப் பாவியை. (இரங்கும்).

உ. ஒருவரு முமையல் லாது,உதவியி னிவே றேது
இரவுப கலிப்-போது, இபுலீசு டைய வாது
வருநாள்க ளெல்லாமுமைத் தேடினே
னொருநாட்கொரு நாள்மனம் வாடினேன்
திருநா ளென வன்பொடு நாடினேன்
கருணாகா ரேயுமைப் பாடினேன். (இரங்கும்)

ந. அருமறுந பிடேபரே, அபூசா லீருபா லேரே
ஜெகதலம்புகழ்நா தரே, தீனவர்க்கு பகா ரரே
பருதாதா சானவுல் லாசரே
மறைதேரொலி மார்களி னேசரே
ககனோர் புகழும்பிர காசரே
கல்துல்லகு லம்விசு வாசரே. (இரங்கும்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சங்கரா பரணம் - சாப்பு தாளம்.

பல்லவி.

உள்ள மிரங்கி யென்னை யாளும்----உங்க
ளுடைய பதம் நம்பினே னாளும்.

அநுபல்லவி.

தெள்ளு மறை பயிலுங் கோவே—யென்றுந்
தீன்பயிர் விளைத்திடுங் காவே
சேம மிருகண, மேன்மை தரவரு
மாமுகிற் கவிகை, யாமுகம் மதரே. (உள்ளம்)

சரணங்கள்.

க. அருட் கடைக்கண் கொடு பாரும்
அரிய பெரியவ, னரிய ரெனவிரி
பச்சை யுலகினில், வருநபி யேதிரு - அருட்

அக்கினிக் கொட்டு சுரக்க வீற்கைவி
ரற்கு ணட்டின லக்கொ டுத்தவ - அருட்க.
ஆசகல வமு வாசை மதியமை
நேச ரெனுஞ் சொற்ப்ர காசரே திரு
அருட் கடைக் கண்கொடு பாரும் - எனை
யடரும் பவ வினையைத் தீரும்
உருக்க மாகினே னென்முன் வாரும் - உங்கள்
உதவி கொண்டே யீறிற் பாரும்
ஓது மறைநெறி, நீதி யுருபக
ஆதர வார்கமி, நாதரே திரு. (உள்ளம்)

உ. ஆதரவே நிதம் நாடி
அகில முழுதொளிர், பகலவன் வரவும் நல்
முக வரிஞ்சச ரோருகமெல் லடியிணை - ஆதா
அப்புறக்குபி ரைப்படச் செய்த,
கற்ப தத்தினு றப்பொருத்திய - ஆதா
ஆகு முறை தவிர், மாகை யிபுவிச
னேக வகை யருள்வி, பேக முடையவா
ஆதரவே நிதம் நாடி
ஆவலானே னுமதி னருள் தேடிப்
போதமுறு மெய்ஞ் ஞானங் கூடி - நல்ல
புனித ருடனேயுற வாடி
பூபதியி னுயர் மேல் பதியினுமே
சீர் பெறவேசெய்ஹ, பீபே யுபதிரு. (உள்ளம்)

௩. மக்கநன் னகர்வரும் நாதா
மடலவிழ் வனசத், தடமத னிலுறு
குடவனை யின்மணி, யிட கிலவுதரு - மக்கநன்
வர்க்கநற்கதி லிக்கனிச் செழும்
அக்கள் மிக்கவ யற்கணிற் செலும் - மக்கநன்
மாட மறுகுகள், பீடு பெறுமனை
நாடு மொளிர்தர, நீடு வளமிகு
மக்கநன் னகர்வரும் நாதா - இந்த

மானிலந் தனிற் றேயாப் பாதா
ஹக்கனறு ஷேஹிய நீதா - காதம்
கமழுங்கஸ் தூரிமெய்ப் போதா
கான் மதனிலுறு, மானை டுரைபகர்
கோனெறி சேரிற, சூல்நபி யேதிரு. (உள்ளம்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-சாப்பு தாளம்.

பல்லவி.

எனக் காதாரஞ் செய்வீர் கோவே
தினந்தா ஹாவே - யெனக்
காதாரஞ் செய்வீர்.

அநுபல்லவி.

மனக்காத லாலே, வருந்தின தாலே
வாரும் பரகதி தாரும்—ஐயா
வாரும் பரகதி தாரும், வண்மையிற ஸூலே. (யெனக்)

சரணங்கள்.

௧. வானகச் சோதி, மதிதனிற் பாதி
வருத்தி யதனை மீளப், பொருத்தி - ஐயா
வருத்தி யதனை மீளப், பொருத்திவைத் தருள் ஹாதியே. (யெ)

௨. பரதவி யாமற், பையல் மனுமிற்
பாங்குசெய் வீரெனக் கேய - ஐயா
பாங்குசெய் வீரெனக் நேய, பங்கம் வாரா மலே. (யெனக்)

௩. அப்துல்லா மகவே, யார்க்கும் பிதாவே
அன்புசெய் வீர்மகு பூபே - ஐயா
அன்புசெய் வீர்மகு பூபே, கைறுல் அன்பி யாவே. (யெனக்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம் - சங்கரா பரணம் - ரூபக தாளம்.

பல்லவி.

நவநிதமோ நாகரீகஞ் செய்யும்
நாரியே யென்சலாம், நபிக்குச் சொல்லெடி.
முகம்மது நபிக்குச் சொல்லெடி.
அகுமது நபிக்குச் சொல்லெடி - ஆர்க்கும்
நாயக ராகிய, தாயக ராமறை
நபிக்குச் சொல்லெடி.

அநுபல்லவி.

தவநிலை மயிலே மெய்ஞ்ஞானச்
சற்குண மிக்குப காரியே
புவமகல் மகுமூது நாதர்
பட்சம் வைத்தாற் சொர்க்க முத்தியுண் டாமே. (நவநித)

சரணங்கள்.

௧. மஞ்சு குடைநபி நாதர்முன் செல்லு
மாதயர் வேதனை தீரவுஞ் சொல்லு
தஞ்சம்வே றில்லை யவரல்லாற் றஞ்சம்வே றில்லை
என்செய்வே னடி, பஞ்சமா பாதகி
யேயென்ன தோஷம், மாவுப தேசம். (நவநித)

௨. பச்சை மயில்வடி வாய்வரு சூழ்ச்சர்
பாவவி னசச பாசமென் மோட்சர்
ரட்சிப் பவரே சகலமும், ரட்சிப் பவரே
யச்சமில் லா துபோய், நிச்சய மாகநம்
மாண்டோ ரிடத்தினில், வேண்டி யதைக் கேளு. (நவநித)

௩. மக்கவா ழப்ஹுல்லா வீரத்துரை ராஜர்
மாதவ மாமகு மூதிறை நேசர்
சொர்க்கந் தருவோர், நமக்கெல்லாம், சொர்க்கந் தருவோர்
ஸக்ருத்தில் வந்து, மெய்ப்புடனுள்புவர்
சக்கில்லைச், சக்கில்லைச், சக்கில்லை மீனே, (நவநித)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-ஏகதாளம்.

பல்லவி

மனோகரா நீரா மனமுகம் பாரா
மனோகரா நீரா.

அநுபல்லவி

விநோத மகிழுங் குணபதி சீலா,
விநோத முளமெய் மகிழு மெய்நூலா
அப்துல் மூத்தலிபு குமாரரின் பாலா
அகுமது நபியென வருமனு கூலா
வான்முகில் குடையிடு, மான்மத வாசரே
கான்மிகு பதமிசை, நான்மிக மயல்கொண்டேன். (மனோ)

சரணங்கள்.

க. திங்க ளுரை போதா, ஜெயநவ நீதா
எங்கும் புகழ் வேதா, எழில் மலர்ப் பாதா
அங்கங் கமழுங் குரு நாதா, அருமை யான துரை யேமகுமுதா
கங்குலெ ழுந்தறு ஷெறிய தாதா, கருணை யாகவருள் புரிகுண
[சாதா
கனவினும் நினைவினு, மனுதின மூமைநினைந்
தணலுறு மெழுகென, வெனதுள முருகினேன். (மனோ)

உ. தருங்குடைக் காரா, ஜயகுணத் தோரா
அருங்குரல் தீரா, வடிமையைக் காரா
இகம்பரம்புரி வோர்க்கதி காரா, இருந்து வந்தது வாயது சீரா
சுரும்பிருந் திசை பாடிய தாரா, சுகந் தரும்படி நேரிற் சேரா
பாரினி லுமையல்லா, லாரெனக் குதவுவர்
காரண முள்ளநபி, நீரெனக் கருள் செய்யும். (மனோ)

ந. மலர்வனஞ் சூழு மதீனயில் வாழும்,
புலவர்கள் நாளும் புகழ்ந்தடி தாழும்
அபுதுல்லா மகவே புடைசூழும்
அகுமதே யன்பா யெனை யாளும்

ஷறகி னைவர்வழி, யானதென் ஞளுஞ்
சங்கை யாசுவரும் நெறியினி லாளும்
ஆசரி குணபதி, நேசக ரெனும்பல்
கர்சிமு கம்மதே, தாசனுக் கருள் செய்யும். (ம்னை)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-கலியாணி-ரூபக தாளம்.

பல்லவி.

வருவாரா மவரே சொர்க்க,
வாழ்வுள்ளோ ராமெடி.

அநுபல்லவி.

வருவா ரென் றைக்குமருள், தருவார்தா பரன்றன்னை
யொருவா திரந் தழுது, கரைவா ரவரைத்தேடி. (வருவார்)

சரணங்கள்.

க. அந்தமி லாதொரு, வன்றனை நெஞ்சிலே தேறிக்கோ - முதல்
மந்திர மாகுவ ருங்கலி மாவைவீ கூறிக்கோ
தந்திர மாகவ ருந்தவு ஹீதிலே மீறிக்கோ - பொல்லா
சிந்தனை யானப, வங்களிலே முக மாறிக்கோ
சொந்த மானப ணங்களி லேயெடு
வந்திரப் போர்களின் கையிலே கொடு
சுந்தர மாகவ ணங்கையி லேநெடுஞ்
சந்திரோ தய மாகிய தூதர். (வருவார்)

உ. பொங்கம தாகவ ரும்பறு லானதைப் பூணிக்கோ - வெகு
சங்கம தாகவ ரும்பெரி யோர்களைப் பேணிக்கோ
அங்கம தாய்வள ரும்பொய்கு பாடிலே கோணிக்கோ - குயிர்
முங்கிய பேர்களி டம்புக் சேவினம் நாணிக்கோ
இங்கித மாய்விர தங்களு மதிகந்
தங்கிய சாலிகு டன்புக னின்றுகொள்
வங்கண மாகவ ரும்படி கண்டுகொள்
பங்கய பாதகி லம்படா நீதர். (வருவார்)

௩. இச்சக வாழ்வைபி கட்சிய தாகவே நாடிக்கோ - வெகு
பட்சம் தாகவே யச்சக வாழ்வைநீ தேடிக்கோ
மிச்சஹ தாயொரு சற்குரு பாதமே கூடிக்கோ - அல்லா
யிச்சையு மோதிய மெச்சியல் சீர்புதம் பாடிக்கோ
தற்செய லங்கிய, துற்செய லும்மற
நிற்செய லாகிய, நற்செய லும்மற
அச்சமி லாமல்ம, னப்பய மும்மற
அச்சம தோடுரை, யிச்சருள் போதர். (வருவார்)

௪. வித்தக மூனவி தத்தைவி ரித்தருள் போதராம் - வெகு
பத்தியி னத்தனே டொத்து உரைத்திடும் நீதராம்
தத்சயி குத்தஜ னத்தைமி கைத்திடும் நாதராம் - தவ
முத்தப ரத்தர்சி ரத்தைய முத்தவி ஷேதராம்
புத்தைவி ரித்துஉ ரைத்திட வைத்தவர்
புட்ப க்ரத்தில்நீ ரைத்தரு வித்தவர்
சத்தும றைக்குவு ருத்தித முற்றவர்
சத்துவம் பெற்றுல கத்தி லுதித்தவர். (வருவார்)

௫. பங்கமெ னும்பாத கங்கள கன்றிடச் செய்தவர் - பார்
தங்களி னங்களொ டுங்கம டங்கலென் றெய்தவர்
அங்கமு டங்குவி டங்கொள்பு யங்கனைக் கொய்தவர் - அகி
லங்களி லெங்கும்வி ளங்கவ ளங்கலை பெய்தவர்
துங்க முறுஞ்சுவ னங்கள்பு ரந்தவர்
தோகைம யில்வடி வாகவி ருந்தவர்
மங்குலி டுங்குடை தங்கிட வந்தவர்
மாகங் கடந்தறு ஷேறிக டந்தவர். (வருவார்)

௬. கத்த னருட்படி சித்திலு தித்தொளிர் காரணர் - உயர்
மெத்தவு தத்துவம் வைத்தவு திக்குமு தாரணர்
சித்திர ரப்துல்லா றெற்றியி லுற்றொளிர் பூரணர் - ஆமினா
பத்தினி பெற்றிடு புத்திரர் கற்புக பூரணர்
செத்திடு கட்டைத ழைத்திட வைத்தவர்
தித்தும ணிப்பிடி சற்பம றுத்தவர்
அற்றக ரத்தை யறப்பொரு வித்தவர்
முத்திலு தித்தவர் முஸ்தபா கற்றவர். (வருவார்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபக தாளம்.

பல்லவி.

ஆசை மிகப் பெருகி நித்
தேடும் பயல்க் கருள்வீர்—ஆசை.

அநுபல்லவி.

வாசந் தினம் வீசும் புயத்
தராசே மன்னர்க் கிரசே. (ஆசை)

சரணங்கள்.

௧. சிலை மீதினி லொரு நாற்பது, திக ழொட்டகம் வுருத்திக்
கலையா தவ னடத்தும் நவ, காசீ முஸ்த பாவே. (ஆசை)

௨. படிமீதினி லடியேனெனின் பவமுந் துய ரகல
செடியோன் றிருத் தாதேகதந், தருவீர் நித நிதமே. (ஆசை)

௩. மதிள் விண்டிகழ் மணி மண்டப, மாட கூட மேடை
மதினம் புகழ் கோவே அப்துல், லாகண் ணூகம் மதுவே. (ஆசை)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-கமாஸ்-ரூபக தாளம்.

பல்லவி.

கந்தூரிக் காட்சி நேர்ச்சை, தீரு முன்னமே—போய்நாம்
கண்டுதெரிசித்துவர, வாரு மன்னமே.

அநுபல்லவி.

நந்நாரும் நாகை வளர் மீருன் சாகிபு—கொடி
நடந்து மிடத்தும்சபூ றிடத்தினிற் சென்று, பாதம்
நண்ணியே, கல்வி லுன்னியே - தவம்
பண்ணியே, வரு வோர் திருக். (கந்தூரி)

சரணங்கள்.

௧. அஞ்சுமன ருவின்கொடி, யலங்கி தங்களும் - மறை
அறிந்த ஆலிமொலி மாரிருந் தலங்களும்

வஞ்சியே மணவாளர் சேர்ந்து வரும் நலங்களும் - வந்து
வர்சமா யடிக்குங் கொடியிடுந் தலங்களும் - கூடிக்
கொஞ்சியே, யிறைக், கஞ்சியே யெடி
வஞ்சியே மெள்ள நடந்து. (கந்தூரி

உ. இந்தொளி பிரபையெழில் சந்தனக் கூடும் - எழுந்
திலங்கத் துலங்க அழகுறுங் தெரு வீடும்
வந்தடி கவரிவெஞ் சாமரை நெடுங் காடும் - சுற்றி
வரவேபே ரிகை பூரி தவில்முர சோடும் - வெடி
துந்துமி துடி பம்பைகள் தவில்
பொங்கு மேடங் கிங்கெனவே. (கந்தூரி

ங. வெற்றி ஹுசைன் குத்து சருள் வேதர்க்கு வேதர் - நல்ல
விறல் ஞான மோனகுரு நாதர்க்கு நாதர்
சித்திரவிஸ் தாரகல்விப் போதர்க்குப் போதர் - வளஞ்
சிறந்தநா கையி லுற்று வாழப்துல் காதிர் - புக
ழெங்குமே, பிர, சங்கமே யெடி
தங்கமே, மெள்ள நடந்து. (கந்தூரி

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-தேசிக தோடி-திசுரகதி தாளம்.

பல்லவி.

கண்டாலோ சுவன வாழ்வுங்
கதியும் பெறலாமே, சொர்க்கப், பதியும் பெறலாமே
கருணை புரிந்த இறசூல் நபியைக்
காதல் கூரவே—கண்டால்.

அநுபல்லவி.

தண்டுயே அறுஷ ளாவித் தயங்குஞ் சிரத்தையே
தரள நகையைப், பவள விதழைச், சந்த்ர முகத்தையே. (கண்)

சரணங்கள்.

க. விண்ணில் லாத வாசப்ர காச, மேவுபொற் குமிழும்
மின்குதி காலும் புவிபடாது, மேவு பாதமும். (கண்டா)

௨. மங்காத தாளம் போல, வயங்குமுத் திரையும்
வாய்ந்த விற்வி னுதலுஞ், சுரிதி மதுர வாசையும். (கண்டா)

௩. செந்தா மரைப்-பதமுஞ், செம்பொன் மேனியுந்
தின கரனென வொளிகள், சிறந்த சிம்மா சனத்தையுஞ். (கண்டா)

௪. கஸ்தூரி காதவழிக்குக், கமழும் புயத்தையுங்
கமல கரமுங் கருணை விழியுங், கல்பி லாரவே. (கண்டா)

௫. காணும னுடலு மூயிருங், கலங்கி வாடுதே
கடலு மலையும் போலே, காதல் பெருகி யோடுதே. (கண்டா)

௬. பூஞ்சோலை சூழுமக்கா, புரத்திற் கதிபரைப்
பூவை யாமி னூர்கண் மணியைப், புவன மீதிலே. (கண்டா)

௭. ஆதார மேவு மதினத், தரச ராஜரை
யமுத வசனத் தப்துல் லாதந், தருள்கு மாரரைக். (கண்டா)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-ஏக தாளம்.

பல்லவி.

தரும தாதா, கிருபைசெய், தரும தாதா
அருள்புரி-தரும தாதா-கிருபைசெய் தருமதாதர்.

அநுபல்லவி.

இறையருள் மறைநபி, நறை செறி ஷறகுயர். (தரும)

சரணங்கள்.

௧. பொறுமை யோரே புகழ்துதி மகுஷறில் தருமம் நீரே
பொழுதெரி மகுஷறில், தருமம் நீரே
பொறை வளர் மகுஷறில் தருமம் நீரே - வருமந் தானே
மருமலர்ச் சததள மலரடி தந்தருள் செய், (தரும)

௨. அங்கி சிறவே யடியவர் தலைமூளை மங்கி நீறவே
அனலுறு மெழுகென மங்கி நீறவே
அரிமுன மரியென, மங்கி நீறவே - அங்க ணனே
படுதுயர் கெடவும, தருள்மழை பொழி தங்கத். (தரும)

ஙு. நாதர் நாதரே, நறை யப்துல் லாவருள், போத நீதரே
துரை யப்துல் லாவருள், போத நீதரே
மறை யப்துல் லாவருள், போத நீதரே - பேத பேதமே
பெருமது ரசகவி, துதிசெய்பகு மதெங்கள். (தரும)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-காபி-திசுரகதி தாளம்.

பல்லவி.

செய்யிது றற்றகுல் ஷஹீதுல் மூதுகிபீன்
முன்திறுன் னதீறே - செய்யிது றற்றகுல்.

அநுபல்லவி.

வையமதெல்லாம் புகழ், செய்யு மதி னுவில்வாழ்
தையிபு முத்தீகு ஹாமி தருமதான
தரும கோவே. (செய்யி)

சரணங்கள்.

க. சங்கையபுல் காசிம்நீ, ரெங்கள் மூஸ்த பாவும்நீர்
தங்குமவு சூல்முபீன், முகம்மதான தருமகோவே. (செய்யி)

உ. துய்யமவுலூம் கத்தீபு, கையிமுஅமீன் முஜீபு
ஐயமறுங் காமில் ஹாதில் மகுதியேவந் தருள்செய் வீரே. (செ)

ஙு. சிந்தைமகி ழப்துல்லா, மைந்தர் மசகூ துல்லா
முந்து மவுமூல் மத்தீன், மக்கினி மாமூல் முறுசலீமே. (செய்யி)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாமா-ரூபக தாளம்.

பல்லவி.

யாப்பீரே கஸ்தக்கீரப்துல், காதீறே மீறுவே.

அநுபல்லவி.

ஆதாரமெனக் காரு - முகம் - பாரு மீறுவே. (யாப்பீரே)

சரணங்கள்.

க. என்னாளும் புகழ் சூழு மலர்த் தாளை நம்பினேன் - நா
னேழை யெனை யீராளு மெந்த நாளுமீ ருவே. (யாப்பீரே)

உ. வரவர அதிமோக விரக மையல் சகியாதே - வெகு
பரவச மானே னெனைக், காப்பாற்று மீருவே. (யாப்பீரே)

ந. கொர்ந்தாரு நபி பேர்ரி, லன்பான வொலியே
இந்தால அபூ சாலீ கருள் பூாலர் மீருவே. (யாப்பீரே)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம-மத்திய மாவதி-ஆதி தாளம்.

பல்லவி.

றகுமானே யுனை நம்பினே—னெனை
ரட்சித்தி டேற்றுவாய் கோமானே - யெனை
ரட்சித்தி டேற்றுவாய் சீமானே.

அநுபல்லவி.

அஹதான வன்ஸம தானவன்—ஆதி
பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்
அகுமதுமு கம்ம தும்மத் தான படியா லன்று
அல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன். (றகுமானே)

சரணங்கள்.

க. ஆருந் துணையில்லை, யெனக்குன்னை
அல்லாம லற்றகுமா னிற்றகீம்
காரார் கவிகையிடுங் காசி முஸ்தபா வள்ளல்
கருணை கடாட்சங் கொண்டே னையா. (றகுமானே)

உ. நீயாக்கும் ஏழைகளை யாளும்
றெப்புநீயே மாலிக்கி யவு மித்தீன்
இய்யாக்க நருபுது வஇய்யாக்க நஸ்தயீன்
இஃதி நஸ்விருத்தல் முஸ்தக்கீம். (றகுமானே)

ந. ஈறுய்ந்தா லுனை யன்றியே வேறு
றெங்கட் கிரங்கி யருள் செய்குவார்

சிருத் தல்லதீன அன்அம்த அலேகிம் கய்ரில்
மக்குளூபி அலேகிம் வலல்லால் லீன் ஆமீன். (றகுமானே)

ச. புல்பல வஸ்துக ளடங்கலேயும் ஆளும்
குல்குவல்லாகு அஹதா னேனே
அல்லா குஸ்ஸமது லம்யலிது வலம் யூலது
வலம் யக்குல்லகு குபுவன் அஹது. (றகுமானே)

ரு. அல்லாகும் மகுபதுனு யாபையாது
மின்ஜுமீயில் பலாயா வல்அம் ருது
வசல் லல்லாகு அலன்ன்பி முகம்மதின்
ஆலிகி ஸகுபிகி அஜ்மயீன்
வல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன். (றகுமானே)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-பூபாளம்-திரிபுடை தாளம்.

பல்லவி.

கண்டா லென்கலி தீருமே—ரத்ந தறுக் காவைக்
கண்டா லென்கலி தீருமே.

அநுபல்லவி.

அண்டர் புகழும்நன் னகை வளம்பதி
காதி செய்யிது தப்துல், காதி றிரு சரணம்
திறீங், திறீங், திறீங், திருமித் தகிட
தகத ஜேம்ஜேம் தரித் தகிட
தத்தா தனத்தா, திறிமித்தா வுறுத மித்த தரத்தா
தாகிட தகஜெம், தரிகிட தகஜெம்
தத்த ளங்கதக, தரிகிட தோம் தாம். (கண்டா

சரணங்கள்.

க. மகரதோ ரண வீதியும் - பந்தலுஞ் சித்ர
மதிளுமன் டபச் சோதியும் - மனமுவந்
தருமான குமுசுந், தரள மணிக்கல் லதுஞ்
சந்த்ர சூர்யப்ர காச மெனவொளி
சாலு மிலகுகிந் தீலலங் கிர்தம் - திறீம். (கண்டா

௨. நவமா மணி மண்டபமும் - ரத்ன தர்க்காவும்
நவரங்க மொளித் தீபமும் - சித்ர மேடையும்
பவளத்தால் ஸ்தம்பமும், பூசும்பொற் கொடிக் கம்பமும்
கவினு லாவு பூலாவெண் டிசை யெங்குங்
காணுமுயர் பாவுட்டானுங் கொடியையும் - திறீம். (கண்டா)

௩. மருவார் பாதபங் கயமுங் - குங்கும் மாலை
மருவுந் திருப்பொற் புயமும் - பூரண சந்த்ர
வதனப்ர காசமும், மௌலிவுல் லாசமும்
சதுவிண் ணுமெரொளி, தபன னெனுஞ்சிறு
தாஜும் வசந்தவி பாசுங் கனவினில் - திறீம். (கண்டா)

௪. அரும துறசூல் பேரரே - தஸ்தக்கீர் கௌதுல்
லகுல மகிழொய் யாரரே - நாகூர் வாழ்வே
ஜெக ராஜ ராஜரே, திறலோர்க்குல் லாசரே
அஹமதெந் நாளுங் குப்பான, ஹசன்குத்து
சாக மகிழ்தரும் ஷாகுல் ஹமீதெனும் - திறீம். (கண்டா)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-சங்கரா பரணம் - சாப்பு தாளம்.

பல்லவி.

ஆசையே யுங்கள் பாதபங் கடமதி
லாகு தையா - அதி - லாகு தையா.

அநுபல்லவி.

மாசகல்கஸ் துரியாமா வாச மெய்யா. (ஆசையே)

சரணங்கள்.

௧. அல்லும் பகலும்மினைத் தருகு தையா - உங்க
ளருட்கடைக் கண்கொடு பாருமையா
சொல்லவொண் ணாத்துய ராகுதையா - என்றன்
சொப்பனத் தாயினும் வாரு மைய்யா
வல்லியத் திட னே யுரைத்திடும்
நில்லெனத் தொடர் கல்லை நிற்றிடும்

மதுரவாக்கிய கீர்த்தனை ரஞ்சிதம்.

செல்லிடுங் குடையி னுரைத்திடும்
சொல்லெலா முமையே துதித்திடும். (ஆசையே)

உ. வஞ்ச னிபுலீசுட னுறவாடி - அவன்
மாய வலைக்கு ளென்னைச் சிறை யாடி.

மிஞ்சும் புவவினையால், மிகவாடி - மனம்
மெலிந் தலைந் தலைந்துங்கள் பதம் நாடிக்
கெஞ்சி யஞ்சியேவருமிப், பஞ்சனை அஞ்சாதெனச்செங்
கஞ்ச மென்சரணங் கொடுத்தரு
ளுஞ்சொ லின்சொ லெனத்தருமென். (ஆசையே)

ந. மாசி லுறுமக் காவிற் பிறந்தோரே - திரு
மாமதி னுவினிற் சிறந்தோரே

ஆசிலப்துல்லா தவத் துறைந்தோரே - மயி
லாமினா, ளருளகம் நிறைந்தோரே
காசகல்கரு ணாகரே யென்
னேசரேயுல் லாசரே மறை

வாசரே மயில் வேசரே மக
ராசரேமரு மூதரேயென. (ஆசையை)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-சங்கரா பரணம்-சாப்பு தாளம்.

பல்லவி.

மையல்க் கிரங்கி ரட்சிப்பீர்—நபியே யுங்கள்
பாதந்தந் தெனக்கருள் செய்வீர்.

அநுபல்லவி.

மையிடுங் குடை நீழலுல் லாசரே
மாகங் கடந்தறு ஷேறிய நேசரே
வானோர், கோனே, சிரத்தறு, மீனே, தானே - அறிந்திட
வாருட னீரவ்வ, லாகுமென் றோதவின்
றேகவ ரம்பெறு, தாஹாமு கம்மதே. (மையல்க்)

சரணங்கள்.

க. செங்கதிர் ப்துங்கச்செய் தோரே - கொடை மழையைச்
செங்கரத்தா லெங்கும்பெய் தோரே
திங்களி னிலங்கவந் தோரே - அம்ம வரசியிற்
றிங்களைத் துலங்கவைத் தோரே
கங்குலே யையுமோ ரிரவாய்ச் சென்றே
கத்தனைத் தெரிசித்திடு மாதவா
காரூர், போரூர், சுரத்தினிற், பாரூர், நீரூர், கையில் நதி
காட்டிடுவோய் புகழ், நாட்டிடுவோ யெமை
மீட்டிடுவோய் சொர்க்கங், கூட்டிடு வோரோ. (பையல்)

உ. வல்லியத் துடனே யுரைத்தீர் - சுபைனத் தெனும்
மெள்ளா பருவரல் தீர்த்தீர்
வல்லியாய்த் தன்சயை யமைத்தீர் - ஸையின பெனும்
மங்கையிகு றங்கினைத் துய்த்தீர்
நில்லெனத் தொடர், கல்லை நிறுத்திடும்
நீதி யறும்பவ, மேதும் பொறுத்திடும்
நேரே, காரே, கவிகைசெய், மாரே, தாரே - யணி நவ
நீதரே மாமறை, வேதரே - இழுறு
பாதரே, நாதரே, யாதிதன், தூதரே. (பையல்)

ங. காவு சூழ்மக் காவுதித் தோரே - மூலர் கிளையில்
கரீவல ரப்துல்லா புத்திரரே
பாவையாமி னாவின் மைந்தரே - மதீனாத் தன்னிற்
பாக்கியமுண் டாக்க வந் தோரே
காவியங்களு போதுங் கவீ தாவைக்
கைக்கொண்டே சொர்க்கம், புக்கவுதவிடுகே
காசிம், ஹாஷிம், குலத்தானுந், தாசிம், யாசி னென்னவரும்
காரணரே பரி, பூரணரே, வெள்ளை
வாரண மேவிய, ஆரணத் தேர்ரே. (பையல்)

முற்றிற்று.

 மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

கீர்த்தனம்-இ-ம்-கமாஸ்-ஆதி தாளம்.

பல்லவி.

நெப்பு நகீம்நகு மான்நிரு நூறிலே
ரெத்னவடி வுற்றவிறசூலே - நெப்பு நகீம்.

அநுபல்லவி.

பொற்பு வனஞ்சூழ் மதீன மகு பூபெனும்
புண்ய ரின்னமே வரக் காணேனே
நானெப்போ தெரிசனம்.

சரணங்கள்.

க. தாமரைத் தாளே யென்றுந், தஞ்சமென நம்பினேன்
தையலே மையல் சகியா
தாமத மென்னமோ வறியே னுனெடி
சகியின்னமே வரக் காணேனே - எங்கள்ற
சூலின்னமே வரக் காணேனே
நானெப்போ தெரிசனம். (நெப்பு)

உ. முத்தவ தாரரிறை முன்னமயில் வர்னமே
என்னமோ இன்னமே
சித்தமென் றனக்கே யிரங்கி யாளவரும்
செய்யி தின்னமே வரக் காணேனே - எங்கள்ற
சூலின்னமே வரக் காணேனே (நெப்பு)
நா னெப்போ தெரிசனம்.

ங. எத்தனை பேர்க ளிருந் தென்ன பல னென்னமே
எனக்கா ரருள் புரிவார்
சித்தமென் றனக்கே யிரங்கி யாளவரும்
செய்யி தின்னமே வரக் காணேனே - எங்கள்ற
சூலின்னமே வரக் காணேனே (நெப்பு)
நானெப்போ தெரிசனம்.

ச. சற்குண சந்தரிறை தர்மதுரை யப்துல்லா
தந்தருளு மெந்தன்மகு பூபே
மக்கநக ருக்கே யரச ராஜர்புகழ்

மன்னரின்ன மேவரக் காணேனே - எங்கள்ற
சூலின்ன மேவரக் காணேனே
நானென்ப்போ தெரிசனம். (றெப்பு)

முற்றிற்று.

கீர்த்தநம்-௩-ம்-கமாஸ்-ஆதி தாளம்.

பல்லவி.

வாரிச விகசித கமல பதா - வரிசை தருமுரிசை
வாரிச விகசித கமல பதா.

அநுபல்லவி.

பார வகில புவலோக முழுதுமதி
கார ராஜபரி பூரண மகஸ்தனி. (வாரிச)

சரணங்கள்.

௧. புவன சுவனபதி புளகித முறும் நவ மணியா - தூயா
பூதவ னொலிநத லேயதி காரப தங்கா
சுவன தவனமறப் பருவமிரு மருகவா - ரீ
கால காலமு மதிதிய வதிஜெய. (வாரிச)

௨. பானு கிரணசத கோடியினு மதிக தேகா - வாகா
பாகத மொழியொடு வானவர் மொழிதெரியூகா
ஆனு கதிசுசல சருவ கரியவுமி
மூாதி யந்தமிலி யோனொலி யாகிய. (வாரிச)

௩. மேன்மை பெருகுமகபி விடை கொடை கடவிய வாயா - தாயா
மேதினி யதிபதி நாடிய வினைபுரி நேயா
நோன்மை பெருகு மறி வுவமைபி லுமைவிட
நூறு கோடிவொலி கூறினும் நிகரிட. (வாரிச)

௪. திவ்ய மதுரமணி திவமணி திருநபி பேரா, சீரா
செய்யிது ஹசன்மர் புவ்யி வந்திடுமக மோரா
நவ்ய துரை யப்துல்லா நகுமணி பெறுந்தவ ரீ
நாக ரீகமணி யபல்ஹசன் ஷாதிலி. (வாரிச)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-செஞ்சுருட்டி-சாப்பு தாளம்.

பல்லவி

அனுக் கிரேகந் தாவர, மனக்குறை யேதையா.

அநுபல்லவி.

எனக்காரும் அருள் தாரும், இகத்திலப்துல் காதிறே.(அனுக்)

சரணங்கள்.

க. வஞ்சியாசை யால்மனது வாடிமெலி யாமலே
அஞ்சலஞ்ச லென்றுஆளும், அப்துல் காதிறு சாகிபே.(அனுக்)

உ. தக்க கலிமா மீறவுந் தங்கள்புகழ் கூறவும்
ஸக்குறத்தில் நீருதவி, தாருமப்துல் காதிறே. (அனுக்)

௩. சதுமறை செறிபகு, தாதபூசா லீகுசேய்
அதிபதி யெனும்கௌதுல், லகுலமப்துல் காதிறே. (அனுக்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-காம்போதி-சாப்பு தாளம்.

பல்லவி.

என்போற் கொத்த பாவிக்கி - டேற்றந்தர் தாள்வது நீரையா
ஐயா, மெய்யா - யிடேற்றந்தர், தாள்வதும் நீரையா.

அநுபல்லவி.

பொன்பூத்த மக்கா வளர் காவே
புண்ணிய முஸ்த பாவே மறை
நாவே, பொற்பூவே, என்கோவே. (என்போற்)

சரணங்கள்.

க. வல்லோன்குத றத்தினி லூற்றி சிற்றூர்
மயிலா மெகின்மர மூற்றுதித்தார்

சல்லாபம துற்றுனைத் தோரே
சல்லாதமி னெற்றியுற் றோரே - பொன்
மேரே, நயி னூரே, யென் பீரே. (என்போற்)

௨. மானின் பிணைநின் றருள்சுந் தரரே
மதியோடு பகர்ந்த புரந் தரரே
தீனோர் புகழ் கின்றநன் னேயர்
வானோர் மகிழ் கின்றமெய் வாயா - யெம
தாயா, குண நேயா, வருள் தூயா. (என்போற்)

௩. மக்கா அப்துல் லாவருள்புத் திரரே
மருவார் மருமு றெனுமுத் தமரே
தக்கோன் கிருபை பெற்றவுல் லாசா
மிக்கா யெழி லூற்றமிர காசா - நன்
னேசா, புக ழேசா, மக ராஜா. (என்போற்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-சாப்பு தாளம்.

பல்லவி.

நபியே மரு ஷரிலே, தவியா தெனை
ரட்சியும் நபியே.

அநுபல்லவி.

புவியோர் புகழு மக்கா, புரத்துக் கரசாய் வந்த
நபிகள்நா யகமான ஹபீபுழு கம்மதெனும். (நபியே)

சரணங்கள்.

௧. பந்தியந் தியாய் நரரை நிறுத்தியே - உடல்
பதைக்கப் பெருழு தடுக்க வருத்தியே
வெந்து மனுட ரெல்லாம், நொந்து அழும்பொழுது
சொந்த மூடன்லி வாவுல், ஹம்து கிழலிற் சேரும். (நபியே)

௨. அசைந்த நன்மைத் தராசு கனக்கவே - ஆதி
அருளால் முஸ்தகின் பாலங் கடக்கவே
வசந்த மிருதெளகி, வசந்த தெருவிலெனக்
கிசைத்தமா ளிகைதந்து உவந்து அருள்புரியும். (நபியே)

௩. முத்தி னெளிவாய் வாய்ந்த தூதரே • ஒரு
முதலோ னருள்சேர் சது வேதரே
அப்துல் முத்தலி பருள், பெற்ற துரை யப்துல்லா
வெற்றி தனி லுதித்த, வெயினுர் முகம்ம தெனும். (நபியே)

முற்றிற்று.

—:::—

கீர்த்தனம்-௨௰ம்-சங்கரா பரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

பாதார விந்தமலர் தாரும்—என்றன்
பாவ வினை முழுதுந் தீரும்.

அநுபல்லவி.

வேதாந்த நூதாங்கர், வேந்தர் முறுசல் யார்க்கும்
ஆதாரப் பொருளான, ஆதம் ஷபீகுல் லாவே
காத காதமெய் கமழ்கஸ் தூரியும்
ககன முகிலிடு குடையு முத்திரை
சோதி திகழ்தருங் கைறுல் லன்பியா
செய்யிதுல் முறுசலீன்மூ தாதையே. (பாதார)

சரணங்கள்.

௧. இதுரீசு நூகு இபுறுஹீம் • ஹூது
இசுமாயீல் இசுகாக்கு எஃகூபு
மஹ்சீது யூசுபு தாவூது • சுலை
மான்மூசா ஹாறூன் இல்யாசு
அதிஜெய ஸாலீகு சுஅய்பு துல்கிபுல் எசஃ
ஐயூபு லூத்து யூனூசு ஸக்கரிய்யா எஃயா
மதுர யீசா அருமதூட் னபி
மார்கள் நூற்றறு நான்கு ஆயிரம்
துதிக்குந் தகுதியு, மதிக்கு மகிமையுந்
துலங்க இலங்கையிற் பதித்த தாமரைப். (பாதார)

௨. கருணை யபூபக்கர் சித்தீக்கு - நெறி
கமழ்ந் தோங்கு மூபைறு கத்தாபு

மறைபுகழ் காண்குோத்த வுதுமான் - வேங்கை
மயங்கும் வலிமையலி பூமான்

பரிபூ ரணரபி ஆலசு காபுகள்
பரிமள ஹசன் ஹுசைன் தாபிகுத் தாபியீன்

அருமை தீன்வழி வளர்க்கும் சதுஇமாம்
அண்ணல் நெறிநடந், துன் னு மொலிகள்சந்
குருவின் றெளிவுமுத், தொளிவின் மரபினிற்
குதிக்கு மூகியித்தீன் றுதிக்குந் தாயகா. (பாதார)

௩. ஆண்டோன் சொற்படியிசு றூயில் - மண்
ணள்ளி யெடுத்து வந்தார் பூவிற்

றோன்ற மூகம்ம தொளியை வைத்தான் - மனுத்
தோற்றும் வடிவாயுமை யமைத்தான்

ஈன்ற தாய்ஹவ் வாவை யிடது விலாப் புறத்தில்
இசைத்துப் பெண் ரூபமா யிணங்க மணமு டித்தான்

மாண்ட வர்க்கும்பின், வருபவர்க்குமிப்
போதமைந்தவ ரெவர்க்குந் தந்தையே
யீண்டும் பிழைபொறுத் தாளு மனுடரை
யீன்ற ஆதம்பி தாவென் றுயகா. (பாதார)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதி தாளம்.

பல்லவி.

கஞ்ச மலர்ப்பொற் பாதம்---நெஞ்சினில் வைத்தேன்
காட்சிதர வரவேற மோக்ஷசம் பெறவே யுங்கள்.

அநுபல்லவி.

மூன்சம ரான பதுறில்---அபூஜகில்
முடித்துக் கள் பட்டவெதி, ரொருபிடி மணல்விடுங்
கடிகம முடியிணை தருமூகம் மதே யுங்கள். (கஞ்ச)

சரணங்கள்.

க. அஞ்சுமோர் நாறு மறியேன் - அன்னை தந்தைய
ரறிவின் படி நடவா, லெவறியன் சின்னஞ் சிறியன்
செஞ்சில் விரதங் குறியேன் - நெடுங்கண் மாதர்
நிலையுஞ் சிலையு முலை, மலையுங் கண்டு நெடுநாள்
மயக்கி மதிவே றுனேன் - மகிழ்வுறவே
மறக்கப் படுத்துமுங்கள், பறக்கத்தினாலே
மாயமி தற்கொரு, பாயமெ னக் கிலையே - கரம்பிடித்தேன்
ஆதர வாகிய காதரே நானுட்
காதவ னாகிலும் மாதவ மேபுரி. (கஞ்ச)

உ. வீரணத் தரசர் கேட்க அம வாசியில்
வரு மிருளை யகற்றி, மரு ளறவே திருத்திப்
பூரண மதியை வருத்திக், குப்பாயத் தாக்குட்
புகுத்திய ரண்டுபங்காய் வகுத்தீ ருலகறிய
ஆரணக் கலிமா வோதி - அதபுடனே
ஆதி முதலாய்வரு மாதவ ரின் முன்னமே
அந்தர மேவிப்பொ, ருந்திய சந்திரனும் - அறமின்சொல்லால்
ஆல மடங்கலு மாள்றகு மான்றா
தருமது நபியிவ ரெனவே சுஜூது செய், (கஞ்ச)

ந. ஆதி யொளி விற் பிரித்து - மூத்தா யுதித்து
அனந்தம்வடி வதனுற், சிறந்த எக்கின் மரத்திற்
சாதி மயிலா யிருந்து - தவமுயர்ந்து
சகல் கலையறிவு தருமக்க மாநகர் வாழ்
அப்துல்லா மக வானீர் - குபிர றுத்துத்
தானைமன் னவர் சூழ, வானவர் வந்துதொழ
அந்தர மாமுகில், வந்துக விந்த நிழல - மனமகிழ
ஜெகமதி லவித்தம்பி, பவமது அகலவே
தவமது புரிகுனீ, ரருமது நபியுங்கள். (கஞ்ச)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-ஆனந்த பைரவி-ஏக தாளம்

பல்லவி.

அருளையா சற்றே, கிருபை, செய்யு மையா.

அநுபல்லவி.

மருவளர் சோலைத், திருமதி லவாழ்
மந்தாகலீந், தந்தா ளிணை, தந்தாள்
சரிகம பதநித மரு. (ஐயா)

சரணங்கள்.

௧. பதந்துணை தாரும், நிதந்துயர் தீரும்
பண்டே துதி, கொண்டே னிதம்
நின்றேன் - சரிகம பதநிதமரு. (ஐயா)

௨. மறைநெறி நீதா, இறைதிருத் தூதா
வந்தே துதி, தந்தே நீரு
வந்தே - சரிகம பதநித மரு. (ஐயா)

௩. மக்க நகர் வாழ்வே, மெய்க்கு மகு பூபே
மன்ன ரபுதுல்லா வருள்
கண்ணே - சரிகம பதநிதமரு. (ஐயா)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-நீலாம்புரி-ஏக தாளம்.

பல்லவி.

இதுவே சமையபத்தி, லெழுந்தருளியே
எனக்கொரு காட்சி தாருமே.

அநுபல்லவி.

மருமலர்த் தடைக்கீழ்வீழ்ந்து பகுதா துமு கிபித்தேனே
மையல் மிகவே மிஞ்சும், பையல் தனக்கிரங்கி. (இதுவே)

சரணங்கள்.

௧. ஆசை வெள்ளமே மீறி, யலையாக வோடுது
அல்லும் பகலு மென்ற, னகமுமைத் தேடுது

மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

நேச முறக் கத்திலும், நினைவாக நாடுது
நினைத்து நினைத் தடிமை, நெஞ்செல்லாம் வாடுது

நிருபர்க் கரசர் முடி யிடறு முழுது யார்த்
மூருன்மை யுடனே கொடுமுங்க ளடிமையென்று. (இதுவே)

உ. கங்கு லெனத் திமொரு, யுகமாகத் தோணுது
கடலு மலையும் வெகு, கனமாக நீணுது
உங்கள் சுதத்தை மனத், தோர்மையாய் வேணுது
உடனே வருவீ ரென் வுறுதியாய்க் காணுது.

உமது பய லெனக்கு, உடனே மனதிரங்கி
யுண்மை யுடனே நீரவந், துறுதி தருவ தற்கு. (இதுவே)

ந. தஞ்சும் பருதா தென்னுந், தகும்பதி யூரரே
தவஞ்சே ரபூசாலிகு, தந்தரு ளும்பா லரே
இடஞ்சொல் மெய்யா ராய்ந்த, இன்சொலி னேலரே
எங்கள்மு கியித்தீனெனு, மினிபகற் பேரரே

எழில்சேர் நாகு நயினர், லெப்பையாலி மவர்தம்
இருதய மீதி லென்று, மிருக்கும் கிருபையோரே. (இதுவே)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம் நீலாம்புரி-ஏக தாளம்.

பல்லவி.

தருணந் தருண மெனதையா—நாளுந்
தஞ்ச முமை நம்பினேன் மெய்யா.

அநுபல்லவி.

அருண் ஒளிபோ லிந்த, அகிலமெல் லாம்வி ளங்கும்
அருள் சாகிபெனும், ஆண்டகை யேயிது. (தருணந்)

சரணங்கள்.

க. தேசம் புகழுமக ராசப்ர காசர் நீரே
தேவரீ ரெனக்கருள், செய்யுமே லான பீரே
மோச முறும் பிணியால், மூழ்கிக் கிடந்தும் பாதம்
முடிகிவக் தேனுந்த, னடிமை யெனைநீ ராளத். (தருணந்)

உ. பையல் மிகவே நொந்து, பரதவிர்த் தேமெலிந்து
ஐயம் முறும் பிணியா, லழுதழு தேகரைந்து
வெய்ய கடுந்துயரு, வேதனை தீர வும்மை
வேண்டி வந்தே னென்னை, யாண்டருளவே யிது. (தருணம்)

ந. பொற்பு மிகும் வகுதை, புரந்தர சானுங் கோவே
புண்ணிய ரிசுமாயீல், புதல்வராய் வந்த தேவே.
சற்குணமான வெங்கள், வைகொலியே சதக்கைச்
சார்ந்த பிணி யகற்றுஞ், சஞ்சீவி யேயிது. (தருணம்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-ரூபக தாளம்.

பல்லவி.

பாருங் கண்ணு லெனக் கார் புகழ் குருவே
பாருங் கண்ணால்.

அநுபல்லவி

காரு மேன்மேல் ஜெயகற் பக தருவே. (பாருங்)

சரணங்கள்.

க. நாத ரே நம்பதம் நம்பினே னடிமை
ஆத ரித்தே யெனக் கன்பு வைத் தாளுமே. (பாருங்)

உ. தேவர்கள் துதியதி ஜெய பதியே
கோவே யெனக் கிப்போ கொடுஞ் செய்நிதியே. (பாருங்)

ந. செதிஹுசன் குத்தா சருள் ஹமீ தொலியே
நிதங் கலிபா மௌலா சகிபி னிதியே. (பாருங்)

ச. கார்முகிற் கோலைசூழ் நாகைவாழ் பதியே
காரண ரேஹமீ தொலி யதி பதியே.

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ரூபக தாளம்.

பல்லவி.

அடைந்தே னடைந்தே னையா—பூ
வனைத்து மனத்தில், நினைத்த தனத்தா. (னடைந்)

அநுபல்லவி.

அடைந்தே னையா மாதவத் திதியா
அம்பர்க ளிம்பர்க ளும்பர்தொ ழும்பதம். (அடைந்)

சரணங்கள்.

க. அஞ்சக வஞ்சக நெஞ்சக னெஞ்செய் குவேன்
பயக்கத்தோ டிகத்தின்
துஞ்சா ருஞ்சம யஞ்செய கஞ்சமொ
டுஞ்சம ரஞ்சேரா துஞ்சவ ருஞ்சரண். (அடைந்)

உ. நற்றவ அத்தனெ ருத்தனவ த்தூதரே
சதத்தைப்ப டாகத்தின்
நற்றிய சிற்றடி மைத்துய ரத்தைய
கற்றுக சித்திர முத்திரைப் பொற்றாள். (அடைந்)

ங. மக்கந கர்க்கதி சொர்க்கந கர்க்கதிபா
அப்துல்லா பெற்றவா
துக்கம றக்கரு ணைக்கவி ஞர்க்கொரு
டக்கவா பொற்கம லக்கரு ணைக்கதம். (அடைந்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம் காம்போதி-ஆதி தாளம்.

பல்லவி.

உல்லாச மான நயமே—அதிக
நல்லோர் புகழ்சௌ பியமே.

அநுபல்லவி.

வல்லோ னெலி சதக்கத், துல்லா ஷ்றகின் முறை
யெல்லாம் சரிசெய்பிச, கில்லாத விதமிகு. (உல்லாச

சரணங்கள்.

க. மூர்த்து மறையு ணார்ந்து, கலைதெ ளிந்து இறைமி
குந்து எனையு வந்து, அருள்பு ரிந்து ரட்சிப்பீர்
தானேசி மானே புதி, யோனேம ருக, கோனே. (உல்லாச)

உ. கோது, குழலின் வேது, வரவின், பூது, மெய்யெலாவ்
வாதி, தயவென் மீது, செய்யுமிப், போது இதயத்
தேது, புகாது கொடுந், தீது, வரா மூது. (உல்லாச)

௩. சிரா, வருதை யூரா, சுலைமா னேரா, அருள்கு
மாரா, அறிவு தாரா, கனவெய் யாரா ஹபிபுமு
கம்மது, வெண்மை யுறுஞ், செம்மதி நன்மைபெற. (உல்லாச

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-காபி ஆதி தாளம்.

பல்லவி.

செஞ்சரணந்தஞ்சமருள், செய்குதா வூதொலியே
தினந் தினமு மனந் தனிலே தேடினேனுன் வாடி.

அநுபல்லவி.

கொஞ்சுகிளி யஞ்சு மொழி, வஞ்சியர்க ளனமென்வே
குலவு மொரு, கிலவு மின்னுள்,
குலமூற்றவ, நவரத்தின நலமூற்றிட, வரும் நற்றுரை. (செஞ்)

சரணங்கள்.

க. மங்கையர்கள் விழியுமலுள், தங்கையுடன் றொடுத்து
வள்ளலிற குல்சரண, முள்ளமதிற் றரித்து
பங்கபிணி யகற்று மெங்கள், சிங்கமெனுந் திறலொலியே
பாவியென்னை, மேவிச்சொர்னப்
பதியுற்றிட, மதிபெற்றிட, இதயத்தினில், வரும் நற்றுரை. ()

உ. ஜெகம்வி ளங்கும் புகழுடைய, செழுமலேகண் மணியே
திங்களொளி மங்கிடச்செய், செங்கதிர்வா ளொளியே
அகமுழங்குங் கலிமானவச், செகமுழங்கும் வழியாக

ஆதாரஞ் செயு மரசே
யதிசுந்தர, மதிதந்திர, விதியின்படி, நிதிதந்திடு. (செஞ்)

ரு. விம்பகனும் ஷாம்பன்னகர், வேந்தரேநல் லதபாய்
வேண்டும்நயி னுமதுவ்வ, யாண்டருளுங் குத்துயே
பாம்பதுபோ லிடுமனச், சோம்புதலை நீக்கும்சொர்ன
பாக்கியமே யோக்கியமே
படிமீதினிற், கொடிமீறிய, நேடியோனரு, ளியநாதரே.(செஞ்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

எப்படி வட்டி வாங்கு வாயெடா - கெட்ட துரோகியே
ஈமா னில்லையோ - இறைக் - கென்சொல் வாயெடா.

அநுபல்லவி.

இப்படியோவுன்றன் மனது பாவி
இபுலீசு கோழன், அபுஜகில் போலவே
குப்பென் றெரிவாய், நரகிற் பணிதேளுங்
கொட்டுமே, கெட்டாய், கெட்ட துரோகியே. (எப்படி)

சரணங்கள்.

க. அண்ணல்மு கம்மது, பொன்னடியை மறந்தாய்
அமரோர்கள் துதிக்கும்
அரம்பைய ராசீர் வதிக்கும்பொன்னு டிமுந்தாய்
முன்னவன் விதிவழி, தன்னை மறந்தாயே
மூதறி வாளர் முனியத் திரிந்தாயே
பின்னும் நபிசனிபக் கேறத்து ணிந்தாயே
லெட்டாதிரு, கெட்டாய், கெட்ட, துரோகியே. (எப்படி)

உ. பஞ்ச பொறிகளுக் கஞ்சாம லேநடந்தா, யிபுலீசைத் தொடர்ந்
(தாய்
பாதகா நல்வழிக் காகா, முள்ளாய்ப் பிறந்தாய்
அஞ்சுமோ ராறையும், நெஞ்சில் மறந் தாயே
ஆகாத மூதேவி, யாகப் பிறந்தாயே
இஞ்சொ லில்லாது, நகைத்தாய் சபைதனி
லெட்டாதிரு, கெட்டாய், கெட்ட துரோகியே. (எப்படி)

௩. பொங்குங் கற்பக நீழற், செல்ல லாமோ மகு மூத்த்வனி
பொருந்தவே கண்ணுற், நெரிசிக்கப் போமோ
சங்கை யுடன் பாலந் தன்னிற் செல்ல லாமோ
சாஹா னிற்குல் ஷபா அத், துனக் காமோ
எல்லர் முனக்குக், குழித்துணை யோபாவி
யெட்டா திரு, கெட்டாய், கெட்ட துரோகிநீ. (எப்படி)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ௰ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

திருப்பதந் தெரிசனை தாரும்—படி யேழுங் கடந்த
திருப்பதந் தெரிசனை தாரும்.

அநுபல்லவி.

மருப் பெருஞ் சோலை சூழு - மதினமா நகரில் வாழும்
வாசம்நறை வீசும்புய, வள்ளலே நபியுல்லாவே. (திருப்)

சரணங்கள்.

௧. முனமிறை மனமுவந் தாளும்
முத்தா யுதித்த முதல்வரே, பதவி நாதரே
கனகன மணியென் றுதி, ஹலறத்தி லிருந்துபல்
கருவதா யுறைந்த அபல், காசிமே, யாசினே. திருப்)

௨. சதியினன் கெதியில் லாதவன், இப்லீசு மாய
வடிலமி லலையு மேழையான்
பதியிலென் றுயர வினைப், பவ மகலக் கமலமலர்
பாதபங் கயமருள்மு, கம்மது நபியுல் லாவே. (திருப்)

௩. அப்துல்முத் தலிபு பேரரே
ஹாஷீம் கிளைவா, முப்துல்லா சுபுத்ர நீதரே
முத்துநவ ரத்னமணி, மோலியுறுமன் னவர்பணியு
முண்டக சரணமலர்மு, கம்மது நபியுல் லாவே. (திருப்)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்த பைரவி-ஆதி தாளம்.

பல்லவி.

அல்வாஹி திஸ்ஸமதி, றெப்பியா ன்வனே—எம்
அரிய பெரிய நாயனே.

அநுபல்லவி.

இல்மான்தி லடங்கா, இறையே மறைப் பொருளே
என்றுமழி யானேயா, அறுஹுமற் றுஹிமீனே. (அல்வாஹி)

சரணங்கள்.

௧. படியில் மணலெடுத்துப், பயஹாம்ப ராதகபி
யுடலைக் குகை பிடித்து, புயிருணவு மளித்து
திடமு மனத்தறிவும், செயல் வணக்கமு மீந்து
வடிவா யவர் மிகமாய், மனுடரை யமைத்தோனே. (அல்வா)

௨. துவர்க்க நவீ தில்லாத், துய்யவல் லவனே யென்
பவக் கடல் பொறுத்து நற், பதவி யெனத் கருள்வாய்
சபைக்கு ளதிக மகுஷர், தனியெல்லவை யும்திறுத்திப்
புவிக்குள் நன்மை தீமையைப்,பொருந்தக் கேட்குமென்கோனே

௩. நாலத் தடிமை சொல்லுந், தமிழின் குறிப்பறியேன்
வால கவியெனவே, வணங்காப் பெரும்பாவி நான்
நாலு மறையுந் தேறு, நாயடி யேனெனக்கு
ஆல நஷிஷபாஅத், தருள்வா யாறப்பி லாலி. (அல்வா)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-குறிஞ்சி-திரிபுடை- தாளம்.

பல்லவி.

ஆளும்நபி நாதரே, யெனை, யாளும்நபி நாதரே
ஆதி யருள் தூதரேயென்னை, யாளும்நபி நாதரே.

அநுபல்லவி.

நாளும் புகழு மேனாகோர்வே—என்
னுளுங் குணமா மகுபூபே
ஆளுமே லானஹபீபே. (ஆளும்நபி)

சரணங்கள்.

க. வானின்மதி போற்றவே, வரிசைமன்ன ரேத்தவே
ஆனபுகழ் தோற்றவேவர் - தாளும்நபி நாதரே. (ஆளும்நபி)

உ. வையமாதர் செய்யுஞ் சூது, மாற்றி வைக்க வேகூடாது
ஐயமற வேயிப்போது - ஆளும்நபி நாதரே. (ஆளும்நபி)

ந. வம்பனிபு லீசனகே, வாதுசெய்வ ஞேவென் திரேகத்
துன்பமெல்லா மோடிப் போக - ஆளும்நபி நாதரே. (ஆளும்நபி)

ச. மக்க வாழுங் கற்ப காவே, மகிழுமப்துல் லாமகவே
ஹக்கனருள் முஸ்த பாவே - ஆளும்நபி நாதரே. (ஆளும்நபி)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-சங்கராபரணம்-சாப்பு தாளம்.

பல்லவி.

கொண்டது மெய்யே—அருள்பெறக்
கொண்டது மெய்யே
கொண்டது மெய்யே—நினைவாய்க்
கொண்டது மெய்யே.

அநுபல்லவி.

கொண்டது மெய்யே மனதினில் சாகிபைக்
கோதற ஆதார நீதி யருள்பெறக். (கொண்டது)

சரணங்கள்.

க. பஞ்ச புலனிக ளடங்கி யொடுங்கப்
பராபர சோதி, சராசர மாமுதற்
றஞ்சமல் லாதிறை வேறில்லை யென்றிவர்
தன்னை யறியும்படி, மன்னை யறிந்திட
அஞ்சர ஞானமு, ணர்ந்துதெ ளிந்தவ
ராதிமு கம்மதை, யோதிவ ருங்குரு
செஞ்சர ணந்துணை, ஹாஜி யுமறெங்கள்
செய்கொலி சாகிபை, ஏவ்கலி ஞனிதம். (கொண்டது)

உ. காவலந் தீவு மருமுத பந்தரும்
நாடி யச்சக்கரை, தேடிவிட் டப்புறங்

கோவள மாதர் தெரிசித் தகன்றபின்
கூடிய மாதவ ரோடுரை யாமலே

ஆவல தாய்மலை, யீதில் நடந்தங்
கதிஜயங் கண்டு, கதிபெற மீண்டவர்
பூவல ராகிய, செய்யிதுமு கம்மது
புகாரி யருள்சேர், மகாதவ ரானந்தம். (கொண்டது)

௩. சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சாகர மானமெய் யாகமதால்நிதம்
ஆலோச னையல்லால், வேறொரு நாட்டமில்
லாதி யருள்பெறும், வேதியர் நீதியர்

பூலோக வாழ்வை, யகத்தி லகற்றும்
புரந்தர மேவுந், தராதர மாமுதல்
நாலா கலைகள்தெ, ரிந்தபிர தாபர்முன்
னாட்டம தாயருள், தேட்ட முடனேயான். (கொண்டது)

௪. வாகுறு தேன்சொரி, பூஞ்சோலை சூழும்
வந்தையில் வாழுமி, குதய வாளர்நற்
சேகப்துல் காதிறு, லெப்பை யாலீமருள்
சேயராய் வந்திடு, நாயக மாமணி

சீகர வாவிகண், ஊரினில் மேவிய
செய்யிதுமு கம்மது, புகாரி யருள்சேரும்
சாகர மானவு மறுலெப்பை யாலீம்
சாகி பவர்பத மாக மகிழ்ந்திடக். (கொண்டது)

முற்றிற்று.

கீர்த்தனம்-௩௰-ம்-பைரவி-ரூபக தாளம்.

பல்லவி.

மாமயில் வடிவாய், வரும்வேத தாதா
மாமயில் வடிவாய்.

அநுபல்லவி.

ஆமினா மகவெனும் நாதா, ஆதிதன் தூதா. (மாமயில்

சரணங்கள்.

௧. ஈரேழு பதினாலு லோகம், எவ்வுயிரு மாகி இலங்குது தேகம்
நீரேயல்லா திலுமன-பாகம், நெறிநில நேர்மைபெற்ற நீதா.
ஆதிதன் றாதா. (மாமயில்)

௨. காரணந்தரும்பெருங்கடலே, தல்க்குகட்குயிரோயுயிரினுக்குடலே
ஆரண மதிதரு மிடலே, யடிமைகள் மீதுபச்சமறவாத
ஆதிதன் றாதா. (மாமயில்)

௩. அப்துல்லா தருதிரு மகவே, ஆலமுறு வாஹா மான வாழ்வே
முஸ்தபா வெனுமகு ரூபே, முஅசலி மணவர்க்கும் நாதா
ஆதிதன் றாதா. (மாமயில்).

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-முகாரி-ஆதி தாளம்.

பல்லவி.

நித்யம் நாலுங்கள் மலர்ப்பதந் தேடி
நினைந் துவுருகு வேனே.

அநுபல்லவி

எத்திசை யும்புகழு மாமக்க நகர் வாழும்
இறையவ னருள்மிக, வளர்தருங் காவே
நறைகம ழுகுமது நபிமுஸ்த பாவே. (நித்யம்)

சரணங்கள்.

௧. சிந்த மதிநுமது பொற்பத மேபுகழ்ந்தேன்
தேனூர் குங்குமப் புயத் தோரே - ஒவகு
தேட்டமு டனடிமை, காட்டம்வைத் ததினாலே
தினமுமென் றனைரட்சிப் பீரே
சத்த னுவந்ததிருத் தூதே - யுகங்கள்
காலிரண்டு மென்றன், கண்ணில் வைத்தேன்மகு ரூதே
மெத்தப் பவமும் பொய்யும், நித்தமுங் குலைகள் செய்யும்
எத்தனை குற்றஞ்செய், தாலும்பொறுத்திடும்
நற்றவு மிகவுமே, பெற்றிடும் நாதரே. (நித்யம்

௨. பொங்குங் கலை பூரணத், திங்கள் தனை யழைத்தே
புகழ் சேரும் ஜெயநவ நீதரே -- குபிர்
பொல்லா தபுஜகிலை, மல்லாற் பொருதமகு
மூதே புறக்கான் சது வேதரே
மங்குல் குடை நிழற்று மேரே - ஒரு
மால்வரை மீதில்நின் றுக் கேட்கவு மீன்கூற
அங்கொரு பிணைதான் மெள்ளச்
சங்கையர் யழைத்துச் சொல்ல
அங்கியின் மூக்கிடும், விங்குபி ரன்றனை
மங்கிடச் செய்தப்ர, சங்கவுல் லாசரே. (நித்யம்)

௩. செய்ய மலர் வாவிசூ, ழுய்யு மக்கா நகர்வாழ்
செம்ம லப்துல் லாதந்த பாலரே - வெகு
தீர்க்க முடனிசுலா, மார்க்கந் தனி லழைத்துச்
செங்கோல் செலுத்து மனு கூலரே
வையக முந்துதிக்குங் கோவே - திரு
மானுமி ருருவந்த வள்ளல்முஸ்த் பாவே
ஐயரே கருணைக்கண் பாரும்
மனத்துயர் தீரும்
பையரவும்மணி யும்பதமே அருள்
செய்யிதே திருவளர், மெய்யிற சூலே. (நித்யம்)

முற்றிற்று.

தனது கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஆதி தாளம்.

பல்லவி.

தாசீம் நின்னுமம் புகழ்ந்திடந் - தாச னருளையா.

அநுபல்லவி.

தேச பிரப்ல ராஜ ரதிதொழுந்
தேசிகரே, வீசும்பிர, காச வசி காமுறும். (தாசீம்)

சரணங்கள்.

௧. காசினி யினுமை நேச முறமெனைக், காத்து அருளையா
ஆசி சொலி நய, வாசி பெறுமவர்க்
கம்முனுய ரம்மகற்றும், செம்மல்யாமு கம்மதெனும். (தாசீம்)

௨. தீட்சை யீனிலுயர், மோட்ச மருளிய திவ்விய கருணையா
நீட்சி யுடல்தீ, மீட்சி பெறவருள்
நிற்குண நிதம் பெருகும், சற்குணவுற் பனமருள். (தாசீம்)

௩. வானி னினனைத, மானவரின் முனம் வகிர்ந் தழகுறு கையா
ஆனியுமும் மபி, மானீம் பெறவுமை
யன்றிவரு தொண்டர்களுக், கென்றும்நய நன்றிதரும். (தாசீம்)

௪. காவு செறிபுமக்ஷ காவி ன்புதல்லா கவி னிறைந்திடு பாலா
தாவகற்று மூஸ்த, பாவே நிகரமுங்
தற்பாறு மொப்பறவி, யப்புட னிமைத் தருளும். (தாகீம்)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம் இங்கிலீஷ் மெட்டு.

பல்லவி.

பாத சாரிகா பமாகெரி சதா
பம்மகாரி பரிசநி சநிதா
சரிபப்ப பதப்ப மம்ம மகம கெக்க கெமகரீ
சாரி காமப் பாம சரிசரி சநிகா.

சரணுபதம்.

௧. ஆளு விளையா, ஆதாரம் நீளையா
ஆதரித் தருள் செய் வீளையா
அக ளங்க முறுபொன், னங்கப்பரிம
ளங்கமள் தூயா
ஆவலாகுதேவர்; தாளு வீளையா
சரிசஸ்ஸ சநித மம்ம மகம ரிக்க ரிக்கரிசா
சாரி காமப்பாம சரிசரி சநிதா. (பாதசாரிகா)

௨. ஆதி தூதரே, அலங் கார வேதரே
ஆதுலர்க் கருளு தாரரே
அழகஞ் சிதமுறு, கஞ்சவடிபி
றைஞ்ச வேயருள் வீர்
ஆரா தாரமேதங் தாளவே வருவீர்

சஅஉ மதுரவாக்கிய கீர்த்தன ரஞ்சிதம்.

சரிசஸ்ஸ சநித மம்ம மகம ரிக்கரிக் கரிசா
சாரி கமப்பாம சரிசரி சநிதா. (பாதசாரிகா)

ங. மாப்ர காசரே, மதினாவின் வாசரே
மகிபுகழ்வி மான ராஜரே
மறை மக்கள் மொழி யெங்கும் பிறடல்
யங்கோரும் போசா
மாலா னேனென்னை மன்றாடிடும் நேசா
சரிசஸ்ஸ சநித மம்ம மகம ரிக்க ரிக்கரிசா
சாரி காம பாம சரிசரி சநிதா. (பாதசாரிகா)

ச. மக்கா வூரரே, மருமூது நாதரே
மன்னப் துல்லா மகிழ்கு மாரரே
மனமெய்த்து எனதி டத்தி லுறுவி
னைத்துட ரறவே
மாட்சி தந்தருளு, மனமகி ழ்ந்தவே
சரிசஸ்ஸ சநித மம்ம மகம ரிக்க ரிக்கரிசா
சாரி காம பாம சரிசரி சநிதா. (பாதசாரிகா)

முற்றிற்று.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதி தாளம்.

பல்லவி.

என்னுசை தீர்வதற்கும், பொன்னார் சரணிணைதந்
திச்சணமே ஆளு மையா.

அநுபல்லவி.

கன்னீர்த் தடஞ்செறியுங், கன்னல் விளைமதினத்
தண்ண லப்துல்லா தரும், புண்ய தயா பரா
புகழ் மிகு மருத வசன மறை யொழுகு
மினிய புகழ் பெருகு, மெனித மதியி னிறை
பூண்ட பொற்பத, மேயருள் வீரரு
ளோர்க்கு மற்புத, மேகமி நாதரே

256   59

தாம் தகுதஜெணு, தீம் திருதஜெணு
திங்தெரி காதரி நாதரி
திரி தில்லானத், தில்லானத் தில்லாணு
தரிதில் லானத்தெய், தரிகிட தோமென.   (என்னுசை)

சரணங்கள்.

௧. சீத மதி யதனை, நீதத் துட னழைத்து
வேத கலை பயிற்றும், போத கிருபை முற்றும்
தினமப்படி யேவர வேசெயும்
கனவுற்பன மேயருள் வீரருள்
சேர்ந்த சற்குரு வேகரு ணாகர
ஏந்த லற்புத மேமகு மூதரே - தாம்.   (என்னுசை)

௨. கன்னு சுடையீ வினை, தன்னுல் மனமுருகிப்
பன்னுள் மயல்பெருகி, யென்னக மேதிருகிப்
பருவத்தினி லேமன மானது
உருகித் தனி யேதுய ராகிய
பாரச்சுமை யால்மனம் வாடுவ
னேசற்குண ராஜவ ஜீகர - தாம்.   (என்னுசை)

௩. மக்க நகருல் லாசர், மிக்க அப் துல்லா நேசர்
தக்க புகழ்வி லாசர், மெய்க்கும் பிரகாச ராஜர்
சலசப் பதமே, தினமே தொழ
கலசற் குணமே, யருள்வீர் தினம்
சார்ந்த சற்குரு வேகுரு காதரே
யேந்த லற்புத மேமகு மூதரே - தாம்.   (என்னுசை)

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-ஹிந்துஸ்தானி-கீரபி-ஆதி தாளம்.

பல்லவி.

பாத தாள் தீரா தேது வாதெடி
பையல் ஸய்யல் கொண்டேனிப் போதெடி
பாத தாள் தரா.

அநுபல்லவி.

காதமா மணத்தோர், கருமுகில் கவித்தோர்
கன்னல் மொழி யாமினூர்தங் தவத்தோர்
மூதறி வுளாத்தோர், முழுமதி யகழத்தோர்
முகம்மதெனுந்திரு நாமத்தோரிரு. (பாததா)

சரணங்கள்.

க. தோகை மயில் ஹலிமா சூகைமுலை யிதமாய்ச்
சுவைத்தருந் தரராஜர் - சொற் கலிமா
மோகம்தா மொருமான், மொழிக்கிட வேடனிமான்
முழக்கத் திடன் கொளச் செய்யுங் கோமானிரு. (பாததா

ாதவப்ர காசர், மக்கம் வாழுல் லாசர்
ன்னரப் துல்லாதரு மகராஜர்
யின் றாத ருள்கொடை நாதர்
அருமதெனு மெங்கள் மருமுத ரிரு. (பாததா

முற்றிற்று.

கீர்த்தநம்-இ-ம்-சங்கரா பரணம்-ஆதி தாளம்.

பல்லவி.

மானே யென்னெடி சும்ம வாடி - எங்கள்
வள்ளல்முத கம்மதனை நாடி.

அநுபல்லவி.

தானவன் திருத்தா தாமெடி - வெகு
சந்தை யாகிய, திங்க ளொளி வெண்திரும
பொங்கு மருமது, தங்கள் பாலிட. (மானே)

சரணங்கள்.

௧. கருவுக்கு ளுருவான காட்சி - திருக்
கமலத்துள் ளுறைகின்ற நேர்ச்சி
வருநூ மூச்சுடரிந்த, மூச்சி - மலர்
வாச மாகிய, நேசராய் வரும்
வள்ளலா மென, துள்ளம் நிறைந்தவர். (மானே

வாசங் கமழுமக ராஜர் - அருள்
வானவர் புகழுமுல் லாசர்
தேசம் புகழும்பிர காசர் - எங்கள்
செய்யி தாகிய, துய்ய மாதவர்
வையம் புகழந்திடு, மையர் பாலிடம். (மானே

௩. மருமலர் சூழுமக் காவை - யாளு
மன்னப் துல் லாபெறுங் கோவை
குருவா கியமறை நாவை - நாமங்
கொண்ட வடிமைய னென்று அருள்செய்வர்
வண்டு கருங்குழற் பெண்டீரே யெடி. (மானே

முற்றிற்று.

மதுரவாக்கிய கீர்த்தனு ரஞ்சிதம்

முற்று முற்றிற்று.

---

257 511 8?:417 N02 120123

காதிரி சென்னை முகம்மதிய்ய புத்தக பரிபாலனத் தலைவர்

காதிரி கண்ணகுமது மகுதூமுகம்மதுப் புலவர்

அவர்களியற்றியது.

இரட்டை யாசிரிய விருத்தம்.

ஆதிரகுமானொளியின் முத்தாகி வித்தாகி
அகிலாண்ட மெங்குமாகி
ஆதநபி முதுகிலாய் மக்கநகர் வாழப்துல்
லாநெற்றி மீதி லொளியாய்
மாதரணி மாதாமி னார்வயிற் றுதிவரும்
வள்ளலிறசூல் கடாட்சம்
மன்னிவளர் மகுதூமு கம்மதென் றோதிடு
மகத்துவ சுயப்ர காசர்.
ஓதுசீர் மதுரவாக்கிய கீர்த்த னாஞ்சி
த்திநெடு முன்னோர்கள் பலபே
ருரைத்துள்ள கீர்த்தனைகள் வண்ணங்க
ளொரு பொருளி னுதவியாலும்
சாதும்கு மூதாரு ளாலும்பகு தாதிவாழ்
தஸ்தக்கீர் முகியித் தீனென்
றுயகர் கடாட்சத்தி னாலுமச் சிட்டுமுடி
வானது தழைக்க மாதே.

முற்றுப் பெற்றது.